
# மீலாத் விழா
# சிறப்பு மலர்

## මීලාද් උළෙල
විශේෂ සංග්‍රහය

**1416**
**1995**




**MAJLISUL ISLAM**
COLLEGE OF EDUCATION
VAVUNIYA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீலாத் விழா
# சிறப்பு மலர்

## 1416
## 1995

# මීලාද් උළෙල

## විශේෂ සංග්‍රහය

# MAJLISUL ISLAM
## COLLEGE OF EDUCATION
## VAVUNIYA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப்பற்றி**

**அல்லாஹ் அருள் மறையாம் திருமறையில்**

*இன்னும் (நபியே) நாம் உம்மை மனிதகுலம் முழுமைக்கும் நன்மாராயனம் கூறுபவராகவும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்பவராகவுமே அன்றி (வேறெவ்வாறும்) அனுப்பவில்லை ஆனால் மனிதர்களில் பெரும்பாலானோர் அறியமாட்டார்கள்.*

*WE HAVE NOT SENT THEE BUT AS A (MESSENGER) TO ALL MANKING, GIVING THEM GLAD TIDINGS, AND WARNING THEM (AGAINST SIN), BUT MOST MEN KNOW NOT*

(34 : 28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விஞ்ஞான தொழில்நுட்ப, மனிதவள அபிவிருத்திப் பிரதி அமைச்சரின் ஆசிச்செய்தி

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்,

வவுனியா கல்வியியற் கல்லூரி முஸ்லிம் ஆசிரிய மாணவர்களின் மஜ்லிஸுல் இஸ்லாம் அமைப்பு இவ்வருட மீலாத் தின விழாவை நடாத்தி மலர் ஒன்றையும் வெளியிட இருப்பதை அறிந்து மகிழ்வடைகிறேன்.

இம் மாணவர்களின் இம் முயற்சிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் வழங்க முன் வந்துள்ள கல்லூரி நிர்வாகிகளையும் குறிப்பாக பீடாதிபதியையும், ஆசிரிய மாணவ, மாணவிகளையும் இவ்வேளையில் நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

இம் மாணவர்களின் இந்நன்முயற்சி சமூகங்களிடையே நல்லுறவையும், சமாதானத்தையும் ஏற்படுத்த வழி வகுக்குமாக இவர்களின் முயற்சி வெற்றி பெற என் நல் ஆசிகள்.

**அல்ஹாஜ் எஸ். எஸ். எம். அபூபக்கர்,**
பிரதி அமைச்சர்,
விஞ்ஞான, தொழிநுட்ப, மனிதவள
அபிவிருத்தி அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "බිස්මිල්ලා හිර්රහ්මානිර් රහීම්"

වවුනියා අධ්‍යාපන විද්‍යා පීඨයේ මුස්ලිම් ගුරු ශිෂ්‍යයන්ගේ මජ්ලිසුල් ඉස්ලාම් නමැති සමිතියෙන් මුහම්මද් නබිතුමාගේ උපන් දිනය සමරන මීලාදුන් නබි උත්සවය පවත්වා එම උත්සවය වෙනුවෙන් සඟරාවක්ද ප්‍රකාශයට පත් කිරීමට සංවිධානය කර තිබීම ගැන දැන ගැනීමෙන් මම ඉමහත් සතුටට පත් වීමි.

මෙම කටයුත්ත සඳහා කැප කිරීමකින් යුතුව ක්‍රියාකරන ශිෂ්‍යයන් හට සියළුම සහයෝගය හා උදව් උපකාර ලබා දීම සඳහා ඉදිරපත් වී සිටින අධ්‍යාපන විද්‍යා පීඨයේ පීඨාධිපති තුමා ඇතුළු නිලධාරීන්ද ගුරු ශිෂ්‍ය ශිෂ්‍යාවන්ද ගැන මම මෙහිලා ප්‍රශංසා කරමි.

ශිෂ්‍ය ශිෂ්‍යාවන්ගේ මෙම ක්‍රියාවලියෙන් අප ජාතීන් අතර සාමය හා සමගිය උදාවේවා ! යි. පතමි.

**අල්හාජ් එස්. එස්. එම්. අබූබකර්,**
නියෝජ්‍ය ඇමති,
විද්‍යා හා තාක්ෂණ මිනිස්
සම්පත් සංවර්ධන අමාත්‍යාංශය.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி

வுவனியா கல்வியியற் கல்லூரியின் மஜ்லிஸுல் இஸ்லாம் மூலமாக அண்ணல் முகம்மது நபி (ஸல்) அவர்களது தினத்தையொட்டியதாக வெளியிடப்படும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இக் கல்லூரியில் இஸ்லாம் இனத்தைச் சார்ந்தவர்கள் மிக மிகக் குறைவு. ஒரு விரிவுரையாளர் ஒரு ஊழியர் இரு ஆசிரிய மாணவர்கள். இந்த நான்கு பேரினதும் ஒன்றினைப்பினாலும் மார்க்கப்பற்றினாலும் இம்மலர் வெளிவருகின்றது. இம்மலர் ஆக்கத்திற்கு வவுனியா நகர் வர்த்தகப் பெருமக்கள், மற்றும் மார்க்க அறிஞர்கள் போன்றோர்கள் ஆதரவாக அமைந்திருந்த போதிலும் இந்நான்கு பேரின் விடாமுயற்சியினையும் நான் பாராட்டுகிறேன். இவர்களது முன்னெடுப்பு இவர்கள் போன்ற ஏனைய எல்லோருக்கும் நல்லதொரு எடுத்துக் காட்டாக இருக்கட்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் இவ்வுலகத்தை இருளின் கொடிய பிடியினின்றும் விடுவித்து ஒளியேற்ற வந்த ஒளிர் ஞாயிறு. அவ் ஒப்பற்ற தினகரன் இஸ்லாமிய நெறி பரந்து செறிந்து வருகின்றது. உண்மையில் இஸ்லாம் நெறியென்பது மனிதன் வாழும் முறைபற்றிக் கூறும் ஒரு சன்மார்க்கம் ஆகும். வறுமை, அறியாமை, பொறாண்மை, சுயமை போன்றவற்றைப் போக்கி, அன்பும், அறனும், பரிவும் தோன்றும் மானுட இனத்தை வளர்த்தெடுக்கும் வழி.

மனித மான்பை வலியுறுத்துகின்ற ஒரு மார்க்கத்தின் ஏற்றத்திற்கும், அதன் நடைமுறை வாழ்க்கைத் தத்துவத்தை தன் வாழ்வில் சாதித்துக் காட்டிய தன்மைக்கும் இறைவனின் இறுதித் தூதரான நபி எல்லோராலும் ஒரு சிறந்த பெரியாராக ஏற்றுக் கொள்ளப்படுகிறார். எனவே மீலாத்துன் நபி போன்ற நிகழ்வுள் வாயிலாக அன்னாரது சிறப்பும் பெருமையும் சீலமும் இன்றும் என்றும் மனித வர்க்கத்தினரால் நினைவு கூர்ந்து நன்னெறிப்பட வேண்டியதொன்றாகும்.

இந் நிலையில் எம் கல்லூரியில் இச் சிறுமொட்டு அரும்பி மலர்கின்றது. இம் மலரின் மணம் கமழ்த்துகின்ற விடயங்கள் இஸ்லாம் மார்க்கத்திற்கு மட்டும் ஏற்றனவல்ல. அவை மனித வர்க்கத்தின் அனைவருக்கும் பொதுவாக அமைந்தவை. அவற்றைப் படித்து பயனும் பலனும் பெற வேண்டியது இக் கல்லூரியின் பிற மதத்தவர் எல்லோருக்கும் பொருத்தமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு பின்னடைவுகள் பிரச்சினைகளிற்கு மத்தியிலும் இவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சியை மீண்டும் குறித்துரைப் பாராட்டுவதோடு மனமார்ந்த நன்றியை இவர்களிற்கும், இவர்களிற்கு ஆதரவாய் இருந்த அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது போன்ற ஆக்கங்கள் மேன்மேலும் தோன்றவும் வளரவும் எல்லாம் வல்ல இறைவன் அருள் பாலிக்க வேண்டும் என்றும் இறைஞ்சுகின்றேன்.

நன்றி.

செ. அழகரெத்தினம்,
பீடாதிபதி,
வவுனியா கல்வியியற் கல்லூரி,
வவுனியா,
1995.08.28.

# පීඨාධිපතිතුමාගේ ශුභාසිංශනය.

වවුනියා අධ්‍යාපන විද්‍යා පීඨයේ මජ්ලිසුල් ඉස්ලාමීය සංගමය නබි තුමාගේ උපන් දින උත්සවය වෙනුවෙන් නිකුත් කරනු ලබන සමරු සංග්‍රහයට පණිවිඩයක් නිකුත් කිරීමට ලැබීම ගැන මම ඉමහත් සතුටට පත් වුනෙමි.

වවුනියා අධ්‍යාපන විද්‍යා පීඨයේ මුස්ලිම් ජාතිකයන් අධ්‍යාපනය ලබන්නේ ඉතාම සුළුතරයකි. කොපමණද? යත් කථිකාචාර්යවරයෙක්, නිලධාරියෙක්, සහ ගුරු ශිෂ්‍යයන් දෙදෙනෙක් පමණකි. මෙම හතර දෙනාගේ එකමුතුකමත්, මුස්ලිම් ආගම තුලින් ලැබෙන පන්නරය නිසාත් මෙවැනි සමරු සංග්‍රහයක් එළිදකින බව මාගේ හැඟීමයි. වවුනියා නගරයේ ව්‍යාපාරික මහතුන්ගේ හා උගතුන්ගේ ධන පරිත්‍යාගයත් මනා මාර්ගෝපදේශකත්වයත් හේතුවෙන් මෙම සුළු පිරිසගේ කර්තව්‍යය සාර්ථක වීම අගය කළ යුතුය. මෙම භාරදූර කර්තව්‍යය අධ්‍යාපන විද්‍යා පීඨයේ ඉගැනුම ලබන අනෙක් පිරිසටද ගතහැකි ආදර්ශයකි.

නබිතුමානෝ අන්ධකාරයේ සිටි ලෝක ජනතාවට ආලෝකය ලබා දුන්හ. මුළු ලෝකයටම ආලෝකය ලබාදෙන හිරුමඩලක් සේ නබි තුමාගේ ධර්මාලෝකය මුළු ලොවටම ශාන්තිය උදා කරන්නකි. ඇත්ත වශයෙන්ම ඉස්ලාම් ධර්මයෙන් අනුබලය ලැබෙන්නේ, පුරුදු පුහුණු කරනුයේ මිනුෂ්‍යයන් මේ ලෝකයේ කොහේ ජීවත් විය යුතුද යන්නය. දුප්පතුන්, නුගතුන්, පමණක් නොව අපරාධකාරුවන්ටද ආදරය අනුකම්පාව ලබා දී සමාජයේ ඔවුනට හිමි තැන සහතික කිරීම තුලින් සමානාත්මතාවය අගය කිරීම ඉස්ලාම් ආගමෙන් ඉගැන්වෙයි.

මිනිසාට උසස් ජීවිත පැවැත්මක් ඇතිකර ගැනීමටත් සමාජයේ යහපත් ලෙස ජීවත් වීමටත් ආදර්ශයෙන් කියා දුන් දෙවියන්ගේ දේව පණිවිඩය ගෙන ආ අවසන් නබි තුමාගේ ඉගැන්වීම හැමෝම පිළිගත්හ.

එමනිසා මිලාදුන් නබි උත්සවයේ වැඩ සටහන් තුලින් නබි තුමාගේ යහපත් ජීවන පැවතුම් හා ඉගැන්වීම් ගැන සිතන්නටත් ඉගෙන ගන්නටත් ඉගෙන ගත් දේ ක්‍රියාවේ යොදවන්නටත් ඒ තුලින් යහපත් සමාජයක් බිහි කිරීමටත් පූර්වාදර්ශයක් ගෙන දෙයි.

මෙවැනි වැඩ සටහන් අප විද්‍යා පීඨය තුළ ඉගෙනුම් ලබන මල් කැකුළුවන් යොවන පිරිසගේ හෙට දිනයේ විකසිත බව කියා පායි. මෙම මල් කළඹක් වන් සමරු සංග්‍රහයේ සුවඳ ඉස්ලාම් ආගමිකයන්ට පමණක් නොව සියළුම ලෝක වාසීන්ට ද ලැබිය හැකිය. ඉස්ලාම් ආගමේ ඉගැන්වීම් අන්‍යාගමිකයන්ටද ඉගෙන ගැනීමෙන් බොහෝ ඵල ප්‍රයෝජන ලැබිය හැකි වන්නේය.

බොහෝ බාධක හමුවේ නොසැලී ඉදිරියට තැබූ පය පසුපසට නොහෙන සාර්ථක නිමාවක් කරා ලඟාවන එම සුළු පිරිසට නැවතත් මගේ සුභ පැතුම් හිමි කරන අතර මෙම සත්කාරයට නොයෙක් අයුරින් උදව් උපකාර කළ සැමට ද මාගේ ස්තූතිය පුද කරනු කැමැත්තෙමි.

මෙවැනි සත් කාර්යයන් නැවත නැවත කිරීමටත් වර්ධනය කර ගැනීමටත් සියල්ලන්ටම දෙවියන්ගේ ආශිර්වාදය ලැබේවා ! කියා පතමි.

ස්තූතියි.

1995. 08. 28.

**එස්. අලගරත්නම්**,
පීඨාධිපති,
වවුනියා අධ්‍යාපන විද්‍යා පීඨය,
වවුනියාව.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமைதி வாழ்க்கைக்கு வழிகாட்டும் விழாவாக மீலாத் விழா அமையட்டும்.

எமது வவுனியா கல்வியியற் கல்லூரியின் வரலாற்றுப் பதிவுகளில் ஒன்றாக அமையப் போகும் மீலாத் விழாச் சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நானும் பங்கு கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பல் மதத்தவர்கள் பயிற்சி பெறும் எமது கல்லூரியில் மிகச் சிறிய அளவில் இருக்கும் இஸ்லாமிய சகோதரர்களின் மிகப் பெரும் முயற்சியாக வெளிவரும் இச் சஞ்சிகை குறித்து நாம் யாவரும் பெருமைப்பட முடியும்.

அண்ணல் நபி அவர்களின் அவதரிப்பு விழா வெறும் விழாவாக அமையாது அவர் காட்டிய வழியில் அமைதி வாழ்விற்கு நாட்டை இட்டுச் செல்ல வேண்டும். என வாழ்த்துகிறேன். விழா ஏற்பாட்டிலும் மலர் வெளியீட்டிலும் முன்னின்று உழைக்கும் யாவரையும் நான் கூடவே வாழ்த்துகிறேன்.

நன்றி.

க. பேர்ணாட்.
விரிவுரையாளர், இணைப்பாளர்
கல்வியியற் கல்லூரி,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සන්සුන් ජීවිතයකට මග පෙන්වන මාර්ගය වන් මීලාද් උළෙල සමරමු.

අප වවුනියා අධ්‍යාපන විද්‍යා පීඨ ඉතිහාසයේ විශේෂ ස්ථානයක් හිමිකර ගන්නා කාර්යයක් වන මෙම සමරු සංග්‍රහයට පණිවිඩයක් නිකුත් කිරීමට ලැබීම භාග්‍යයක් කොට සලකමි.

බහුතර අන්‍යාගමික ගුරු ශිෂ්‍යයන් ඉගෙනුම ලබන මෙම විද්‍යා පීඨයේ සුළු පිරිසක් වූ මුස්ලිම් සහෝදරයන්ගේ මෙම උසස් වැඩ පිළිවෙළ අප සැමෝම අගය කළ යුතු බව මාගේ හැඟීමයි.

නබි තුමාගෙ උපන් දිනය අන් අයගේ උපන් දින සේ උත්සවයක් පවත්වා නිම කරනවාට වඩා නබිතුමාගේ ධර්මය තුළින් යහපත් ජීවන මාර්ගයකට හෙවත් සන්සුන් ජීවිතයකට, මාර්ගයක් ලබා දෙන ඉගැන්වීම් වලට අවධානය යොමුකර වන්නේ නම් වැදගත්ය. මුස්ලිම් සහෝදරයන් ගන්නා මෙම උළෙල විද්‍යා පීඨයේ ඉගෙනුම ලබන ගුරු ශිෂ්‍යයන් තුළින් ජාති, කුළ ආගම් භේද තුරන් කර ජාතික සංවර්ධනයට පදනම දමන්නට සමත්ය.

මෙම උළෙල සංවිධානය කිරීමට මෙන්ම සංග්‍රහය නිකුත් කිරීමට ද නන් අයුරින් සහයෝගය දුන් සැමට මාගේ ස්තූතිය පුද කරමි.

ස්තූතියි.

**කේ. බර්නාඩ්.**
කථිකාචාර්ය
සම්බන්ධීකරණ නිලධාරී,
අධ්‍යාපන විද්‍යා පීඨය,
වවුනියාව.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அண்ணல் நபி காட்டிய வழியில் நாமும் இணைந்து இருப்போம்.

எமது கல்வியியற் கல்லூரியில் மூவினமானவர்களின் பூரணமான ஒத்துழைப்பால் மீலாத் விழா நினைவையொட்டி வெளிவருகின்ற இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

அகிலத்திற்கு அணையா ஒளிவிளக்காய் திகழ இறைவனின் இறுதி நபியாய் வந்து அறியாமை இருளை அகற்றி மாந்தரை சீரிய வாழ்வுக்காய் வழியமைத்தவர். அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வாழ்வில் மனித வாழ்வின் உயரிய பண்புகள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றை அறிந்து செயலாற்றல் மனிதனது கடமை அதற்கு எம்மை நாம் வழியாக்க வேண்டும்.

ஒன்றே குலம் ஒருவனே இறைவன் என்று உரைத்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மனித குல ஒற்றுமைக்கு அரும்பணியாற்றியவர். அவர்களது வழியில் என்றும் நாம் ஒற்றுமையை மையமாக வைத்து வாழ வழி அமைப்போம்.

குறிப்பிட்ட ஒரு சில இஸ்லாமிய மாணவர்களது முயற்சியாய் அமையும் இம் மீலாத் விழாவும் அதனோடு கூடிய மலர் வெளியீட்டிற்கும் பூரண ஆதரவாய் அமைந்த எமது கல்லூரியின் பீடாதிபதி, விரிவுரையாளர் இணைப்பாளர், விரிவுரையாளர்கள், ஆசிரியமாணவர்கள், உத்தியோகஸ்தர்கள், வவுனியா நகர் வர்த்தகர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களும் நன்றிகளும்.

**ஜனாப்: எஸ்.சகாப்டீன்,**
போஷகர்,
மஜ்லிஸுல் இஸ்லாம்,
கல்வியியற் கல்லூரி,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# නබි (සල්) පෙන්වූ මාර්ගයෙන් අපි එකමුතු වෙමු.

අප විද්‍යා පීඨය තුල ඉගෙනුම ලබන ජාතීන් තුනටම අයත් සිසු දරු දැරියන්ගේ එකමුතුකමින්, සහයෝගයෙන් නිකුත්වන සමරු සංග්‍රහයට පණිවිඩයක් නිකුත් කිරීමට ලැබීම ගැන මම ඉමහත් සතුටට පත් වෙමි.

අන්ධකාරයෙන් ගිලී සිටි ලෝක වාසීන්ට ආලෝකය ලබා දී යහපත් ජීවිතයක් ගත කිරීමට මාර්ගය කියා දුන් දෙවියන් ගේ අවසන් දූතයා නබි (සල්) තුමානෝය. නබි තුමාගේ ජීවිතයෙන් මනුෂ්‍යය ජීවිතයට ලබාගත හැකි ආදර්ශයන් රාශියකි. එම ආදර්ශයන් අපගේ ජීවිත තුලට ද එක්කර ගෙන කටයුතු කිරීම නබි (සල්) තුමාට කරන ගෞරවයකි. එම ආදර්ශයන් ඉගෙන ගැනීම මෙන් ක්‍රියාත්මක කිරීමටද පුරුදු පුහුණු විය යුතුය.

මනුෂ්‍යයන් එකම කුලයක වන අතර එකම දෙවි කෙනෙක් තුලින් එකමුතු විය යුතු බවට නබි(සල්) තුමා කළ ඉගැන්වීම තුලින් මනුෂ්‍ය වර්ගයාගේ එකමුතු බවට ලැබෙනේ මනා පිටිවහලකි. එතුමාගේ ඉගැන්වීම් වලට අනුව එකමුතුව සහයෝගයෙන් කටයුතු කිරීමට අපිත් පුරුදු පුහුණු වෙමු.

සළු මුස්ලිම් ගුරු සිසු පිරිසකගේ, මෙම උළෙල සාර්ථක කර ගැනීමටත් සමරු සංග්‍රහය නිකුත් කිරීමටත් සහයෝගය ලබා දුන් පීඨාධිපති තුමාට, සම්බන්ධීකරණ නිලධාරී තුමාට, කථිකාචාර්යවරුන්ට, ගුරු ශිෂ්‍ය ශිෂ්‍යාවන්ට, නිලධාරීන්ට, වවුනියා නගරයේ වෙළෙඳ ව්‍යාපාරිකයන්ට ද මාගේ හද පිරි ස්තුතිය පුද කරමි.

**ජනාබ් එස්. සහබ්දීන්**
අනුශාසක,
මජ්ලිසුල් ඉස්ලාම් සංගමය,
අධ්‍යාපනය විද්‍යා පීඨය,
වවුනියාව.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாந்தி சமாதானம் நிலவ அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வழியில் ஒன்று பட்டு உழைப்போம்

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் ஜனனித்த பொன்னாள் விழாவாக நடை பெறுவது எமது கல்லூரியில் மாத்திரமல்ல உலகமே அவரது சிறப்பினை எடுத்துக் கூறும் நிகழ்ச்சியாகும்.

எமது கல்வியியற் கல்லூரியில் இரண்டாம் முறையாக அண்ணல் நபி (ஸல்) அவர்களுடைய ஜனன விழா நிகழ்ச்சியின் போது வெளிவருகின்ற இம் மீலாத் விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்கி கௌரவப்படுத்தும் "விஞ்ஞான தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்தி பிரதி அமைச்சர்" அல்ஹாஜ் எஸ். எஸ். எம். அபூபக்கர் எமது கல்லூரியின் பீடாதிபதி திருவாளர் எஸ் அழகரெட்ணம் விரிவுரை இணைப்பாளர் திரு. க. பேணாட் எமது மஜ்லி ஸுல் இஸ்லாம் அமைப்பின் போஷகர் எஸ். சகாப்தீன் ஆகியோர் போற்றுதற்குரியவர்கள்.

ஏனைய ஆசிரிய மாணவர்களை விட மிகக் குறைந்த அளவான இஸ்லாமிய ஆசிரிய மாணவர்களைக் கொண்டுள்ள எமது கல்வியியற் கல்லூரியில் எடுக்கும் இவ் விழாவும், விழா மலரும் அனைவருக்கும் அன்பு, கருணை, சமத்துவம் என்பன மேலோங்க வழியாய் அமையட்டும்.

இவ்விழா சிறப்புற இம்மலருக்கு வாழ்த்துச் செய்தி அளிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**எம். மன்சூர் அலி**
தலைவர்.
மஜ்லிஸுல் இஸ்லாம்
கல்வியியற் கல்லூரி,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# මුහම්මදු නබි තුමාගේ ආශීර්වාදයෙන් සාමයෙන් සමගියෙන් එකමුතුවී වැඩ කරමු.

අද දින අප විද්‍යා පීඨයේ දී පමණක් නොව මුළු ලොවම මුහම්මදු නබි තුමාගෙ උපන් දිනය උත්සවශ්‍රියෙන් සමරයි.

අපගේ අධ්‍යාපන විද්‍යා පීඨය දෙවන වරටත් නබි (සල්) තුමාගේ ජන්ම දින උත්සවය නිමිත්තෙන් එළි දක්වන මීලාද් උත්සව සහරාවට පණිවිඩ නිකුත් කළ විද්‍යා හා තාක්ෂණ, මිනිස් සම්පත් සංවර්ධන, නියෝජ්‍ය ඇමති අල්හාජ් එස්. එස්. එම්. අබූබකර් මැතිතුමාත් අප අධ්‍යාපන විද්‍යා පීඨයේ පීඨාධිපති එස්. අලගරත්නම් මහතාත් අප මජ්ලිසුල් ඉස්ලාම් සංගමයේ අනුශාසක එස්. සහබ්දීන් මහතාත් කථිකාචාර්ය සම්බන්ධීකරණ නිලධාරී කේ. බර්නාඩ් මහතාත් යන මහතුන්ට ද මෙම අවස්ථාවේදි අපගේ ප්‍රශංසාව හිමිවිය යුතුය.

බහුතර ගුරු ශිෂ්‍ය ශිෂ්‍යයාවන්ගෙන් ඉතා සුළු කොටසක් වූ අප මෙම අධ්‍යාපන විද්‍යා පීඨයේ සංවිධානය කරනු ලැබූ මෙම උත්සවය හා උත්සව සහරාවෙන් අප බලාපොරොත්තු වන්නේ අප අතර දයාව, කරුණාව, මෛත්‍රිය හා සහෝදරත්වයේ වැඩි දියුණුව යි.

එසේම, මෙම උත්සව සහරාවට මා හට ද පණිවිඩයක් දීමට හැකිවීම ගැන මම අතිශයින් සතුටු වෙමි.

**එම්. මන්සූර් අලි.**
සභාපති,
මජ්ලිසුල් ඉස්ලාම්,
අධ්‍යාපන විද්‍යා පීඨය,
වවුනියාව.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஐக்கியமும் சமாதானமும் நிலைத்திட
## அண்ணல் நபி (ஸல்) அவர்கள் வழி தொடர்வோம்.

அண்ணல் நபியின் ஜனன தினத்தில் அவரின் புகழ் எங்கும் பரவும் வேளை எமது வவுனியா கல்வியியற் கல்லூரியிலும் இந்து, பௌத்த, கிறிஸ்தவ மாணவர்கள் மத்தியில் ஒரு சில இஸ்லாமிய மாணவர்களாகிய நாம் அண்ணல் நபி(ஸல்) அவர்களுடைய ஜனனதின விழாவை அனைவரது பூரண ஒத்துழைப்போடு நடாத்துவதற்கும், அதனோடு இம் மீலாத் விழா மலரினை வெளியிடுவதற்கும் பேருதவியாய் அமையும் அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும் "அல்ஹம்துலில்லாஹ்",

வான்மறை ஏற்று வழி நடத்த வள்ளல் நபி(ஸல்) அவர்கள் மக்களின் வாழ்வை சீராக்க வந்த மா மனிதர். அந்த நபி காட்டிய வழி என்றும் நடைமுறைக்குப் பொருந்தும் சீரிய வழி. அவரின் வழி இன்றைய பல் விடயங்களுக்கு விளக்கமாய் அமைவனவாகும்.

நபி (ஸல்) அவர்களுடைய இம் மீலாத் விழாவின் மூலமாக எமது கல்வியியற் கல்லூரியில் மாத்திரமல்ல கல்லூரிக்கு வெளியிலும் சரி அன்பு, சகோதரத்துவம், ஒற்றுமை, சமாதானம் என்பன தழைத்தோங்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இதன் மூலம் அனைத்து சமூகமும் நிம்மதியாய் வாழ அல்லாஹ் உதவி புரிவானாக!

இவ் விழாவினுடைய சிறப்பின் நிமிர்த்தம் இம் மீலாத் மலருக்கு ஆசிச் செய்தி வழங்கிய வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் விஞ்ஞானத் தொழில்நுட்ப மனிதவள அபிவிருத்திப் பிரதி அமைச்சருமான அல்ஹாஜ் எஸ். எஸ். எம். அபூபக்கர், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய எமது கல்லூரியின் பீடாதிபதி திருவாளர் எஸ். அழகரெத்தினம், விரிவுரையாளர், இணைப்பாளர் திருவாளர் க. பேர்ணாட், எமது மஜ்லிஸுல் இஸ்லாம் அமைப்பின் போசகர் ஜனாப் எஸ். சகாப்டீன் மற்றும் ஒத்தாசையின் சிகரமாய் உதவி வழங்கிய சக ஆசிரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்கள், மலருக்கு மெருகூட்ட ஆக்கங்கள் தந்துதவிய ஆசிரிய மாணவர்கள் இம்மலர் ஆக்கம் பெற உதவிய உத்தியோகஸ்தர்கள், வவுனியா, வாழ் வர்த்தகப் பெருமக்கள் அனைவருக்கும் நன்றிகள்.

இம் மீலாதுந் நபி விழா இனிதே நடை பெற என் வாழ்த்துக்கள் அதற்கு அல்லாஹ் உதவி புரிவானாக "ஆமீன்"

**ஏ.எம். ஸுபைர்**
செயலாளர்
மஜ்லிஸுல் இஸ்லாம்
கல்வியியற் கல்லூரி
வவுனியா.

## සාමය හා එකමුතු භාවය රැකි නබි (සල්) තුමාගේ මාර්ගය ඔස්සේ.

මුහම්මද් නබි තුමාගේ ජන්ම දිනය නිමිත්තෙන් එතුමාගේ ප්‍රසිද්ධිය ලොව වටා පැතිරෙන මේ අවස්ථාවේ වවුනියා අධ්‍යාපන විද්‍යා පීඨයේ බෞද්ධ, දමිළ, ක්‍රිස්තියානි ශිෂ්‍යයන්, අතර සුළුතරයක් වූ ඉස්ලාමීය ගුරු ශිෂ්‍යයන් වන අප නබි තුමාගේ උපන් දිනය නිමිත්තෙන් මේ සියළු දෙනාගේ සම්පූර්ණ සහයෝගයෙන්, මෙම මීලාද් සහරාව එළි දැක්වීමට උදව් කළ සැමට අල්ලා වහන්සේගේ ප්‍රශංසාව හිමි වේ. "අල්හම්දුලිල්ලාඃ"

ශුද්ධ වූ කුර්ආනයේ ඉගැන්වීම් ඔස්සේ ගමන් කළ එතුමා ජනතාවගේ ජීවන මග සාර්ථක කරදීම සඳහා බිහි වූ ශ්‍රේෂ්ඨ පුද්ගලයෙකි. එතුමාගේ මග පෙන්වීම සැමවිටම ඔබින අයුරින් විය. එතුමාගේ මග පෙනවීම අද බොහෝ ප්‍රශ්න වලට පිළිතුර වී ඇත.

නබි (සල්) තුමාගේ ජන්ම දිනය නිමිත්තෙන් එළි දැක්වෙන "මීලාද්" සහරාවෙන් අප අධ්‍යාපන විද්‍යා පීඨයට පමණක් නොව එයින් පිටටත් ආදරය, සහෝදරත්වය හා එකමුතු බව දියුණු වේවා! යි මම ප්‍රාර්ථනා කරමි.

මෙම උත්සවය නිමිත්තෙන් මෙම සහරාවට පණිවිඩ දුන් වවුනියා දිස්ත්‍රික් පාර්ලිමේන්තු , විද්‍යා තාක්ෂණික හා මිනිස් සම්පත් සංවර්ධන නියෝජ්‍ය අමාත්‍යය ගරු අල්ලාජ් එස්. එස්. එම්. අබූබකර් මැතිතුමාටත් අප විද්‍යා පීඨයේ පීඨාධිපති එස්. අලගරත්නම් මහතාටත් කථිකාචාර්ය සම්බන්ධීකරණ නිළධාරි කේ. සහබ්දීන් මහතා ඇතුළු නත් අයුරින් උදව් උපකාර ලබාදුන් ගුරු ශිෂ්‍ය ශිෂ්‍යාවන් විද්‍යාලයේ අනිකුත් උදව් උපකාර ලබා දුන් ගුරු ශිෂ්‍ය ශිෂ්‍යාවන් විද්‍යාලයේ අනිකුත් නිළධාරීන් ඇතුළු සියළු දෙනාටම ස්තුතිවන්ත වෙමි.

මෙම මීලාද් නබි උත්සවය ඉතා සාර්ථකව පැවැත්වීමට අල්ලා වහන්සේගේ පිහිට මේ අවස්ථාවේ දී ලැබේවා! යි ප්‍රාර්ථනා කරමි.

**ඒ. එම්. සුබෙර්.**
ලේකම්,
මජ්ලිසුල් ~~විද්‍යා~~ ඉස්ලාම්,
අධ්‍යාපන විද්‍යා පීඨය,
වවුනියාව.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரின் உள்ளே ..............


| விடயம் | பக்கம் |
|---|---|
| 1. யார் இந்த முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். | 19 |
| 2. நல்லதோர் பண்பை உலகிற்கு ஈந்திட்ட அண்ணலார். | 22 |
| 3. என்னைக் கவர்ந்த இஸ்லாம். | 25 |
| 4. රසූලුල්ලාහ් (සල්) තුමාගේ ජීවිතයෙන් පාඩමක් | 27 |
| 5. இந்து அறிஞர்கள் பார்வையில் இஸ்லாமிய மார்க்கம். | 30 |
| 6. இஸ்லாம் காட்டிய கல்விப் பாதை. | 33 |
| 7. இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பெண்கள். | 35 |
| 8. சமத்துவ வழியில் சாந்தி மார்க்கம். | 38 |
| 9. இஸ்லாமும் மனித ஒற்றுமையும். | 45 |
| 10. இஸ்லாமும் விஞ்ஞானமும். | 46 |
| 11. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காட்டிய அரசியற் பாதை. | 48 |
| 12. பிரியாத உள்ளங்கள் (சிறுகதை). | 52 |
| 13. நபியின் பாதையில் சில வரிகள். | 55 |
| 14. அண்ணலே வாழ்த்துகின்றேன். | 56 |
| 15. "ආලෝකය" | 57 |
| 16. அல்லாஹ்! நான் கேட்கின்றேன். | 58 |
| 17. நல்வழிக்கு நபி பெருமானார் .........! | 61 |
| 18. வள்ளல் நபியே ........! ஏற்றிப்பாடுகின்றேன். | 62 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் அன்பு கனிந்த
மீலாத் வாழ்த்துக்கள்.

♥
♥
♥
♥

SALEEMA'S

No: 145 BAZAAR STREET

VAVUNIYA

மீலாத் விழா சிறப்புற
வாழ்த்துகிறோம்

❊
❊
❊ ❊ ❊

Vavuniya Hardwares

186. BAZAAR STREET

VAVUNIYA

" கோள் மூட்டி வைப்பவன் சொர்க்கத்தின் வாடையைக் கூட நுகரமாட்டான்."
நபி (ஸல்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இதயம் கனிந்த
மீலாத் வாழ்த்துக்கள்

# BEST CHANCE

200 BAZAAR STREET,

VAVUNIYA

மாசில்லா மாநபியின் விழா சிறப்புற

மனமார வாழ்த்துக்கள்தெரிவிக்கிறோம்

# JANAB : M.I. NIFARAK

138 . BAZAAR STREET,

VAVUNIYA

" உண்மையைக் கூறிவிடு அது கசப்பாக இருப்பினும் சரியே"

நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் இந்த முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

"நபியே; அல்லாஹ்வின் மீது சத்தியமாக உமக்கு முன்னிருந்த பல சமூகத்தவருக்கும் நாம் (நம்முடைய) தூதர்களை அனுப்பி வைத்தோம். எனினும் ஷைத்தான் அவர்களுக்கு அவர்களுடைய (தீய) காரியங்களையே அழகாகக் காட்டினான். இன்றைய தினம் இவர்களுக்கும் அவனே வழிகாட்டியாகவும் தலைவனாகவும் இருந்து வருகின்றான். ஆகவே இவர்கள் துன்புறுத்தும் வேதனைக்கு ஆளாகி விட்டார்கள். மேலும் (நபியே) இவர்கள் எந்த விஷயத்தில் தர்க்கித்துக் கொண்டிருக்கின்றார்களோ அதனை நீர் தெளிவாக்குவதற்காகவே இவ் வேகத்தை உம்மீது நாம் இறக்கி வைத்தோம். இன்னும் இதை நம்பி ஏற்றுக் கொள்வோருக்கு (இது) நேரான வழியாகவும் ஓர் அருளாகவும் இருக்கின்றது.

(திருக்குர் ஆன் 16 : 63 - 64)

உலகில் மனித இனம் தோற்றுவிக்கப்பட்ட காலம் முதல் மனிதன் நேரான வழியில் வாழ்க்கையை அழைத்துக் கொள்வதற்கென்று காலத்திற்குக் காலம் அல்லாஹ் நபிமார்களை அனுப்பிக் கொண்டிருந்தான். இவ்வாறு அனுப்பப்பட்ட ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்களில் இறுதியாக இறைவனின் தூதராக அனைத்து இன மக்களுக்கும் பொதுவானவராகவும் அவனிக்கு அடியெடுத்து வைத்து இஸ்லாமிய நெறியை பிரகாசிக்க வைத்தவர் இந்த முஹம்மது எனும் நாமம் கொண்ட அண்ணல் நபி (ஸல்) அவர்களேயாவார்.

இஸ்லாமிய ஒளி பொலிவிழந்து அனாச்சாரங்களும் அட்டூழியங்களும் ஆட்சி செய்த அரபுத் தீபகற்பத்தில் மங்கிய ஒளியைத் தங்க வைக்காது, என்றும் ஒளி வீசும் தன்மையைக் கொண்ட அம்சமாகத் திகழ முன்வந்த வேதங்களும் முன்னைய நபிமார்களும் (தீர்க்கதரிசிகள்) முன்னறிவிப்புச் செய்திருந்த இந்த முஹம்மத் (ஸல்) அவர்கள் கி.பி 571இல் ஏப்ரல் மாதம் 22ந் திகதி அரபு நாட்டின் மக்கா நகரில் பிறந்தார்கள். இவர் பிறப்பதற்கு முன் தந்தை அப்துல்லாவையும் , பிறந்து ஆறாவது வயதில் தாயார் ஆமினாவையும் இழந்து அநாதையாகிப் பாட்டனார் அப்துல் முத்தலி பிடமும் வளர்ந்து வரலானார்கள். நபியவர்களிடம் சிறுவயதிலிருந்தே வாய்மை,நேர்மை, ஒழுக்கம் உதவி செய்யும் மனப்பான்மை , பொறுமை , கடமையுணர்வு போன்ற பல்வேறு நற்குணங்கள் நிறைந்து காணப்பட்டன. இதனால் மக்காவில் வாழ்ந்த மக்கள் நபியவர்களை நம்பினார்கள். நபியவர்களிடம் காணப்பட்ட வாய்மையின் காரணமாக மக்கமா நகரத்து மக்கள் அவரை அல் - அமீன் (நம்பிக்கைக்குரியவர்) என அழைத்தார்கள். அண்ணலார் சிறுவயதிலிருந்தே பொதுப்பணியிலும் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள். குறைஷியத்துக்கும் ஹவாஸியருக்கும் இடையே 'ஹர்புல் பிஸ்ர்' என்ற போரினால் ஏற்பட்ட விளைவுகட்கு ஹில்புல் புளூல் எனும் பெயரில் இயக்கமொன்றை நிறுவிப் புனர்வாழ்வு நடவடிக்கைகளிலும் ஒற்றுமையையும் சமாதானத்தையும் மக்களிடையே பேணிகாக்க மிகவும் பாடுபட்டார்கள். தனது 25ம் வயதில் விதவையான செல்வச் சீமாட்டி கதீஜா என்பவரைப் பெரிய தந்தையின் கலந்தாலோசையின் பின் மணம் முடித்துக் கொண்டார்கள்.

விக்கிரக வணக்கம், கொலை, கொள்ளை, சூது, நேர்மையின்மை, அக்கிரமம் போன்ற பல்வேறு விதமான தீமைகள் இருந்ததைக் கண்டு இந்நிலை மாற வேண்டும், என்ற சிந்தனையில் சதா ஆழ்ந்திருப்பார்கள். நபியவர்கள் தனிமையில் தியானிப்பதற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திப்பதற்கும் மக்காவிலிருந்து மூன்று மைல் தொலைவில் இருந்த ஹிறா குகைக்கு அடிக்கடி சென்று வருவார்கள். இந்நிலை தொடர்கையில் தமது நாற்பதாவது வயதில் றம்ழான் மாதம் வைலத்துல் கத்ர் இரவில் நபியர்கள் தியானித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் இறைவன் தன்வேத வெளிப்பாட்டை வானவர் தலைவராம் ஜிப்ரில் (அலை) அவர்களினால் வஹி மூலமாக அருளினான். அன்றிலிருந்து தொடராக சிறிது சிறிதாக குர்ஆன் ஆயத்துக்கள் அருளப்பட்டுக் கொண்டிருந்தன.

இந்தத் திருக்குர்ஆன், இஸ்லாத்தைப் பற்றியும் அதன் தத்துவங்களைப் பற்றியும் ஆழமான ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் ஏ. ஜே. ஆர்பரி கூறுவது போலக் கலை வல்லுனர்களின் கலைக்கூடமாகவும் இலக்கிய மேதைகளின் கவிதைத் திறனாகவும் விஞ்ஞானிகளின் செயற்றிறனுக்குரிய ஆய்வுகூடப் பிரதிபலிப்பாகவும் விளங்குகின்றது.

இறைவனால் அருளப்பெற்ற வேத வெளிப்பாட்டின் போதே நபியவர்களை இறைவன் தன் தூதராக ஏற்றுக் கொண்டான். இதுவே நபியர்கட்கு வழங்கப்பட்ட நபிப்பட்டமாகும்.

நபிப்பட்டம் பெற்ற நாள் முதல் இஸ்லாமியக் கொள்கைகளை மக்களுக்கு எடுத்தியம்பி வந்தார்கள். இஸ்லாமிய கொள்கைகளை ஏற்றுக் கொள்ளும் மக்களுடைய அதிகரிப்பினைக் கண்ட இஸ்லாத்தின் எதிரிகள் நபியவர்களுக்கும் சொல்லொனாத் துயரங்களை விளைவித்தார்கள். ஆனால் கொண்ட கொள்கை மாறாது வேதனைக்கும் சோதனைக்கும் மத்தியில் தன் பணியினைத் தொடர்ந்தவர்களாக இருந்தார்கள். இக்கால கட்டத்தில் நபியவர்களின் 50ஆவது வயதில் அன்பு மனைவி கதீஜாவும் பெரிய தந்தை அபூதாலிபும் மரணமெய்த , நபிகளாருக்கு இவ்விடயம் மிகவும் கவலையளிப்பதாக இருந்தது. இதனால் இவ்வாண்டு "ஆமுல்ஹுஸ்ன்" (துக்க ஆண்டு) என அழைக்கப்படலானது.

ஒளியிழந்த இஸ்லாமியக் கொள்கைகளை எடுத்தியம்ப மக்காவின் தெற்கே அமைந்துள்ள தாயிப் நகர் சென்ற நபியவர்கட்கு அங்கும் பல தொல்லைகளும் துன்பங்களும் ஏற்பட்டமையால் மீண்டும் மக்கமா நகர் திரும்பினார்கள். மக்காவின் வடக்கே அமைந்துள்ள யத்ரிப் (மதினா) நகரிலிருந்து ஹஜ் கடமையை நிறைவேற்ற வந்தவர்கள் இஸ்லாத்தை ஏற்க ஆரம்பித்தார்கள்.

இவ்வாறான காலப்பகுதியில் தான் நபிகளது வாழ்வின் முக்கியமான அற்புதமிக்க நிகழ்வான மிஃராஜ் எனப்படும் விணணுலக யாத்திரை இடம்பெற்றது. இறைவனது கட்டளையின் பிரகாரம் ஜிப்ரில் (அலை) எனும் வானவர் நபி (ஸல்) அவர்களை மக்காவின் கஃபத்துல் முஹத்தஸுக்கு அழைத்துச் சென்று அங்கிருந்து வானங்களைக் கடந்து இறைவனின் சந்நிதானம்வரை சென்றார்கள். இந்நிகழ்வு கி.பி.621 இல் நிகழ்ந்தது.

இதன்போது நபி (ஸல்) அவர்கள் முன்னைய நபிமார்கள் பலரையும் சந்தித்தோடல்லாமல் சுவர்க்க நரகத்தையும் கண்டார்கள். இதன் போதே ஐவேளைத் தொழுகை கடமையாக்கப்பட்டது குறிப்பிட வேண்டிய விடயமாகும். நபியவர்கள் உண்மையாகவே இறைவனுடைய இறுதித் தூதர் என்பதை அறிந்த மக்கள் பலர் அன்னாரின் வழிமுறையைப் பின்பற்றத் தொடங்கியதைக் கண்ட குறைஷியரான எதிரிகள் நபி (ஸல்) அவர்களைக் கொலை செய்யத் திட்டமிட்டார்கள். இதிலிருந்து இறைவன் காப்பாற்றி அண்ணலாரை நபியின் தோழராம் அபூபக்கர் (றலி) அவர்களுடன் மதீனாவிற்கு அனுப்பி வைத்ததான். நபி (ஸல்) அவர்களைக் கண்ட மதீனாவாசிகள் மிகவும் சந்தோஷமாக வரவேற்றார்கள். ஹிஜ்ரத் என்றழைக்கப்படும் மக்காவிலிருந்து மதீனா சென்ற இந்நிகழ்வை முஸ்லிம்களுடைய ஹிஜ்ரி ஆண்டாகக் கணிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதீனாவில் வாழ்ந்த யூதர்களுடனும் அருகில் வாழ்ந்து ஏனைய கோத்திரதாரர்களுடனும் சமாதான உடன்படிக்கை செய்து அவர்களுக்கு எத்தகைய இடையூறும் ஏற்படா வண்ணம் ஓர் இஸ்லாமிய அமைப்பை வழிநடத்திச் சென்றார்கள். இதனைச் சகிக்க முடியாத மக்கத்துக் குறைஷியர்கள் மதீனா நகரை நோக்கிப் படை யெடுத்துச் சென்றார்கள். இதனால் பத்று, உஹது, கந்தக் (அகழி) போன்ற யுத்தங்கள் நடைபெற்றன. இங்கு எதிரிகளின் பக்கம் அதிகமான எண்ணிக்கையினர் இருந்தும் அல்லலாஹ்வின் உதவி நபி (ஸல்) அவர்களுக்கு இருந்தமையினால் முஸ்லீம்கள் வெற்றியீட்டினர்.

இதன்பின் நபி(ஸல்) அவர்களும் தோழர்களும் (ஸகாபாக்கள்) மக்காவிலுள்ள கஃபா ஆலயத்தில் உம்றா எனும் வணக்க வழிபாட்டில் ஈடுபடுவதற்காக வந்த சமயம் ஹுதைபியா எனும் இடத்தில் அவர்களைச் செல்லவிடாது குறைஷியர் தடுத்தனர். இதனால் இரு சாராருக்கும் ஏற்பட்ட கருத்துப் பரிமாற்றத்தின் பின் நபி (ஸல்) அவர்களும் ஏனைய முஸ்லிம்களும் மக்கா சென்று முக்கியமான சில எதிரிகளைத் தவிர ஏனையோருக்குப் பொது மன்னிப்பை வழங்கினார்கள்.

மனித வாழ்க்கை ஆன்மீகமும் உலகாதாயமும் இணைந்ததாக இருக்கவேண்டுமென அறிவுரை பகன்று நாணயமுள்ள வர்த்தகராக அகிலத்திற்கோர் அருட்கொடையாக, இறைதூதராக பொறுப்புள்ள குடும்பத்தலைவராக , இராணுவத் தளபதியாக நீர்திருத்தவாதியாக , ஆத்மீக வழிகாட்டியாக , அரசியல் வித்தகராக சிறந்து விளங்கிய அண்ணலவார்கள் கி.பி. 632இல் இறுதி ஹஜ் யாத்திரையை மேற்கொண்டு அரபா மைதானத்தில் பெருந்திரளான மக்கள் முன்னிலையில் தன் இறுதிப் பேருரையை நிகழ்த்தினார்கள். இதன்பின் மதீனா திரும்பிய நபியவர்கள் இரண்டு மாதங்களின் பின் நோயுற்று ஹிஜ்ரி 11ம் ஆண்டு றபியுல் அவ்வல் 12ம் நாள் திங்கட்கிழமை தமது 63வது வயதில் வபாத்தானார்கள் அல்லாஹ் அவர்கள் மீது சாந்தியும் கருணையும் பொழிந்தருள்வானாக!

ஜனாப்! ஏ. எம். ஸுபைர்,
உடற்கல்விப் பிரிவு,
இரண்டாம் வருடம்.

" ஒரு முஸ்லிம் தம் சகோதர முஸ்லிமுக்குப் பயன் தரக் கூடிய ஒரு அறிவைக் கற்றுக் கொடுப்பதை விட மிக விசேடமான எந்த ஒரு சன்மானத்தையும் அவருக்கு அளிப்பதற்கில்லை அத்தகைய பலன் தரக்கூடிய அறிவினால் அல்லாஹ் அவருக்கு நேர் வழியை அதிகப்படுத்துவான் அல்லது அவருக்கு நிகழப்போகும் ஒரு ஆபத்தை அகற்றிவிடுவான்."

நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதோர் பண்பை உலகிற்கு ஈந்திட்ட அண்ணலார்

வையகம் அதர்ம இருளில் புதைந்து மனிதப் பண்புகள் மரித்து, மனிதமே இல்லாதொழிகின்ற போது, மனிதத்தைக் காத்து மானுடம் உண்மை வழி எய்தி வையகம் ஒளி பெற மானிடத்துள் மானிடராய் அவதரிப்பவர்கள். இறைதூதர்கள். அவ்வகையில் மண்ணுலக வாழ்வு மாண்புடன் விளங்க அவதரித்தவரே மாதவத்தோன் அண்ணலார் முகம்மது நபிகள் அவர்கள் உலகிற்கு காட்டிய நெறிகளுள் ஒன்று சிறப்புறு மனிதப்பண்புகளாகும். அப்பண்புகளுக்கு தானே இலக்கணமாய் அமைந்து வழிகாட்டினார் என்பதை உண்மை உணர்ந்தோர் என்றும். மறப்பதற்கில்லை.

உலகிற்கு உண்மை ஒளி பரப்பிடவே உதய சூரியனாய் உதித்தவர் அண்ணல் முகம்மது நபி அவர்கள். அல்லாஹ்வின் தேவகட்டளைகளை ஏற்று விண்ணக அவை தனில் இருந்து பூதலத்தோர் துயர் துடைக்க இல்லறத்தில் நல்லறம் தன்னைப் பேணி, குடும்ப சீலம் தவறாது வாழ்ந்து வந்த அப்துல்லா ஆமினா செய்மாதவத்தின் பயனாய் அவர்கள் அளவிலா மகிழ்வுறும் வண்ணம் மகனாய் அவதரித்தார் அண்ணலார்.

மண்ணிலே உதிப்பதற்கு முன் தந்தையும் , பின் தாய்தனையும் இழந்த நபிகளார் நல்லறவழி பேணி நடந்திட, சோர்ந்திடராய் நின்றமை. அவர் பிறப்பின் போதே ஷைத்தான்கள் அரியாசனம் இனயில்லை நமக்கு என்று அழுது புரண்டனர். கஸ்தூரி வாசம் மண்ணெல்லாம் மணம் பரப்பி மாந்தர் தமை தூய்மைபடுத்திட வழியமைத்ததெனில் அவரோ அற்புத மகான் என்பதை பிறப்பே பறைசாற்றியது, என்று கூறினால் மிகையாகாது.

தன்னோக்கு மாந்தர்தமை சென்றடைய அண்ணலார் எதிர்கொண்ட சவால்களும், இன்னல்களும், எதிர்ப்புக்களும் கொஞ்ச நஞ்சமல்ல. தனை எதிர்த்தவரை சூனியக்காரன், வஞ்சகன் எனத்திட்டியவரையும் பைத்தியக்காரன் என இழிவுப்படுத்தியவரையும், அழிக்கத்திட்டமிட்டவரையும், வஞ்சிக்காது அனைவர் தம்மையும் உள்ளன்புடன் நோக்கி அவர்களால் தம்மை எதிர்கொண்ட துன்பங்களை அன்புடன் எதிர்கொண்டு மற்றவர் தமக்கு உண்மைதனை எடுத்துரைத்தமை அவர் அவனிவாழ் மக்களில் மகான் என்பதையே எடுத்துக் காட்டுதல்லவா?

முழுமை பெறும் மானிடர் பெற்றிருக்க வேண்டிய நற்பண்புகளான ஒழுக்கம், நேர்மை, நற்குணம், இரக்கம், உதவும் தன்மை, கண்ணியம், பொறுமை, சுயமரியாதை, உழைப்பு, உலகப்பற்று ஆகிய உயர்பண்பியல், விழுமியங்களை தன்னகத்தே உள்ளடக்கி ஒவ்வொரு பண்பிற்கும் தானே இலக்கணமாய் வாழ்ந்து காட்டிய அண்ணலார் மக்களும் இப்பண்புகள் தனை பின்பற்றி கடைபிடித்து நன்மனிதர்களாய் வையகம் தன்னிலே வாழ்ந்திட இறைஞ்சி வேண்டினார்கள். ஒவ்வொரு பண்புகளுக்கும் தன்னை அர்ப்பணித்தபோதும் அவர் அப்பண்பியல் புனிதம் காத்திட தவறவில்லை. தன்னை அண்டியவர் அண்ணலாரிடம் செய்தண்டனையில் இருந்து தப்பிட வழிவினவியபோது அண்ணலார் அதற்கு சினம் கொண்டு கேட்டவரை நோக்கி “அல்லாஹ் உடைய தண்டனையில் நீ பரிந்துரை செய்ய வந்து விட்டாயா?” என்று கேட்டுவிட்டு மக்களுக்கு இது பற்றி உபதேசம் செய்தார். அதாவது “இதற்கு முன் வாழ்ந்த சமுதாயம் அழிக்கப் பட்டதன் காரணம் அவர்களில் வசதி படைத்தவர்கள் திருடினால் விட்டுவிடுவார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலவீனர்கள் திருடினால் தண்டனை கொடுப்பார்கள்." என்றும் "அல்லாஹ்வின் மீது ஆணையாக முகம்மதுடைய (என்னுடைய) மகள் பாத்திமா திருடியிருந்ததாலும் அவளின் கையையும் நான் வெட்டியிருப்பேன் " என்றார். என்பதன் மூலம் நேர்மைக்கு மாறாக நடக்காத நீதி நெறியாளர் என்பதை சுட்டிக்காட்டிய அண்ணலார், ஒவ்வொரு பண்பியலையும் சொல்லிலே மனிதர் தம்மிடம் எடுத்துரைத்த துடன் நின்றுவிடாமல் செயலுடன் வாழ்ந்து காட்டிய அவர் புனித மிகு அத்தியாயங்கள், வாழும் மாந்தர் தம்மால் இன்றும் புரட்டப்பட்டு படித்து சுவைத்து நல்லதோர் வாழ்வியலை மாண்புடனே நடத்துவதைக் காணலாம்.

ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை சான்றோன் எனக்கேட்கும் தாயானவள் அளவிலா ஆனந்தம் எய்தி இன்ப ஊற்றினிலே தான் பெற்ற செல்வம் தேடித்தந்த பெருமையினால் நீந்தி மகிழ்கிறாள். அவ்வகைதனை மிஞ்சி அண்ணலார் தாம் மானிடத்தின் இறையனார் தன்னகரில்லாத தலைவரவர் அல்லாஹ்வே பாராட்டும் பேறு பெற்றதனில் அவரின் மாண்புதனை எத்துணை எடுத்துரைத்து மகிழ்வது? அத்தகைய மகிழ்வின் பாக்கியமாய் அல்லாஹ் "நிச்சயமாக நீர் மிக உயர்ந்த மகத்தான நற்குணம் உடையவராக இருக்கின்றீர்" எனக் கூறுகிறான். இத்தகைய பேறுதனை இறைதூதர் அண்ணலார் அவர்கள் எண்ணிடங்காத தரம் பெற்றிருக்கிறார்கள் என்பது அதில் எத்துணை உண்மை உள்ளது. என்பதும் வெளிநின்று நோக்குபவருக்கு புரியாது? இஸ்லாம் உலகிற்கு அளித்த அரிய பொக்கிஷங்களினுள் நுழைந்து பார்க்கும்போது தான் உண்மையது தெட்டத்தெளிவாகத் தெரியும்.

அண்ணலாரிடம் இரந்து வேண்டுபவர்களுக்கெல்லாம் வாரிக்கொடுக்கும் கொடைத்தன்மை நிறைந்து காணப்படுகின்றது. தான் உண்ண வேண்டிய உணவையும் மற்றவருக்கு ஈன்று தான் பட்டினி கிடந்து மற்றவர் உண்ண மகிழ்ந்த அண்ணலார் மகத்தான சமுதாயம் ஒன்றைப் படைக்க தன்னை அர்ப்பணித்தார். தன் சிறந்த சமுதாய படைப்பினில் மனிதம் வாழ வழிப்படுத்த வேண்டிய பண்புகளையே அடித்தள மாகக் கொண்டார்கள் தான் படைக்க முயன்ற சமுதாயத்திலே அரிய பல கருத்துக்களை கூறியதுடன் நடைமுறையிலும் வாழ்ந்து காட்டினார்கள். " ஏழைகள் புறக்கணிக்கப்பட்டு பணக்காரர்கள் மட்டுமே அழைக்கப்படும் திருமண விருந்து மிகவும் கெட்டது" என கடுமையாக எச்சரித்தார்கள். மற்றும் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுந்தான் தன் சிரத்தை சாய்க்க வேண்டும். வேறு எவருக்கும் பணியக் கூடாது. ஏனெனில் மற்ற அனைவரும் நம்மைப் போன்ற மனிதர்களே! நானும் கூட மனிதனே! எனத்தன்னைக் கண்டதும்தன் தோழர்கள் சிரம் தாழ்த்திய போது அண்ணலார் கூறும் தன்மை அவர் புகழை விரும்பா சிறப்புறு பண்புதனையும் யாவரும் சமம் என்ற சமத்துவ உணர்வும் தன்னை அண்டிய புகழுக்கு தலை வணங்க முடியாது நின்றமையும் என்னவென்பது.

மனிதர் வாழ்வில் ஜீவகாருண்ணியம் கொள்ளல் மனிதப் பண்பின் உயர்ந்த பண்பாகும். எவ்வுயிராயினும் அவ்வுயிர் துன்பமெய்தும் போது கருணைகாட்டல் மிகப்பெரிய பேறு என்றார். அதற்கு அவரே சான்றாகவும் அமைந்தார். ஓர் சந்தர்ப்பத்தில் முதுகும், வயிரும் ஒட்டிய ஒட்டகத்தை கடந்து சென்றார். அப்போது ஒட்க உரிமையாளனிடம் " வாயில்லா இந்த விலங்கினத்தின் விஷயத்தில் அல்லாவுக்கு அஞ்சிக் கொள்ளுங்கள். இதற்கு அழகிய முறையில் உணவூட்டுங்கள்" என்றார். அது மட்டுமன்றி அவரே தன் ஜீவகாருண்ய உள்ளத்தைப் பல சந்தர்ப்பங்களில் வெளிப்படுத்திக் காட்டி அதனை பின்பற்றவும் பணித்தார்கள்.

தன்னை அண்டியோர்களுக்காக இன்னலுக்கு மேல் இன்னல் அடிக்குமேல் அடி பசி , பட்டினி இப்படிப் பல துன்பங்களை அவர்கள் மக்கா வாழ்க்கையில் பதின்மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு காலங்களிலும் சகித்துக் கொண்டு பொறுமையுடனையே இருந்தார்கள். அது மட்டுமா தன்னை கொன்றிட துடியாய்த்துடித்த எதிரிகளைக் கூட தாம் மக்காவை வெற்றி கொண்ட போது பொது மன்னிப்பளித்துக் காத்தார்கள் இச் செயல் எதிரியைக் கூட மன்னிக்கும் உயர்பண்பினை வெளிக்காட்டுகின்றது.

ஒவ்வொரு மனிதரிடமும் மனிதப்பண்புகள் நன்கு வேரூன்றும் போது அவர்கள் மனிதத்துள் சிறப்புறு மனிதர்களாக மதிக்கப்படுவார்கள். அவர்களால். நானிலத்தில் நல்லதோர் சமுதாயம் உண்டுபண்ண அச்சமுதாயம் நல்லவை பல செய்யும் என்பதை தன் வாழ்க்கை மூலமாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். அது மட்டுமன்றி அண்ணலார் தனக்கென எதனையும் அல்லாஹ்விடம் வேண்டாமல் பிறருக்காகவே வேண்டியதையும் தனக்கென வேண்டும் போது மற்றவர் நலனைக் கருத்திற் கொண்டே "இறைவா எனக்கு நல்ல செயல்களையும் நற்குணத்தையும் கொடுப்பாயாக உன்னைத்தவிர யாரும் இவற்றில் நல்லதைத் தரமுடியாது. கெட்ட செயல்களிலிருந்தும் கெட்ட குணங்களில் இருந்தும் என்னைக் காப்பாற்றுவாயாக" என வேண்டிய உயர்பண்பினையும் எங்கனம் மானிடம் மறப்பது.

முதியோர் தம்மை மதித்திடல் வேண்டும். என்பதனை தன் வாழ்நாளில் கடைப்பிடித்து காட்டியதுடன் மற்றவரையும் அதன்படி நடக்கவும் பணித்தார்கள். அக்கால அரேபிய சமுகத்தில் காணப்பட்ட பழக்கவழக்கங்களைக் களைந்தெறிய பல இன்னல்களை எதிர்கொண்டு அதில் வெற்றியும் கண்டார். உதாரணமாக விதவைகள் மறுமணம் செய்ய வேண்டும். என்று கூறி அதற்கேற்ப விதவையான கதிஜாவை மணம் முடித்து வாழ்க்கை முடிந்தென இருந்த விதவைகள் வாழ்விலும் புதுப்புரட்சியினை ஏற்படுத்தி, அவர்கள் வாழ்வு மலர வழிவகுத்த அண்ணலார்! பெருமைதனை எடுத்துரைப்பதென்றால்..........."

உலகிற்கோர் அண்ணலாய், பெருந்தகையாளனாய் இரப்பவர்க்கு கொடுக்கும் கொடையாளனாய், ஏழைகளின் தோழனாய் வாழ்ந்து மானிடவாழ்வில் புதியதோர் அத்தியாயம் படைத்திட "நல்லதோர்" பண்பியலை உலகிற்கு ஈந்திட்ட முகம்மது நபிகள் அவர்களின் பெருமைதனை அவர்வழிவாழ விழைந்திட்ட மானிடம் என்றும் ஏற்றிப் பாடிப் புகழ்ந்திடும்.

மட்/ திருவூர் க. பிரபாகரன்,
ஆரம்பபிரிவு,
முதலாம் வருடம்.

"அறிஞர்களோடு (பெருமை பாராட்டி) மோதவும் அறிவிலிகளோடு வாதாடவும் ஜனங்களுடைய முகங்களைத் (தமக்குச் சாதகமாக தம் பக்கம்) திருப்பிக் கொள்ளவும் இப்படியான நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு எவர் கல்வி அறிவைத் தேடுகிறாரோ அவரை அல்லாஹ் நரகில் புகுத்துவான்."

நபி (ஸல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னைக் கவர்ந்த இஸ்லாம்

உலகில் மனிதனாய் மலர்ந்த ஒவ்வொரு உயிரும் ஏதோவொரு சக்தியை மையமாகக் கொண்டு இறை எனப் போற்றி தம்மைப் படைத்தது இறைவன், தம்மை வாழ வைப்பது கடவுள், தம்மை வழி நடத்துவது அல்லாஹ் என்ற பெயர்களில் தமது வாழ்வை உண்மையான மனிதத்ததுவத்தின் மாண்பிலே வழிப்படுத்தி நெறிப்படுத்தி வருவது நாம் அறிந்த உண்மைகள். இதற்கு விதிவிலக்கான சிலரும் இல்லாமலில்லை. இந்த வகையில் இஸ்லாமியருடைய நடத்தையில்

" ஐந்து நேரம் தொழுவது கடமை
ஈகை செய்வது இஸ்லாத்தின் பெருமை."

என்பதைக் கடைப்பிடிக்கிறார்கள். ஏனைய சமயங்களை எடுத்துப் பார்க்கின்ற போது தனக்கு ஆபத்து, துன்பம், வேதனை வருகின்ற போது ஆண்டவனே என்னைக் காப்பாற்று. இறைவா என்னை மீட்க மாட்டாயா? என்று மாரடித்துக் கொள்கின்றனர். ஆனால் உண்மையான ஒரு முஸ்லிம் தனது ஒரு நாள் வாழ்வில் குறைந்தபட்சம் ஐந்து ஐந்து தடவையாவது அல்லாவை நினைக்கின்றான் ஆண்டவனை வழிபடுகின்றான். முஸ்லீம் பள்ளிகளில் "அல்லாஹ்" என்ற ஓசை ஐந்து தடவைகள் ஒலித்து மனித மனங்களை அதிரவைக்கின்றது. இது இஸ்லாமுக்கே உரிய இறை பக்தி.

ஈகை என்பது இஸ்லாமியரின் உடலுடன் கூடிப்பிறந்தது. நான் அறிந்த வரையில் இடர்படும் மனிதர்களைக் கண்டால் இஸ்லாமியர் இன் முகம் காட்டுவது உண்மை. இஸ்லாமின் உன்னதப்பண்பு தாழ்ந்து கிடப்பவனைத் தட்டியெழுப்பி தரணியில் தன்னுடன் வாழ உதவிகளைத் தாரை வார்ப்பான் முஸ்லீம்.

இஸ்லாம் என்றால் அங்கு அல்லாஹ் ஒருவனே ஆண்டவன், முழுமுதலானவன். அவன் மத்தியில் உணர்ந்தவன், தாழ்ந்தவன், பணக்காரன், ஏழை, என்ற பேதம் இஸ்லாமியரிடம் இருப்பதே கிடையாது. சாதிப்பிரிவினையால் தலையில் அடித்துக் கொள்ளும் சமூகத்தின் தாரகை மந்திரத்தை உடைத்து எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் அல்லாஹ்வின் அடியார்கள் என அறை கூவல் விடுகிறது இஸ்லாம்

சீதனக் கொடுமை மலிந்து, சீர்வரிசைகள் தலைதூக்கி சிம்மாசனத்தில் இருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் பெண்கள் சீதனம் கொடுக்க முடியாது பரிதவித்து நடுப்பாதையில் தள்ளப்பட்ட நவீன உலகில் பெண்கள் சீதனம் தர வேண்டியதில்லை, ஆண்கள் மஹர் கொடுத்து மணம் முடிக்க வேண்டும் என்றும், சீதனம் என்பது மனித குலத்தைப் பிடித்துள்ள சாத்தான் எனவும் கூறும் இஸ்லாமியரின் வாழ்வு போற்றுதற்குரிய தொன்றல்லவவா,

வட்டிக்கு வட்டி வாங்கி தமது சொத்துச் சேர்த்து தம்மை உயர்த்திக் கொள்ளும் மனித இனத்தினருக்கு மத்தியில் இஸ்லாமியர் கூறும் மகத்தான வார்த்தைகள் இவை,

" வட்டி ஹராம்
வியாபாரம் ஹலால்"

என்கிறது வட்டி வாங்காதே, வியாபாரம் செய்து உனது சொந்த உழைப்பில் சுபீட்ச மாக வாழ். என்ற போதனையை வகுத்தது மட்டுமன்றி வாழ்ந்தும் காட்டுகிறார்கள் இஸ்லாமியர்கள்.

எல்லாச் சமயத்திலும் நோன்பு, ஒரு சந்தி, விரதம் என்றெல்லாம் அனுசரிக்கின்றார்கள். ஆனால் இஸ்லாமியரின் நோன்பு இறுக்கமானது. முப்பது (30) நாட்கள் பச்சத் தண்ணீர் கூட அருந்தாமல் அவர்கள் இறைவனுக்காகத் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதில் இஸ்லாமியர் கூறும் தாற்பரியம் பசித்தவனுக்கு தானே பசியின் அருமை தெரியும். உண்டு குடித்து மகிழ்பவன் உண்ணாதிருக்கும் போது அந்த வேதனை புரியும். இதனால் ஏழைகளின் பசி போக்கி ருசி கொடுக்க முடியும் என்கிறது.

இவைகளைத் தான் ஓர் இஸ்லாமியக் கவிஞன்

"கலிமா தொழுகை நோன்பு
ஸக்காத்து ஹஜ்ஜூடனே
பழுது ஏதும் இல்லாத
பண்பான வாழ்க்கை முறை"

என இஸ்லாத்தின் ஐந்து கடமைகளையும் எடுத்துக் கூறி சீரியவாழ்க்கைக்கு வாழத்தூண்டுவதாய் கவி வடித்துள்ளான்.

நவீன நாகரீகத்தில் மூழ்கிய நங்கையரின் நவீன உடைகள் இன்று நம்மவரை நாணும் படியாக மாற்றி விட்ட இக்காலத்தில் இஸ்லாம் பெண்களின் கலாசாரம் உண்மையில் வரவேற்கத்தக்கது. நமது உடலையே மறைத்து உணர்ச்சிகளைக் குறைத்து பெண் என்பவள் எப்படி இருக்க வேண்டுமோ அப்படியே இருக்க வழி அமைக்கின்றது.

அது மட்டுமல்லாமல் இஸ்லாமியர் சமுக வாழ்விலே சில பொறுப்புக்களைக் கொண்டிருக்கிறார்கள். சில வரையறைகளை வகுத்துள்ளார்கள். இவற்றை நடைமுறையில் வாழத் தூண்டுகிறார்கள். அவை,

1. இறையச்சம்.
2. மனிதர் அனைவரும் ஒரே குடும்பம்.
3. பெண்களுக்கு சம அந்தஸ்து.
4. உறவுகளைப் பேணுதல்
5. அல்லாஹ் எம்மைக் கண்காணிக்கின்றான்.

என்ற இஸ்லாமியரின் இறை உணர்வைக் கட்டிக்காத்து வருகின்றது. இன்னும் இஸ்லாமியர் தம் மார்க்கத்தில் பற்றுக் கொண்டவர்களே தவிர துவேஷம் அற்றவர்கள். முகமது நபியின் கருத்துரைப்படி இஸ்லாமியர் பேணிக்காத்து வருகின்றனர். இது அவர்களின் நன் நடத்தையை இன்னும் வலுப்படுத்துவதாக அமைகின்றது.

இன்னுமொன்றை இஸ்லாமியரிடத்தில் காண முடியும் அவர்களின் உணவு உண்ணும் முறையில் ஒன்றாக ஒற்றுமையாக அன்பாக உண்ணும் முறை பார்ப்பவரின் மனங்களில் பதிந்துவிடும் ஓர் செயலாகும்.

எனவே இஸ்லாமியரின் வாழ்க்கையில் அன்பு, காருண்யம், ஒற்றுமை, இறைபக்தி, இறை நம்பிக்கை, மனிதனை மனிதனாக மதிக்கின்ற பண்பு, விட்டுக்கொடுத்தல், பகிர்ந்து வாழல், பிற மதங்களை மதிக்கின்ற மனோபாவம், ஒழுக்கம், கட்டுப்பாடு, கண்ணியம் போன்றன ஓர் மனிதனுக்குரிய அனைத்து விழுமியங்களையும் உள்ளடக்கி வளர்ந்து வருகின்றது இஸ்லாம். எனவே மனிதனை மனிதனாக்கி மறுமைக்கு அழைத்துச் செல்லும் மகத்தான இஸ்லாமை நான் மட்டுமல்ல எந்த மனிதனும் மறுதலிக்க இயலாது.

செல்வன். ஜோன் பொஸ்கோ,
ஆரம்பப் பிரிவு,
இரண்டாம் வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# රසූලුල්ලාහ් (සල්) තුමාගේ ජීවිතයෙන් පාඩමක්.

මානව ශිෂ්ඨාචාරයේ ආරම්භය අද ඊයේ සිදුවූවක් නොවේ. එහි ඉතිහාසය සෙවීම පමණක් නොව ඒ ගැන සිතීම ද මනස වෙහෙස කරවන්නකි. මන්ද යත් මානව ඉතිහාසය ගණනය කිරීම වසර සිය ගණනින් නොව මිලියන බිලියන වලින් කෙරෙන්නක් බැවිනි. මෙසා ඈතට දිව යන මානව ශිෂ්ඨාචාරයේ සුවිශේෂ වූ සංධිස්ථාන බොහොමයකි. ඒ ඒ වකවානු වල මානව සභ්‍යයත්වයේ වර්ධනයන් මෙන්ම පසු බැම්ද ඇති විය. මේ අතරින් මානව හිත වාදී දාර්ශනිකයන්, ආගමික නායකයන් පමණක් නොව ඒකාධිපති බලලෝභී වියරු පාලකයන්ද හමු වේ. මානව සභ්‍යයත්වයේ වෙනස් වීමට ඔවුනගෙන් සිදු වූ දායකත්වය සුළු කොට තැකිය හැකි නොවේ. මානව ශිෂ්ටාචාරයේ වර්ධයන් සමහින් එහි ඉදිරි ගමන අඩපණ කරන්නාවූ බාධකයන්ද පසුපසින්ම පමිණියේය. වරෙක මානව ශිෂ්ඨාචාරය අඳුරු කාලපරිච්ජේදයන්වලට මුහුණ පෑහ. ඒකාධිපති, බලලෝභී ත්‍රස්තවාදය රජකරවන කාලපරිච්ඡේද ඇති වේ. සාමාන්‍ය ජනතාවගෙන් අයකර ගන්නා ලද අධික බදු, අල්ලස් වලින් රදල සමාජය සුඛෝපභෝගී ජීවිත ගත කළහ. වැරදි ලෙස පසිඳුරන් පිනවමින් විනෝදකාමී ජීවිත ගත කළ රදල සමාජය සදාචාරය අතින් අන්ත පරිහානියට පත් විය. දේශසීමා අරගල, වහල් භාවය රජකරවන, දාර්ශනිකයන්ගෙ ධර්මාචාරීන්යේ ඉගැන්වීම් දූෂණය කොට විකෘති කොට සත්‍ය අසත්‍යයෙන් මුවා කර මානව අයිති වාසිකම් තුට්ටුවකට මායිම් නොකල සාමාජයක සාමාන්‍ය ජනතාවට හිමි වූයේ දුක්ඛිත තත්වයකි.

මෙවන් සදාචාරයෙන් හීනවූ අශීලාචාරයන්, කුලල්කා ගැනීමත්, දුරාචාරය, දූ කෙළිය හා සුරාපානය වැනි මිනිසාගේ පරිහානියට තුඩුදෙන ලක්ෂණයන්ගෙන් සමන්විත වූ රටක මානව සංහතියේ ඉදිරි ගමනට, පැවැත්මට සෘජු බලපෑමක් කල මානව හිතවාදීයකුගේ උපත සිදුවේ. ඒ අන් කවරකුවත් නොව රසූලුල්ලාහ් (සල්) තුමාය.

මෙතෙක් සමාජය වසා පැතිර ගිය සමාජ විරෝධී සංස්කෘතියේ පමණක් නොව පුද්ගල ජීවිතයේද පරිපූර්ණ වෙනසක් ඇතිකිරීමේ භාරදූර කටයුත්තට නායකත්වය දීමත් එතුමාගෙන් සිදුවිය. එය සමාජයීය සංශෝධනයක් විය. නව චින්තනාත්මක විප්ලවයක් විය. මෙම සත් කාර්යය ඉටු කිරීමෙහි ලා රසූලුල්ලාහ් (සල්) තුමාගේ නයකත්වය දැරීම මෙන්ම චින්තනය ද ඉවහල් වූ බව පෙනේ. සමාජය පුරා පැතිරගිය මානව පරිහානියේ විෂබීජයන්වල අනරුත් බව පෙන්වා දෙමින් එතුමාගේ මානව ගැලවුම්කරුවකු බවට පත් විය. මෙම සමාජ සංශෝධන කර්තව්‍යයේ දී එතුමාගේ පෞරුෂ්‍යය මනා පිටිවහලක් විය. එතුමාගේ චින්තනය සමාජ ජීවිතයේ සිරිත් විරිත් පමණක් නොව එතුමාගේ දේහ ලක්ෂණ පවා පෞරුෂත්වයේ කැපී පෙනෙන ලක්ෂණයන්ය.

එතුමාගේ ජීවිතය තුළින් වර්තමාන ජන ජීවිතය සඳහා ද ගතයුතු ආදර්ශයන් බොහොමයකි. නූතන ජන ජීවිතය ද රසූලුල්ලාහ් තුමාගේ ජීවිතය මෙන් සකසා ගැනීමෙන් සැබෑ ජීවිත හරයන් ඇති කර ගැනීමට පහසුවක් වනු ඇත. රසූලුල්ලාහ් තුමාගේ ජීවිතයෙ වැදගත් අංගයන් වන සමාජ සම්බන්ධතාවය, ගෘහ ජීවිතය, ආහාර පාන, සිරිත් විරිත් මෙන්ම එතුමාගේ ඉගැන්වීම් තුළින්ද උකහාගත හැකි සැබෑ ජීවන හරයන් සම්භාරයකි. එතුමාගේ ජීවිතය සුළුවෙන් විග්‍රහ කරමින් එයින් අප ජීවිතයට එක්කර ගතයුතු ගති ලක්ෂණ මොනවා දැයි සලකා බලමු.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

රසූලුල්ලාහ් (සල්) තුමා යන එන මගතොට දී හමුවන සියල්ලන්ටම මෙන්ම කිසිවකු මුණ ගැසීමට ගිය කළද සලාම් (        ) කීය. වරෙක එතුමා ළමුන් පිරිසක් හා කාන්තාවන් පිරිසක් පසුකර යන විටද සලාම් කීය. අන්‍යයන් හා සුහදව ජීවත් වීමට මෙන්ම විනීත හැසිරීම් රටාවක් ඇති කර ගැනීම සඳහා ද මෙය මහෝපකාරී වේ. එතුමාගේ ජීවිතය තුලින් අපගේ ජීවිතයට එක්කර ගතයුතු පුරුද්දක් වශයෙන් එය හැඳින්විය හැකිය.

මිතුරන් පැමිණෙන විට එතුමා අතට අත දෙමින් වැළඳ ගත්හ. අතට අත දෙන විට අනෙකා ඉවත් කර ගන්නා තුරු එතුමා අත ඉවත් කර නොගත්හ. මෙය මිතුරන් සාදරයෙන් පිළිගැනීමට මෙන්ම සුහදත්වය ප්‍රකාශ කිරීමේදී ද ඉතා සාර්ථක ක්‍රමයකි.

රසූලුල්ලාහ් තුමා අන්‍යයන් සමඟ කතා කරන විට වැදගත් දේ පමණක් කතා කළහ. ඒ වගේම අන්‍යයන් ගේ අදහස් උදහස් වලට අවධානය යොමු කළහ. තමන් රුචි නොවූ කතාවලට සාමාන්‍ය ඉරියව්වලින් ප්‍රතික්ෂේප කළහ. තමන් විසින් අප්‍රිය කරනු ලැබූවන්ගේ අදහස් වලටද මදහසින් යුතුව සවන් දුන්හ. නොවැදගත් දේ කතා කරමින් කාලය නාස්ති කිරීම අපරාධයක් බව එතුමාගේ ජීවිතයෙන් අපට ගතහැකි ආදර්ශයකි.

රසූලුල්ලාහ් තුමා ගිලනුන් බැලීමට යාමට අමතක නොකළහ. යමෙක් ගිලන් වූ විට ඔහුට අවශ්‍ය කරන ආහාර පාන ආදිය සපයන්නටද 'ඉන්ෂා අල්ලාහ් ඔබට ඉක්මනින් සනීප වේවා' යි පැතීමටද එතුමා ඉදිරිපත් වූහ. අවමඟුල් උත්සව වලට සහභාගී වීමද එතුමා නොවරදවාම කළ කාර්යයන්ගෙන් එකකි. සෝකයට පත් නෑ හිතවතුන් අස්වසා ලූ එතුමා මළසිරුරු වලට සුදු ඇඳුම් අන්දවා ඉතා ඉක්මනින් භූමදානය කිරීමට සැලැස්වූහ. එහිදී එතුමා ජනාසාසලාතය කරන ලදී. අසරණ රෝගීන්ගේ සුවදුක් විමසීම, ඇප උපස්ථාන කිරීම, යහපත් මානුෂික ගුණ ධර්මයකි. රසූලුල්ලාහ් තුමාගේ පුරුදු අතුරින් එය විශේෂ වේ

රසූලුල්ලාහ් (සල්) තුමාගේ ජීවිතය ඉතා සරල එකක් විය. තමාගේ වැඩ කටයුතු එතුමා විසින්ම කරගත්තා ලදී. තම ඉරිගිය ඇඳුම් මසා ගත්හ. බර ඉසුලූහ. එළුවන්ගෙන් කිරි බිව්හ. වෙළෙඳ පොළෙන් බඩු බාහිරාදිය ඔසවාගෙන පැමිණියහ. රසූලුල්ලාහ් (සල්) තුමා මෙන් අපගේ කාර්යයන් අප විසින් ම කර ගන්නේ නම් ආර්ථිකයට මෙන්ම ශරීරික සෞඛ්‍යයට ද හිතකරය.

මේ ලෙස නිවසේ වැඩපල කරන අතරතුරදී මස්ජිදය තුළ පොදු රැස්වීම් සඳහාත් මිතුරන් හා ආගන්තුකයන් සඳහාත් කාලය යෙදවූහ. පුද්ගල දියුණුව මෙන්ම සමාජයීය දියුණුවද එතුමා එයින් බලාපොරොත්තු වූ බව පෙනේ. අප කොතෙක් ආර්ථික වශයෙන් ශක්තිමත් වුවද සමාජයීය සුභ සාධනය කෙරෙහි අවධානය යොමු නොකරන්නේ නම් එයින් ඇති ඵලය කුමක්ද?

රසූලුල්ලාහ් තුමා නිවස හා ගෘහ භාණ්ඩ කෙරෙහි දැක්වූ ආකල්පය නම් මෙලොවට ජනිත වූ මිනිසා හුදෙක් ගමනක නිරතව සිටින මඟියෙකු වූ ගසක් යට විඩා හරින්නකු මෙන් හුදෙක් ජීවත්ව පෙරළා යා යුතුය, යන්නයි. පරලොව ජීවිතය අරමුණු කරගත් මිනිසා මෙලොව තම යුතුකම් පමණක් ඉටු කොට තැන්පත් ලෙස ජීවත් විය යුතු බව එහි අදහසයි. එතුමාගේ නිවසේ තිබූ එකම වටිනාකම පිරිසිදුකම පමණයි. එහි විසිතුරු ගෘහ භාණ්ඩ නොවීය. එතුමා ආහාර අනුභවයේදී සියල්ලෝම සමඟින් එකට බිම වාඩි ගත්හ. මේ තුලින් රසූලුල්ලාහ් තුමා සමාජයේ සමානාත්මතාවය අගය කළ බව පෙනේ.

රසූලුල්ලාහ් තුමා දරුවන්ට බෙහෙවින් ඇළුම් කළහ. දරුවන් අල්ලාහ්ගේ උද්‍යානයේ පුෂ්පයන් යැයි හැඳින්වූහ. ඔවුන් ඉස්ලාමීය ව්‍යාපාරයේ අනාගත නායකයන් යැයි පැවසූහ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කුඩා දරුවන්ට සැලකීම වැඩිහිටි පරපුරේ යුතුකමක් හා වගකීමක් ද වේ.

ආහාර පාන අනුභව කරන විට පොදුවේ කා සමඟත් එකට ඉඳ ගැනීමට එතුමා උත්සුක වූහ. ආහාර අනුභවයට පෙර අත් සෝදාගත් අතර ආහාර ගැනීමෙදි ශබ්ද පිට නොවන ලෙස කළහ. එතුමා අකමැති ආහාරයක් වේ නම් එය නිහඬව වෙන් කර තැබූහ. කෑමේ අඩුපාඩු නොපැවසූහ. අතේ ඇඟිලි තුනක් පමණක් ආහාර අනුභවයේ දී පාවිච්චි කළහ. එහෙත් ඒවාද ආහාර වලින් අපිරිසිදු කර නොගත්හ. කෑමට හා බීමට පසු අල්ලාහ්ට තුති කිරීමටද එතුමා අමතක නොකළහ. අන්‍යයන් සමඟ ආහාර අනුභවයේදී අන්‍යයන්ට අප්‍රියක් ඇති නොවන පරිදි අනුභව කිරීමට රසූලුල්ලාහ් තුමා උගන්වයි.

ඉහත දක්වන ලද රසූලුල්ලාහ් (සල්) තුමාගේ ජීවිතයේ තොරතුරු බිඳකින් අප ජන සමාජයට ගතහැකි ආර්ශයන් සම්භාරයකි. සමාජයේ ජීවත්වන විට අන්‍යයන් සමඟින් සුහදව ජීවත් වීමටත් විනීතව හැසිරීමටත් සමානාත්මතාවයෙන් සමාජය දෙස බලන්නටත් එතුමා අපට උගන්වයි. පුද්ගල ජීවිතය අනවශ්‍ය ලෙස සුඛෝපභෝගී විය යුතු නැත. අසීමිත සැප සම්පත් පරිභෝජනය කරමින් ගතකරන ජීවිතයට වඩා සරල වාම් ජීවිතය එතුමා අගය කරන බව කිවහැකිය. මේ තුළින් සන්තුෂ්ට සමාජයක් බිහි කිරීමට ලැබෙන අනුබලය සුළුපටු නොවේ.

මේ ලිපිය අවසන් කරන්නට මත්තෙන් එතුමාගේ චින්තනයෙන් බිඳක් ද මෙලෙස ගොනු කරන්නට කැමැත්තෙමි.

අනුන්ට ආදරය නොකරන්නා අනුන්ගේ ආදරය අපේක්ෂා නොකල යුතුය.

වත්මන් සමාජයේ තමා පතන ආදරය නොලැබීමෙන් රැකවරණය නොලැබීමෙන් චිත්ත පීඩා විඳින්නන් අප්‍රමාණය. අන්‍යයන්ගෙන් අප අපේක්ෂා කරන ආදරය, රැකවරණය ලබන්නට පෙර අප විසින් සමාජය කෙරෙහිම ආදරය දැක්විය යුතුය. අපෙන් යමක් සමාජයට තිළිණ කළායින් පසු සමාජයෙන් අපට ලැබිය යුතු දෙය නොඅඩුව ලැබෙනු ඇත.

සමාජය සැදුම් ගන්නේ පුද්ගලයන්ගෙනි.. පුද්ගල එකතුවක් යනු සමාජයකි. මෙම පුද්ගලයන් අතර ඇති සුහද බව සමාජයීය සුහද බවේ ආරම්භයයි. මෙම පුද්ගලයන් අතර ඇති සිරිත් විරිත්, හා ආකල්ප යහපත් සමාජයක පදනමයි. යහපත් සමාජයක් බිහිකිරීමෙහි ලා යහපත් පුද්ගලයන් බිහි කළ යුතුව ඇත. සෑම පුද්ගලයෙක් තුළ ම මානුෂික ගුණධර්ම, විනීත ගති පැවතුම්, යහපත් සිරිත් විරිත් ඇති කල යුතුය. එම සමාජ ගොඩනයේ දී රසූලුල්ලාහ් තුමාගේ ජීවිතයෙන් අප පාඩමක් උගත යුතුය. එතුමාගේ ජීවිතය පිළිබඳව, චින්තනය පිළිබඳව හදාරා ඇති අප එමඟින් දැනුමක් පමණක් මනසේ තැන්පත් කර ගැනීම ප්‍රමාණවත් නොවන්නේය. එතුමාගේ චරිත ලක්ෂණ, සිරිත් විරිත් අපගේ ජීවිත වලටද සම්බන්ධ කර ගතයුතුයි. එය සැබෑ ජීවිතයේදී ප්‍රායෝගිකව ක්‍රියාත්මක කළ යුතුය. එවිට අප සිතින් මෙන්ම ගතින්ද අල්ලාහ් ගේ සරණ ගියවුන් වන්නෙමු.

ආමීන් !

සී. පී. ප්‍රියන්ත හේමකුමාර,
පළමු වසර (සිංහල අංශය),
අධ්‍යාපන විද්‍යා පීඨය,
වවුනියාව.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்வுற்று, அறநெறி தவறிக்கெட்டு, பாழ்பட்டு நின்ற அரேபிய தேசத்தை வாழ்விக்க வந்த அண்ணலாக முஹம்மது நபி அவர்கள் விளங்குகிறார்கள். அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தை உலகெங்கும் பறை சாற்றி அல்லாஹ்வை அடையும் மார்க்கமாகிய பூரணத்துவமிக்க இஸ்லாமிய மார்க்கம் எவ்வாறு இருக்கின்றது என நோக்குவது இன்றியமையாத ஒரு அம்சமாகும்.

முஹம்மது நபி கி.பி 571ம் ஆண்டு மக்கா நகரில் பிறந்தார்கள். இவருக்கு முன் வாழ்ந்த இந்துமத அறிஞர்களதும், தீர்க்க தரிசிகளதும் சில கருத்துக்கள் இறுதி இறை தூதராகிய முஹம்மது நபியின் வருகையையும், அதனால் ஏற்படும் மாற்றங்களையும் பற்றி முன்னரே எதிர்வு கூறல் கருத்துக்களை நோக்குகையில் முதலாவதாக உபநிடதங்களை எடுத்துக் கொள்ளலாம். இது கி.மு 1500களில் தோன்றியதாகக் கருதப்படுகின்றது. இது முஹம்மது நபியின் வருகை பற்றி பின்வருமாறு கூறுகின்றது.

"மக்களே! மிகவும் அவதானமாகக் கேளுங்கள். புகழுக்குரிய மனிதரொருவர் மக்கள் மத்தியில் தோன்றுவார். நாங்கள் எதிரிகளிடமிருந்து தப்புவதற்காக பாதுகாப்பு தேடி வெளியேறுவோம். இந்த எதிரிகள் எடுத்துச் செல்லும் பொருட்கள் இருபது ஒட்டகங்களில் ஏற்றக் கூடியதாகவிருக்கும். இந்த மனிதரின் புகழ் பூமியையும், வானங்களையும் தொடுவதாக அமையும்."

என்பதாகும். இதே போன்று வியாச முனிவரால் உரை செய்யப்பட்ட பவிஷ்ஷ புராணமும் இறை தூதரின் வருகை பற்றி பின்வருமாறு எதிர்வு கூறுகின்றது.

*எதல் மின்னந்தரே மிலேச்ச*
*ஆசாரியன் ஸமன்வித*
*மஹாமத் இதிக்கியாத*
*சிஷ்ய சாகா ஸ்மன்வித*
*நிருஷ் சேவ மஹாதேவ*
*மிருஸ்தவ நிவாஸினம்.*

*[பாகம் 3, சூத்திரம் – 3, சுலோகம் 5–8]* தமது சிஷ்யர்களுடன் வருவார். அவர் மஹாமத் என அழைக்கப்படுவார். அவர் பாலைவனத்தைச் சேர்ந்தவர் என்பது இதன் பொருளாகும்.

ஸ்ரீகிருஷ்ண பரமாத்வாவினால் அருளப்பட்ட பகவத்கீதையிலும் முஹம்மது நபியின் வருகை பற்றி தீர்க்கதரிசனமாகவும் மிகவும் தெட்டத்தெளிவாகவும் கூறப்பட்டுள்ளது.

"அகில உலகத் தூதரின் பெயர் விஷ்ணுபக்தர் தாயாரின் பெயர் சுமதி. இவர் பேஸாத் திங்கள் பன்னிரண்டாம் திகதி பிறப்பார். இவர் பிறப்பதற்கு முன் இவரது தந்தை மரணம் எய்துவார். இவர் ஷால்மல் தீவின் இராணியை மணப்பார். திருமணத்தில் இவரது பெரிய தந்தையும், மூன்று சகோதரர்களும் கலந்து கொள்வார்கள். வானவரிடம் ஒரு குகையில் இவர் படிப்புப் பெறுவார். பிரசாரம் செய்யும் போது மக்கள் இவருக்குத் துன்பம் விளைவிப்பார்கள். துன்பம் பொறுக்க முடியாது இவர் படிப்புப் பெறுவார். பிரச்சாரம் செய்யும் போது மக்கள் இவருக்குத் துன்பம் விளைவிப்பார்கள். துன்பம் பொறுக்க முடியாது இவர் தென்மலைப் பிரதேசம் நோக்கிச் செல்வார். பிறகு இவர் வாளுடன் திரும்பி வருவார். அப்போது நாடு இவர் கைவசமாகும். இவருடைய குதிரை "பர்கை" [மின்லை விட] விரைந்து செல்லும்.

என கீதை விளக்கிக் கூறுகின்றது.இவ்வாறு முஹம்மது நபி அவர்களது காலத்துக்கு முன்னைய இந்து அறிஞர்களால் அவர்கள் யதார்த்த நூல்கள் தோறும் முஹம்மது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நபியின் வருகை பற்றி தெட்டத்தெளிவாக விளக்கியிருப்பதை அறிய முடிகின்றது.

முஹம்மது நபி அவர்கள் பிறந்து பல்வேறுபட்ட இன்னல்களையடைந்து அவராலும் அவரது சீடர்களாலும் பரப்பப்பட்ட இஸ்லாமிய நெறி இன்று உலகெங்கும் பரந்து, விரிந்து காணப்படுகின்றது. அத்தகைய நெறிபற்றி தற்கால இந்து மத அறிஞர்கள் கொண்டுள்ள கருத்துக்களை எடுத்து நோக்குகையில் முதலாவதாக மகாத்மா காந்தியின் கருத்துக்களை நோக்கும் போது இவர் இஸ்லாம் பற்றியும், முஹம்மது நபி பற்றியும், பின்வருமாறு கூறுகின்றார்.

மனித சமுதாயத்தின் கோடிக்கணக்கானோரின் நெஞ்சங்களில் ஆதிக்கம் செலுத்தும் ஒருவரின் வாழ்க்கை பற்றி புரிந்து கொள்ள நான் விரும்பினேன். நபிகளாரின் வாழ்க்கைச் சரித்திரத்தை விளக்கும் மௌலானாஸிப்லி அவர்களின இரு நூல்களை நான் வாசித்து முடிந்ததும் இந்த உத்தம புருஷரின் வாழ்க்கையை மேற்கொண்டு படிக்க கைவசம் ஒரு நூலும் இல்லையே என்று வருந்தினேன். மிக்க தூய்மை, நிறைந்த எளிமை, அன்னாரின் சுய நலமற்ற தன்மை கொடுத்த வாக்குறுதிக்குள்ளப்படி மதிப்புக் கொடுத்தல், தம்முடைய சீடர்களின் சகாக்கள் மீது அளவு கடந்த அன்பு, வீரம், நிர்ப்பயம், இறைவன் மீதும் அவனது தூதுவத்தின் மீதும் அவர்களது விசுவாசம் என்பனவையே பெருமானாரின் வெற்றிக்குக் காரணம். என் ஹிந்து சகோதரர்கள் பரிசுத்த உள்ளத்துடன் திருக்குர் ஆனைப் படிக்கப் புகுந்தால் இஸ்லாமியத்தின் இணையற்ற தன்மையையும் உண்மை உபதேசம் வெளியாவதையும் உணர்வார்கள்."

மகாத்மா காந்தியைப் போன்று இவரால் வழிப்படுத்தப்பட்டு இந்தியாவின் முதலாவது பிரதமராகிய ஜவகர்லால் நேருவும் இஸ்லாமிய மார்க்கத்தில் அளவற்ற மதிப்புக் கொண்டிருந்தார். "அராபியர்களை உறக்கத்திலிருந்து தட்டியெழுப்பி தன்னம்பிக்கையையும், வல்லமையும் அவர்களுக்களித்த புதிய சக்தி இஸ்லாம். இது முஹம்மது நபியென்னும் புதிய சக்தி இஸ்லாமிய மார்க்கத்தில் அளவற்ற மதிப்பு கொண்டிருந்தார்."அராபியர்களை உறக்கத்திலிருந்து தட்டியெழுப்பி தன்னம்பிக்கையையும், வல்லமையும் அவர்களுக்களித்த புதிய சக்தி இஸ்லாம். இது முஹம்மது நபியென்னும் புதிய தீர்க்கதரிசி ஒருவரால் போதிக்கப்பட்டது. தனது தூதில் இவருக்கிருந்த நம்பிக்கை கொண்ஸ்ட்டான்டி நோபிளை ஆண்ட ஹெர்குலிசுக்கும், எகிப்திய அரசனுக்கும் "தெய்குந்"என்ற சீனச் சக்கரவர்த்திக்கும் தமது மதத்தைத் தழுவுமாறு கோரி அனுப்பியிருந்த கடிதங்களில் இருந்து வெளிப்படுகின்றது." என்று இஸ்லாமிய மார்க்கம் பற்றிய தனது உயரிய கருத்தைத் தெரிவிக்கின்றார் நேரு.

இந்து மத சீர்திருத்தவாதிகளில் ஒருவரும், தலைசிறந்த தமிழ்ப்புரட்சிக் கவிஞருமாகிய சுப்பிரமணிய பாரதியார் இஸ்லாமிய நெறி பற்றிய தனது கருத்துக்களைக் கூறுகையில் "முஹம்மது நபியை முதன்முதலில் அலியும், அதைக்காட்டிலும் ஆச்சரியம் தோன்றும்படி கதிஜாவும் கடவுளின் முக்கிய பக்தர் என்றும் மண்டலத்தில் கடவுளுடைய பிரதிநிதியாக அவதரித்த மகானென்றும் அங்கீகரித்ததை கவனிக்கும் இடத்து அவர் நிகரில்லாத ஞானி என்பதும் பக்தஞான சிரோன்மணியென்பதும் மிக மிகத் தெளிவாக விளங்குகின்றது." என்று கனிந்து குறிப்பிடுகிறார். தனது கவிவளத்தாலும் முஹம்மது நபியைப் போற்றுகின்றார்.

*முஹம்மது நபி மகா சுந்தர புருஷர்*
*முஹம்மது நபி மகா ஞானி*
*மகா பண்டிதர் மகா பக்தர்.*

"ஒவ்வொரு மனிதரையும் தன்னுடைய பரந்த சகோதரத்துவ அமைப்புக்குள்ளே அழைக்கிறது. அந்த மனிதர்களின் நிறமும் இனமும் எப்படி இருந்தாலும் இஸ்லாம் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை. ஒவ்வொருவரும் இறைவனின் உண்மைத் தொண்டராக விளங்க முடியுமென்ற உண்மையை இஸ்லாம் ஒப்புக் கொள்கின்றது." என்று இஸ்லாமிய மார்க்கம் பற்றிய தனது உயரிய கருத்தைத் தெரிவிக்கின்றார். இந்திய உப ஜனாதிபதியாக இருந்த டாக்டர் ராதா கிருஷ்ணன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இநது மதம் அழைத்த வீரத்துறவியான விவேகானந்தர் கொண்டுள்ள கருத்துக்களை எடுத்து நோக்குகையில் இஸ்லாமிய மார்க்கம் தன்னகத்தே கொண்டுள்ள சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் கண்டு மெச்சுகின்றார். அமெரிக்காவில் தனது சொற்பொழிவை ஆற்றிக் கொண்டிருக்கையில் இஸ்லாம் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"இஸ்லாத்திலே வேறுபாடில்லை சாதி வேற்றுமையில்லை. கொள்கை வேற்றுமையில்லை. வர்ண வேறுபாடில்லை. பால் வேறுபாடு இல்லை. துருக்கிய சுல்தான் ஆபிரிக்காவின் அடிமைச சந்தையில் ஒரு நீக்ரோவை வாங்கி துருக்கிக்கு அழைத்து வரலாம். அந்த அடிமை முஸ்லிமாகி விட்டால் அவனுக்குப் போதுமான தகுதியும் அந்தஸ்தும் இருக்குமாயின் சுல்தானின் மகளையே அவன் மணம் புரியலாம். இந்த நாட்டில் (அமெரிக்காவில்) நீக்ரோ இனத்தவர்களையும், செவ்விந்தியர்களையும் நடத்துகின்ற முறையோடு ஒப்பிட்டுப் பாருங்கள் உண்மை புலனாகும்.

ஆண்டவனின் பெருமை அளவற்றது அத்தகைய பெருமைக்குரியவனை அவனுக்குச் சம்மான பொருட்கள் வாயிலாக வணங்கினாலும் அது வழிபாடு அல்ல. எனக் கூறி இஸ்லாம் உருவ வழிபாட்டை ஏற்க மறுக்கின்றது. அத்தகைய கருத்துக்களை ஏற்றுக் கொண்ட கவியோகி சுத்தானந்த பாரதியார் இஸ்லாம் பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்.

"ஆண்டவனின் பெருமை அளப்பரியது. அவனை வணங்காமல் அவனுக்குச் சமமாக வேறெந்தப் பொருளையும் வணங்கினாலும் வணக்கமாகாது இதனாலேயே முஹம்மது முஸ்தபா (ஸல்) அவர்கள் தம் உருவைக் கூட யாரும் வணங்கக் கூடாது. என்று கூறினார்கள்.

இந்திய சுதந்திரப் போராட்ட காலங்களில் மிகவும் முன்னின்று உழைத்த பெண்மணியான திருமதி சரோஜினி நாயுடு அவர்கள் &The Ideals Of Islamn என்ற தொகுப்பு நூலை வெளியிட்டதோடு "எந்த சகோதர அடிப்படையில் புதிய உலகத்தை நிர்ணயிக்க இன்றைய நாகரிக உலகம் விரும்புகின்றதோ அதையே ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன் முஹம்மது நபி அவர்கள் பிரச்சாரம் செய்தார்கள் என்ற இஸ்லாம் பற்றிய தனது கருத்தையும் வெளியிட்டுள்ளார்கள்.

"இஸ்லாமிய மார்க்கத்தில் போற்றப்படும் சமத்துவம், நீதி, சகோதரத்துவம் ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டொரு சமுதாயம் உருவாவதைத் தான் இந்திய அரசியல் அமைப்பு எதிர்நோக்குகின்றது."

என்று இஸ்லாம் பற்றிய தனது கருத்தை தெரிவிக்கின்றார் இந்தியாவின் முதலாவது ஜனாதிபதியாகவிருந்த இராஜேந்திர பிரசாத்.

இவ்வாறு இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி மேலும் பல இந்துமத அறிஞர்கள் தமது உயரிய கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்கள். கட்டுரை நீண்டுவிடும் என அஞ்சி அவற்றைக் குறிப்பிடவில்லை. இத்தகைய இணையற்ற இஸ்லாமிய மார்க்கத்தின் இறுதி இறை தூதராகிய முஹம்மது நபி அவர்கள் ஜனனித்ததைப் பிரதிபலிக்கும் இம் மீலாத் விழாவில் அவர் காட்டிய அன்பு, கருணை, தயவு, தாட்சண்யம், சகோதரத்துவம், ஆகியவற்றைப் பேணி எம்மிடையேயுள்ள இன, மத, குல பிரதேச வேறுபாடுகளை மறந்து ஒன்றித்திருப்போமாக.

என். ஞானவேல்,
ஆரம்பப்பிரிவு,
இரண்டாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாம் காட்டிய கல்விப்பாதை

மனிதன் தான் பெறுகின்ற கல்வியில் வேறுபாடுகள் காணப்படினும் கல்வி இன்றி எம் மனிதனும் வாழ்வது என்பது முடியாத காரியமே. மனிதனின் பிறப்பு முதற் கொண்டே அவனோடு கல்வி வேளை பிறப்பிற்கு முன்னான பருவத்திலும் குழந்தையில் கல்வியின் செல்வாக்கு ஏற்படுத்தப்படுகின்றதென்றும் கூறுப்படுவதை நாம் அறிவோம். இவ்வாறு முக்கியத்துவமுடைய கல்வி சமயங்களாலும், சிந்தனையாளர்களாலும், அறிஞர்களாலும் பல் கொள்கைகள் கொண்டனவாகக் காணப்படுகின்றது.

இஸ்லாமிய மார்க்கத்தைப் பொறுத்த வரையில் பல்வி கற்பதையும், கற்பிப்பதையும் கட்டாயமாகவும், இறைவணக்கத்திற்கு ஒப்பாகவும் கருதுகின்றது. இங்கு வறியோர், வசதி படைத்தோர், ஆண், பெண் வேறுபாடின்றி அனைவரையும் கற்கத் தூண்டுகின்றது.

மனிதன் நற்கல்வி பெற்று சிந்தனையை வளர்ப்பதற்கு சிறந்த நற் கருத்துக்களை குர்ஆன் பல இடங்களில் குறித்துக் காட்டுகின்றது. "என் இறைவா என் கல்வி ஞானத்தை அதிகப்படுத்துவாயாக." (20 : 114) என வேண்டும் படி அறிவுறுத்துவதோடு, கல்வியறிவு உடையோரும், கல்வி அறிவு அற்றோரும், சமமாக மாட்டார். (39 : 114) எனவும், அறிவுள்ள மக்களுக்குத்தான் வேதவாக்கியம் பயன் தரும் (6.99) எனவும், எவர் ஞானக்கல்வி கொடுக்கப் பெறுகின்றாரோ, அவர் நிச்சயமாக அநேக நன்மைகளைப் பெற்றிடுவார்." (2 :269) போன்ற இறை மறை வசனங்கள் கல்வியின் அவசியத்தை வலியுறுத்துவதாக உள்ளது.

இது மட்டுமல்லாது இறைவன் அறிவுடையோரை மலக்குகளின் (வானவர்களின்) நிலையை விட மேன்மைபடுத்திக் காட்டுகின்றான். அறிவினால் தான் மனிதன் வானவர்களை விடச் சிறந்தவர்களாகவும், உலகில் இறைவனின் பிரதிநிதியாகவும், ஆக்கப்பட்டிருக்கின்றான். (2 : 30) என்ற குர் ஆன் வசனம் இதனைத் தெளிவுபடுத்திக் காட்டுகின்றது.

கற்றவர்களை ஞானமுடையோர் என்றும், அறிவொளி பெற்றோர் என்றும், கற்றோர்க்கு ஈடாக யாரும் இல்லை என்றும், மேலும் இறைவன் கூறுவது அறிவு பெற்ற மக்களை உயர்ந்த நிலையில் பகிரங்கப்படுத்துவதாகும். இவ்வாறு இறைவன் தன் மறையில் கல்வி பற்றி பல கருத்துக்களை வழங்கியும் சிறப்பாக்கியுள்ளான். இத் திருமறையை அண்ணல் நபி (ஸல்) அவர்கட்கு வழங்கும் போது, ஓதுவீராக, வாசிப்பீராக என்ற கருத்தினைக் கொண்ட இக்ரஉ என்ற சொல்லையே முதலில் வழங்கியதைக் கொண்டும் எழுதுகோலின் மீது ஆணையாக எனத் தொடங்கும் ஓர் அத்தியாயத்தையும் கொண்டு நிகழ்வதைக் கொண்டும் கல்விக்கு இஸ்லாம் அளிக்கும் முக்கியத்துவத்தினை அறிய முடிகின்றது.

கல்வியைப் பெறுவது மாத்திரமல்லாது பெற்ற கல்வியைக் கொண்டு ஆய்வுகளை மேற்கொள்ளும் படியும் இஸ்லாம் கூறிக் கொண்டிருக்கிறது. அறிவுடையோருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றது. சிந்திக்கவேண்டாமா போன்ற சொற் பிரயோகங்களைக் கொண்டு வானவியல் புவியியல், உயிரியல், பௌதீகவியல், சட்டம், நீதி, நிர்வாகம், பொருளியல் அரசியல், மருத்துவவியல், கணக்கியல் போன்ற உலகின் பல்வேறு துறைகளையும் ஆய்வு செய்யும்படி கூறுகின்றது.

கல்வியானது செல்வம், வீரம், ஆகிய இரண்டையும் வென்று விடக்கூடியது. நபி ஸுலைமான் (அலை) அவர்களிடம் இறைவன் கல்வி, செல்வம், வீரம் ஆகிய மூன்றையும் கொடுத்து இவற்றில் எதையாவது ஒன்றைத் தெரிவு செய்து கொள்ளும்படி கூற அதற்கு நபி ஹுலைமான் (அலை) அவர்கள் கல்வியையே தேர்தெடுத்தார்கள். இதனால் இறைவன், செல்வம், வீரம் இரண்டையும் அவருக்கும் பரிசாகக் கொடுத்தான் என வரலாறு சான்று பகிர்கின்றது.

குர் ஆனின் ஒளிவிளக்காய் வாழ்ந்து போற்றும் நாயகம் (ஸல்) அவர்கள் கல்வி பெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய அவசியத்தை மிகவும் வலியுறுத்தியவராய் விளங்கியதோடு, ஒரு சிலரின் தனி உடமையாகக் காணப்பட்ட கல்வியினை பொது உடமையாக்கி யாவரும் கல்விபெற வேண்டும் என எடுத்தியம்பினார்கள். மக்களை அறிவுள்ளவர்களாக்க அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அன்று செய்த பணிகளும், அவர் பகன்ற பொன்மொழிகளும் எமது கல்வியின் முன்னேற்றத்திற்கும், வாழ்வின் சிறப்பிற்கும் என்றும் ஒளிகாட்டும் மணிவிளக்காய் இருந்து கொண்டிருப்பதை அறிய முடிகின்றது.

நபிகளாருடைய காலத்தில் பள்ளிவாசல்களையே நபியவர்கள் பாடசாலையாகவும் செயற்படுத்தி வந்ததோடு சிறந்த நல் ஆசிரியர்களாகவும், மாணவரின் சிந்தனையைத் தூண்ட வைக்கும் முறையாக கற்பித்தல் நடவடிக்கைகளை ஒழுங்கமைத்து ஆன்மீக உலகாயத விடயங்களைக் கற்பித்தார்கள். அறியாமையை விட கொடிய வறுமை வேறில்லை என்பதும், அறிவை விடச் சிறந்த செல்வம் இல்லை என்பதும், அறிவு உலகத்தை உருவாக்கும். அறிவைத் தேடும் போது, தொலைந்து விட்ட பொருட்களைத் தேடுவது போல் தேட வேண்டும் என்றும், அண்ணல் அவசுயத்தை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

அது மட்டுமல்லாது மனிதன் எப்போதும் கல்வியுடன் தொடர்புடையவனாக இருக்க வேண்டும் என்பதற்காக பின்வருமாறு கூறுகின்றார்கள். "தொட்டில் தொடக்கம் புதைகுழி வரை அறிவைத் தேடுங்கள்" கற்பவனாக இரு, அன்றேல் கற்பிப்பவனாக இரு, அன்றேல் நோக்குபவனாகவாவது இரு. ஆனால் நான்காம் மனிதனாக இராதே" என்று கல்வி மனிதன் வாழ் முழுவதும் பெறவேண்டியது. அவசியத் தேவை என்பதனை சுட்டிக்காட்டினார்கள்.

கல்வியின் மூலம் கிடைக்கப்பெறும் பயன்களை நபி (ஸல்) அவர்கள் கூறும் போது, "நீங்கள் கல்வியைத் தேடுங்கள் அதனைத் தேடுபவன் தூய செயல் செய்தவனாவான் கல்வியைப் போற்றிப் பேசியவன் இறைவனால் புகழப்பட்டவனாவான். அதை நாடிச் சென்றவன் இறைவனை தோத்திரம் செய்தவனாவான். அதைக் கற்றுக்கொடுப்பவன் தர்மம் செய்தவனாவான். கல்வியை அடைந்தவனுக்கு நன்மை எது. தீமை எது என்பதனை அறிய முடிகின்றது. சுவர்க்கப்பாதைக்கு இலக்காக அமைகின்றது. இன்பத்திற்கு வழிகாட்டுகிறது. துன்பத்தின் போது பொறுத்துக் கொள்ள சக்தி அளிக்கிறது. நண்பர் கூட்டத்தில் அது ஓர் ஆபரணம். பகைவர் மத்தியில் அது கேடயம் அறிவின் துணையால் அடியான் நன்மையின் உச்சத்தை அடைகின்றான். உயர்ந்த பதவியைப் பெறுகிறான். இவ்வுலகில் பேரரசர்களின் தோழமையையும், மறுஉலகில் பேரின்ப வாழ்க்கையையும் அவன் பெறுகின்றான்." என்பன போன்ற கருத்துக்களை நபியவர்கள் கூறியிருப்பதாவது கல்வியின் மூலம் எவ்வாறான நன்மைகள் கிடைக்கப் பெறுகின்றன என்பதையும், பல்வேறு வகைகளிலும் தமக்குப் பாதுகாப்பாக விளங்குவதையும் தெளிவுபடுத்துவதாய் உள்ளது.

ஆண்கள் மட்டும் தான் கல்வி பெற வேண்டும் என இஸ்லாம் கூறவில்லை. பெண்களும் கல்வி பெற வேண்டும் என வலியுறுத்திக் கூறுகின்றது. பெற்றோர் தமது பிள்ளைகளில் ஆண், பெண் இருபாலருக்கும் பாரபட்சமின்றி சம அளவிலான கல்வியை வழங்க வேண்டும் என்று கூறுகின்றது. கல்வியை வழங்காத பெற்றோருக்கு இறைவன் வறுமையில் எதைக் கற்றுக் கொடுத்தாய் எனக் கேள்வி எழுப்புவான். அதற்கு அவர்கள் பதில் சொல்ல முடியாமல் திண்டாடுவார்கள். எனவே தான் இறைவனின் கூற்றுக்கமைய ஆண், பெண் இருபாலருக்கும் கல்வி அவசியமாகின்றது.

தனி மனித வாழ்க்கைக்கும் கல்வி இன்றியமையாததொன்றே, இதன் மூலம் ஈடேற்றம், அபிவிருத்தி என்பன கிடைக்கப் பெறுகின்றது. இதனால் நாட்டில் நற்பிரஜைகளை உருவாக்க முடியும். என்பதை இஸ்லாம் விளக்குகின்றது. எனவே இஸ்லாம் கல்விக்கு அளித்த முக்கியத்துவத்தினை உற்று நோக்கல் சாலச் சிறந்தது.

ஜனாப். எம்.மன்சூர் அலி,
இரண்டாம் வருடம்,
உடற்கல்விப் பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய கண்ணோட்டத்தில் பெண்கள்

பல்வேறுபட்ட பெண்களின் நிலை முன்னேற்றகரமாக உள்ள இக்கால கட்டத்தில் பெண்களை அடிமை நிலையில் வைத்திருப்பதுபோன்ற நிலை இன்றும் எம் மத்தியில் இல்லாமல் இல்லை. இவ் விடயத்தில் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் பெண்களின் பங்கு சமூகத்தில் எந்தளவு தூரம் செல்வாக்கு செலுத்தியுள்ளது என்பதனை நோக்குவது சாலச் சிறந்ததாகும்.

மேலைத்தேய நாடுகளும் இஸலாத்தில் பெண்ணுரிமை பற்றி தப்பான அபிப்ராயங்களை பெற்றிருப்பதும், தவறான பிரச்சாரங்களை மேற் கொண்டிருப்பதும், கவனத்திற்கு எடுக்க வேண்டிய விடயமாகும். இவ்வாறு தவறான பிரச்சாரங்களை மேற்கொள்பவர்கள் தங்கள் நாடுகளில் தங்களாளேயே பெண் சமுதாயத்திற்கும் பல சாபக் கேடான நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டிருப்பதை நாம் வேதனையாகக் கருத வேண்டியுள்ளது.

பிரபுத்துவக் காலம், கைத்தொழில் புரட்சி போன்ற கால கட்டங்களில் பெண்கள் எவ்வாறு நடாத்தப்பட்டார்கள் என்பதனை அக்காலப் பெண்களின் நிலை பற்றிய ஆய்வுகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். கிரேக்க, உரோம இராட்சியங்களில் குறிப்பிட்ட சில காலப்பகுதியில் பெண்கள் உயர்ந்த நிலையில் இருந்தது கூட பெண்களுக்காக வழங்கிய உரிமை நிலைகளில் அல்ல. தலைநகரில் வாழ்ந்த பிரபல்யம் மிக்க பெண்களுக்கென்று வழங்கப்பட்டவையாகும். அதுவும் சில சொந்தப் பண்புகள், விருந்து வைபவங்களில் உயிர் நாடியாத் திகழ்ந்த சில பண்புகள், காரணமாக அவர்கட்கு அளிக்கப்பட்ட உயர்ந்த நிலையிலாகும்.

முதலாவது உலகப் போரின் போது அதிகமான ஆண்கள் இறந்தும், நோய்வாய்ப்பட்டும், அங்கவீனமாகியமையினாலும், பெண்களே அவ்விடத்தை நிரப்புவதற்கான நிலையேற்பட்ட போது கடுமையான உழைப்போடு பாலியல் இம்சைகட்கும் ஆளாக்கப்பட்டார்கள். இங்கு செய்கின்ற தொழிலுக்கான சம்பளம் ஆண்களை விடக் குறைவாகவே இருந்தது. இதன் பின் ஏற்பட்ட புரட்சியின் போது ஆண்களுக்குச சமமான சம்பளத்தினை பெற்றது மட்டுமே. ஏனைய நிலைமைகள் தொடரவே செய்தன. இதனோடு பெண்கள் தமது சிறந்த நாம நிலையினை இழந்து குடும்ப வாழ்க்கையில் அனுபவிக்கும் மகிழ்சியினையும் பறி கொடுத்தவர்களாயினர்.

நவீன உலகில் பெண்களின் நிலையை எடுத்து வேறாக்கினால் மிகவும் பிரச்சினைக்குரிய இரு விடயங்கள் காணப்படுவதை அவதானிக்கலாம்.

1) பெண்களுக்குரிய உரிமைகளை வழங்காது சதந்திரமற்றவர்களாக பெண்களைக் கணிக்கும் முறை.

2) சமத்துவம் என்ற பெயரில் பெண்களின் சிறப்பியல்புகட்கு மேலான உரிமைகளை வழங்கிய நிலை.

முதற்காரணம் எவ்வளவு கீழ்த்தரமான செயல் என்பது எமது சிந்தனையில் உடனே பளிச்சிடுகின்றது. இரண்டாவது விடயத்ததைத்தான் நாம் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளோம்.

மனிதனுடைய உடற்கூற்றியலும், உள இயல்புகளும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வித்தியாசமான அமைப்பிலேயே அமைந்துள்ளதனை யாரும் மறுக்கமுடியாது. எனவே பெண்களுக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகள் அவர்களின் நிலை தாண்டுதலும் நன்றன்று, இவ்வாறில்லாது பெண்களின் இயல்புகட்கு மேலால் சமத்துவம் என்ற பெயரால் உண்மையான நிலைதனை உணர்ந்து கொள்ளாது வழங்கப்பட்ட உரிமைகளின் பலாபலன்களை ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் பெண்களின் தற்போதைய நிலைகளை மேலோட்டமாகப் பார்க்கின்ற போதே அறிய முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான இரு பிரச்சினைகட்கும் விடைகாணும் அம்சமாக பெண்களுக்கான உரிமைகள், சலுகைகள், பெண்களுக்கேயான இயல்புகட்கு ஏற்ற வகையுல் இஸ்லாத்தில் வழங்கப்பட்டு இருப்பது எதிர்காலத்திலும் முன்னேற்றகரமாக அமைய வழி கூறுகின்றது. அதனால் மேற்குலக நாகரீகத்துக்கு உட்படுகின்ற இஸ்லாமியப் பெண், தனது இஸ்லாமியத் தன்மையை தனது ஆன்மீகத்தை, ஏன் தனது கற்பையே பாதுகாத்துக் கொள்வதற்கு உத்தரவாதமளிக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு, அதற்காக ஒரு உரிமைப் போராட்டத்தையே நடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகின்றாள்.

இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் சமத்துவம் பற்றி நோக்கும் போது ஆண்களின் உடற்கூற்றியல் உளவியல் தன்மைகட்கு ஏற்ற விதத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் சகல விதத்திலும் அனுமதிக்கப்படும் உரிமைகளைக் கொண்டே சமத்துவ நிலை பேணப்படுகின்றது.

*"அல்லாஹ் மனிதர்களைச் சிருஷ்டித்த வழியே*

*அவனுடைய இயற்கை வழி. அவனுடைய சிருஷ்டி*

*-யில் எவ்வித மாற்றமும் இல்லை"* (30 : 30)

என்றற அல்குர்ஆன் கூற்று மனிதனின் இயற்கையான இயல்புத் தன்மையை வெளிப்படுத்துவதாக உள்ளது.

மனித சமூக முன்னேற்றப் பாதைக்கு ஆண்களும், பெண்களும் முக்கியமானவர்கள். இதன் போது ஒழுக்க நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன. இப்படியான அம்சங்களை தெளிவாக்கி உள்ள இஸ்லாத்தில் ஆண்கள், பெண்கள், உயர்வு, தாழ்வு என்ற கூற்றுக்கு அறவேனும் இடமளிக்கவில்லை.

கருத்து வெளியிடும் உரிமை ஆண்களைப் போன்றே, பெண்களுக்கும் உண்டு. இவ்வுரிமையை நபி (ஸல்) அவர்களுடைய காலத்திலேயே பெண்கள் பெற்றிருந்தார்கள். ஒரு சமயம் ஸைனப்(றலி) என்ற பெண்மணி நபியவர்களிடம் வந்து தூதரே! நாம் எதிர்பார்க்கவே இல்லை" என்றனர் தோழர்கள்.

அன்று ஜைனப்(றலி) அவர்கள் கேட்ட அந்தக் கேள்வியே பெண்களின் கருத்துரிமையை இஸ்லாம் எவ்வாறு பேணுகின்றது என்பதற்கு தகுந்த சான்றாகும். இவ் வினாவிற்கு விடையளித்த நபியவர்கள்,

"ஒரு பெண் அல்லாஹ்வையும், அவனுடைய நேர்வழியையும் நம்பியேற்று ஜிஹாத்திற்காகப் (புனிதப் போர்) புறப்படும் தன் கணவனுக்கு ஆக வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து அவர் வெளியே சென்றது முதல், வீடு திரும்பும் வரை அவரின் பிள்ளைகளைப் பராமரித்துக் கொண்டு வீட்டிலிருந்தால் அவளுக்குத் தன் கணவன் செய்த நற்கூலி கிடைக்கின்றது. இச் செய்தியை உமது தோழிகளான

ஏனைய பெண்களுக்கும் கூறுவீராக என்று கூறினார்கள். கல்வி கற்பதில் கூட ஆண்களுக்குள்ள உரிமை பெண்களுக்கும் உண்டு.

*" அவர்களுக்கு (பெண்களுக்கு) கல்வி கற்பியுங்கள்"*

*அல்லாஹ்வைத் தூய்மைப் படுத்துமாறு அவர்கட்கு தவுங்கள்,*

*என முஹம்மது நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.*

கல்வி பற்றி அல்குர் ஆன் வசனங்கள் யாவும் ஆண்களையும், பெண்களையும் பொதுவாகக் குறிப்பிடுகிறது.

அன்னை ஹப்ஸா (றலி) அவர்கள் ஷிபா உந்தவிய்யா எனும் பெண்மணியிடம் அரபு மொழி பயின்று வந்தார்கள். இவர்கள் மணமுடித்த நபியவர்கள் தொடர்ந்து கல்வியைக் கற்கும்படி வேண்டிக் கொண்டார்கள் அது மாத்திரமன்றி அதற்கான ஏற்பாடுகளையும் செய்து வைத்தார்கள். இவ்வாறான கல்வியில் மாத்திரமல்லாது அன்று பெண்கள் யுத்தப் பயிற்சிகளிலும் தேர்ச்சி பெற்று விளக்கினார்கள் என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துரிமை பற்றிப் பார்த்தால் கூட ஆண்களுக்குத் தம் சொத்துக்களில் உரிமையுண்டு. இதனையே அல்குர்ஆன் விளக்குகின்றது.

"ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்தவை உரித்தானவை,

பெண்களுக்கும் அவர்கள் சம்பாதித்தவை உரித்தானவை" (4 : 32)

வாரிசுரிமையிலும் ஆண்பெண்களுக்கும் பங்குண்டு. "பெற்றோரும், நெருங்கிய உறவினர்களும் விட்டுப் போனவற்றில் ஆண்களுக்கும் பங்குண்டு. அவ்வாறே பெற்றோரும் நெருங்கிய உறவினரும் விட்டுப் போனவற்றில் பெண்களுக்கும் பங்குண்டு. அது கொஞ்ச மாகவோ, அதிகமாகவோ இருந்த போதிலும் இது அல்லாஹ்வால் விதிக்கப்பட்ட பாகமாகும்."

(4 : 07)

திருமண விடயத்திலும் இரு பிரிவினருக்கும் உரிமை உண்டு உரியவர்கள் தெரிவு செய்யும் கணவனை தக்க காரணங்களோடு மறுப்பதற்கும் உரிமை வழங்கியுள்ளதோடு விவாக விடுதலை சம்பந்தமான உரிமையையும் வழங்கியிருக்கின்றது. அதே வேளை இவ்விவாக விடுதலை தன் விருப்புக் குறைவான செயல் என்பதை அல்லாஹ் எடுத்தியம்பியுள்ளான். இங்கு திருமண வாழ்க்கை மிக மோசமான நிலைக்குத் தள்ளப்படும் நிலை அல்லது ஒருவரது நோய் இன்னொருவரை அழித்துவிடக் கூடிய நிலை என்பன ஏற்படுமாயின் விவாக விடுதலை இஸ்லாமிய உலகில் மிக மிக அரிதாகவே காணப்படுகின்றது என்பதை நோக்குவது பயனுடையதாகும்.

கற்பு நிலையினைப் பொறுத்த வரையில் பெண்களுக்கு மாத்திரமன்றி, ஆண்களுக்கும் கற்புண்டு என்று இஸ்லாம் வலியுறுத்துகின்றது.

அல்லாஹ் தன் திருமறையில் நபியே! விசுவாசிகளான அண்களுக்கு நீர் கூறும், அவர்கள் தங்கள் பார்வைகளைக் கட்டுப்படுத்தவும், தங்கள் கற்பையும் பாதுகாத்துக் கொள்ளவும், இது அவர்களை பரிசுத்தமாக்கி வைக்கும். நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் செய்பவற்றை நன்கறிந்தவனாக உள்ளான். விசுவாசம் கொண்ட பெண்களுக்கு நீர் கூறும், அவர்களும் தங்கள் பார்வைகளைக் கட்டுப்படுத்தவும், தங்கள் கற்பையும் பேணிக் கொள்ளவும், தங்கள் தேகத்தில் வெளியே தெரியக் கூடியவற்றைத் தவிர, தங்கள், அழகையும், அலங்காரங்களையும் வெளிக்காட்ட வேண்டாம். தங்கள் முந்தானைகளால் மார்கங்களையும், மறைத்துக் கொள்ளவும். தம் கணவர் தந்தை, கணவரின் தந்தை, குமாரர், சகோதரிகளின் குமாரர், தங்களுடைய தொடர்புடைய பெண்கள், தம் வலக்கரம் சொந்தமாக்கிய அடிமைகள் அல்லது பெண்களைப் பற்றிய விருப்பற்று தங்களோடு வாழும் ஆண்கள், பெணகளின் மறைவான அங்கங்களை அறியாத சிறுவர் ஆகியோரை தவிர, மற்றொருவருக்கும் தமது அழகு அலங்காரங்களை வெளிக்காட்ட வேண்டாம். அழகு, அலங்காரங்களை, அறிவிக்கத்தம் கால்களைத் தட்டித் தட்டி நடக்கவும் வேண்டாம். விசுவாசிகளே நீங்கள் வெற்றி பெறுவதற்காக எல்லோரும் அல்லாஹ்வின் பால் மீளுங்கள்."

(24, 30 : 31)

என அல்லாஹ் தெளிவாக்கியுள்ளான். இவ்வாறான ஒழுக்கச் செயற்பாடுகள் கடைபிடிக்கப் படாத பட்சத்தில் எவ்வாறான நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதனை விளக்க வேண்டிய அவசியமில்லை, இஸ்லாம் உரிமையையும், கௌரவத்தையும், முதன் முதலில் எல்லாத் துறைகளிலீம் பெற்றுக் கொடுத்தது. பெண்ணின் கைகளை உயர்த்தி சுதந்திரத்தையும், வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுத்தது. பெண்ணிற்கான உரிமைகள் 'கட்டளைகள்' மூலமாகவும் நபி (ஸல்) மூலமாகவும் பேணிப் பாதுகாக்கப்பட்டன. என்பதையும் அறிவுள்ள எவராலும் மறுக்க முடியாது.

ஜனாப். ஏ. எம். ஸுபைர்,

உடற்கல்விப் பிரிவு,

இண்டாம் வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமத்துவ வழியில் சாந்தி மார்க்கம்.

இந்தப் பரந்த உலகில் வாழும் இறைவனின் அடியார்கள் எந்த நாட்டை, எந்த வம்சத்தை எந்த இனத்தை, எந்த மொழியைச் சார்ந்தவர்களாக இருப்பினும் அவர்கள் அனைவருக்கும் இறைவன் தன் அருட் கொடைகளை வழங்கி மனிதர்களை மனிதர்களாக வாழ வழி சமைத்துக் கொடுப்பதே அவனது செயலாகும். காற்று, நீர், சந்திரன், சூரியன் போன்ற எல்லா அருட் கொடைகளையும் மனிதனுக்கு வழங்கி வாழ்தல், இறத்தல், உண்ணல், உறங்கல், பேசுதல், செவிமடுத்தல் ஆகியவற்றிற்கான வழிமுறைகளையும் அருளி இருக்கின்றான். இறைவன்.

இவ்வாறு மனிதனுக்கு பொதுவாகவே தன் அருட்கொடைகளை வழங்கி உலக மக்கள் யாவரும் சமமானவர்கள் என்பதை இறைவன் எடுத்துக்காட்டுகின்றான். இவை மனிதனுக்கோ அன்றி குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தினருக்கோ சார்பாய் மனிதன் ஏற்படுத்திக் கொள்கையில் சமத்துவ நிலை நிலையற்றதாகி விடுகின்றது.

இவ்வாறான நிலையில் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் சமத்துவ நிலை பற்றிப் பார்ப்பதாயின் அதன் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும் போது நடைமுறையில் கடைபிடிக்கப்படும். வழிமுறையைக் கொண்டும் அறியலாம். இதனைப் பார்க்கின்ற போது ஏனைய கோட்பாடுகளிலிருந்து இஸ்லாமியச் சமத்துவக் கோட்பாடு வேறுபட்ட அமைப்பினைக் கொண்டுள்ளது என்பது தெளிவாகின்றது.

இதற்கு, முன் உதாரணமாக வாழ்ந்து காட்டிய அண்ணல் நபியவர்கள் மனித சமூகத்தில் அன்று நிலவிய கொடுமைகள், குலபேதம் என்பவற்றை இல்லாமல்ச் செய்து புதிய சமுதாயத்தை இவ்வுலகில் உருவாக்கினார். இவ்வுலகிலுள்ள அனைவரும் பூசல்கள், பொல்லாக்குகள் இல்லாது எல்லோரும் இறைவன் படைத்த மக்கள் என்ற வாழ்க்கை முறையை உருவாக்கித் தந்தார். இவர் காட்டிய வழியிலான சமுதாயம் உயிரோட்டமுள்ள அடிப்படைப் பண்புகளைக் கொண்டு விளங்கியது. இன்றும் அதன் தாக்கத்ததை நாம் இஸ்லாமியரிடையே காணக் கூடியதாக உள்ளது.

மனித சமூகம் தன் உரிமைகளைக் கேட்டதற்காகவும், பிறவிடயங்களினாலும் தம் உடை, உடைமைகள் மாத்திரமல்ல உயிர்களையும் இழந்த சம்பவங்களை அறிய முடிகின்றது. இவ்வாறான நிலையிலிருந்து மீட்சி பெறுவதற்கான வழியை இஸ்லாம் வாழ்க்கையில் இணைத்துள்ளது. உதாரணமாக இஸ்லாமியரின் தொழுகை முறையை எடுத்து நோக்கினால் இதனை அறிய முடியும்.

எல்லோரும் அல்லாஹ்வின் அடியார்கள் என்ற உணர்வோடு எல்லோரும் சமமாக நின்று ஏழை பணக்காரன், முதலாளி, தொழிலாளி, கறுப்பர், வெள்ளையர், உயர்குலத்தோர், இழி குலத்தோர் எனப் பாகுபாடின்றி எல்லோரும் சமத்துவமான முறையினைக் கடைப்படித்து தோளோடு தோள் சேர்ந்து நிற்பது மாத்திரமல்லாது நிற்கும் வரிசை நிலையிலும் இடம் விடக்கூடாது. என்ற நிலைமையையும், எந்தப் பெரிய அந்தஸ்த்து உடையவராக இருப்பினும் அவர் முன் வரிசையில் தான் நிற்க வேண்டுமென இல்லாமல் முந்தியவன் யாராக இருப்பினும் அவனுக்கு முதலிடம் என்ற முறையே இங்கு காணப்படுவதை அறிய முடிகின்றது.

நீதி நெறிகளைக் கடைப்பிடிப்பதிலும் இஸ்லாம் அனைவருக்கும் சமமான நிலமையினையே வழங்குகின்றது. ஆள்பவராக இருந்தால் என்ன, சாதாரண குடிமானாக இருந்தால் என்ன, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதையே வலியுறுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசில்லா மாநபியின்
விழாவை மனமார வாழ்த்துகின்றோம்

# Plawoos Hotel

☆

★☆

★☆☆

MILL ROAD

**VAVUNIYA.**

அனைவருக்கும் அன்பு கனிந்த
மீலாத் நல் வாழ்த்துக்கள்

*

*

* * *

# A.S. ABDUL KADER

MAHARAMBAIKULAM

**VAVUNIYA.**

" தீமைகளில் மிகக் கொடியது கற்றறிந்த அறிஞர்களின் தீமையாகும். நன்மைகளில் மிக மேலானது கற்றறிந்த அறிஞர்களின் நன்மையாகும்." நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்மல் நபியின்
சிறப்பு விழா
சிறப்பாய் அமைய
வாழ்த்துகிறோம்.

NEW LUCKY PLAZA
14, MILL ROAD
VAVUNIYA

மாசில்லா மா நபியின்
விழாவை மனமார
வாழ்த்துகிறோம்

Umaraas Textiles

58 THARMALINGAM ROAD

VAVUNIYA.

"தர்மத்தினால் பொருள் குறைந்து விடாது. மன்னிப்பதினால் சிறப்புக் குறைந்துவிடாது. தாழ்மையினால் உயர்வு குறைந்து விடாது."

நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீலாத் விழா
சிறப்புற வாழ்த்துகிறோம்.

**ASIAN HARDWARES**
No. 37 MILL ROAD
VAVUNIYA.
T.P. 024- 2336

வள்ளல்
நபி விழா
வளமாய் அமைய
வாழ்த்துகிறோம்.

**Happy Tex**

66. THARMALINGAM ROAD
VAVUNIYA

"மூன்று நபர்கள் சொர்க்கம் பிரவேசிப்பதில்லை. (1) மது அருந்துபவன் (2) பெற்றவர்களுக்கு தீங்கு இழைப்பவன் (3) விபச்சாரங்களுக்கு பெண்களைக் கூட்டிக் கொடுப்பவன்."

நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணல் நபியின் அவதார விழாவிற்கு
அன்பு கனிந்த
வாழ்த்துக்கள்

ரசீது சாப்பாட்டுக் கடை.

பஸார் வீதி,
வவுனியா.

மறை ஏற்ற
மா நபி விழாவை
மகிழ்வுடன் வாழ்த்துகிறோம்

❋
❋
❋

P.S. ABDULLA & SONS

THARMALINGAM ROAD

VAVUNIYA.

"உமக்கும் பேராசைக்கும் நான் எச்சரிக்கை செய்கின்றேன். ஏனெனில் பேராசையானது (உடன் நிகழக்கூடிய) பெரும் தந்திரமாகும்."

நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் நன்மை, தீமைகளைப் பேணியே இஸ்லாமியச் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதனையே வலியுறுத்துகின்றது. மனிதனின் நன்மை, தீமைகளைப் பேணியே இஸ்லாமியச் சட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புரிகின்ற முறையில் நடைபெறாது அமைதியான சமூக வாழ்க்கையை சீர்குலைக்க முனைபவர்களுக்கு தண்டனையினை, போதனையில் மட்டும் விட்டு விடாமல் செயலிலும் செய்வது என்றால் அது இஸ்லாமாகத் தான் இருக்கும். இது தண்டனை வழங்குவதில் பாரபட்சம் காட்டுவதை மறுத்துள்ளது. சில சமூகத் துரோகக் குற்றங்களுக்குத் தண்டனைகள் நிறைவேற்றுவதன் மூலமே இவ்வுலகில் உள்ள உரிமைகளைக் காப்பாற்ற முடியும். இதற்குச் சான்றாக இஸ்லாமிய சரித்திரத்திலேயே காண்கின்றோம். இச் சட்டங்கள் ஏனைய உலக சட்டங்களை விடாமல் வெற்றியளிக்க கூடியதாக இருப்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

இத்தண்டனைகளை வழங்கும் இஸ்லாம் மனிதன் அநியாயமாகத் தண்டிக்கப்படும் நிலையிலிருந்து விடுபட அக்கறை கொள்கின்றது. இந்த நிலையில் ஒருவனைப் பற்றி குற்றச்சாட்டு விதிக்கப்பட்டால் அதனைப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும். இல்லாவிட்டால் குற்றம் சாட்டியவர்க்குகே தண்டனை வழங்கப்படுமென்று கூறுகின்றது. இந்த நிலையில் இஸ்லாம் அநியாயமாக ஒரு உயிரை வீணாகப் போக்கிக் கொள்ள தடை விதிக்கின்றது எனலாம்.

இஸ்லாம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கொடுத்துள்ள சமத்துவத்தில் இருவருக்கும் வேறுபாட்டு வாதமே கிடையாது ஏனெனில் இருபாலரின் சகல வேளைகளிலும் சமூகத்திற்குத் தேவையாகவும், அத்தியவசியமாகவும் ஆக்கியுள்ளது. இதற்கு ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்களையும், அடிப்படை விதிகளையும் பேணும் போது இருபாலரின் சகல வேலைகளிலும் சமூகத்திற்குத் தேவையாகவும், அத்தியவசியமாகவும் ஆக்கியுள்ளது. இதற்கு ஒழுக்கக் கட்டுப்பாட்டுகளையும், அடிப்படை விதிகளையும் பேணும் போது இரு பாலரின் சமத்துவமும் பேணப்படுகின்றது. இதுதான் சமத்துவம். ஆணுக்கும், பெண்ணுக்கும், சொல்லுரிமை, சொத்துரிமை போன்றவற்றை எவ்வாறு வழங்கியுள்ளது என்பதைப் பார்க்க வேண்டுமே தவிர பெண்களை அடக்கி , ஒடுக்கி, கூட்டில் கிளி போல வைத்திருக்க இஸ்லாமிய வேதம் கூறவில்லை. என்பதை மனதில் கொள்ள வேண்டும். இச்சமத்துவ நிலை ஆண், பெண் இயற்கை அமைப்புகளுக்கு ஏற்ற விதத்தில் வழங்கப்படுகின்றது. என்பதைக் குறிப்பிட வேண்டும். இவற்றை மறந்து வெறும் வேதாந்தம் பேசுவதில் எநதவிதமான பயனுமில்லை.

ஸக்காத் வரி இது இது இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்று. இது ஸக்காத் நிபந்தனைகளுக்குட்பட்ட ஒவ்வொரு முஸ்லிம்களும் செலுத்த வேண்டியதொன்றாகும். இதன் மூலம் பெறப்படும் வரியை அனாதையர் முதலானோருக்கு செலுத்தப்படுகின்றது. முஹம்மத் (ஸல்) அவர்களுடைய காலத்தில் இவ்வரியை அனாதையர் முதலானோருக்கு செலுத்தப்படுகின்றது. முஹம்மத் (ஸல்) அவர்களுடைய காலத்தில் இவ்வரி அறவிடப்பட்டு அவர் அதனை உரிய மக்களுக்கு சீக்கிரமாக ஒப்படைத்து உள்ளார் என்று அறிய முடிகின்றது.

இஸ்லாத்தின் பொருளியலில் சமத்துவம் என்று நோக்கும் போது அருமையான முறையில் இறைவனின் வேண்டுதலுக்கு ஏற்ப பொருளியலில் சமத்துவத்தை அங்கு காண முடிகின்றது. மனம் போன போக்கெல்லாம் சென்று பொருள் ஈட்டிக் கொள்வது சிலரின் மனப்பாங்காக இருக்கின்றது. வட்டிக்கு கொடுத்து குட்டி போடும் வட்டியை தடுத்து நிறுத்தியும், வர்தகத்தின் மோசடிகளை தடுத்தும் உள்ளது. அளவையில், நிறுவையில் வர்த்தக ஒப்பந்தங்களில் உண்மையும், நேர்மையும், வாய்மையும் பின்பற்றப்பட வேண்டும் என்றும் மோசடி செய்பவன் நிச்சயமாக ஒரு முஸ்லீமாக இருக்க முடியாது என்றும் இஸ்லாமிய தேசத்தில் அருமையான வாக்கு காணப்படுகின்றது. மனச்சாட்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று உள்ளது. அந்த மனச் சாட்சிக்கு மாறாக எந்த விதத்திலும் கொள்ளை இலாபம் பெற முடியாது. தனக்கு அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் மட்டும் பொருள் இருக்க வேண்டும். அதற்குப் பின் மிகுதியாக உள்ள அனைத்துப் பொருட்களையும் வைத்து இருக்கக் கூடாது. அவற்றை நீ அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும் கொடு என்ற அருமையான ஒரு கோட்பாட்டை நிறுவிய பெருமை இஸ்லாமியத்தில் காண்பதை நினைக்கும் போது இது ஏனைய மதங்களை விட ஒரு தர்ம மார்க்கமாக இருப்பது எமக்கு ஒரு வழிகாட்டியாக இருக்கின்றது எனலாம்.

இஸ்லாம் ஒரு விரிவான பங்கீட்டுச் சமத்துவத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு. ஒருவர் இறந்து விட்டால் அவருக்கு உரித்தாகவுள்ள அனைத்துப் பொருட்களையும் தனிநபர் ஒருவரிடம் இருக்காமல் உரித்துடையோர்கள் அவற்றிற்கு பங்குதாரர்களாக அமைய வேண்டும் என்பதாகும். இது ஒரு விரிவான பங்கீட்டு முறையினை மனித குலத்துக்கு எடுத்துக் காட்டுகின்றது.

இவை மாத்திரமன்றி தாம் உண்ணும் உணவிலும் அணியும் ஆடையிலும் சமத்துவம் காணப்படவேண்டும். இவற்றில் வசதியுள்ளவன் வசதியற்றவருக்குக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளான். "அண்டை வீட்டான் பசித்திருக்க தான் மட்டும் உண்பவன் உண்மையான முஸ்லிமாக மாட்டான் என்ற கருத்தில் எடுத்துக் கொள்வதைத் தாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

எனவே இஸ்லாமிய வாழ்க்கைத்திட்டமானது ஏனைய மதங்களிடையேயும் தனுநபர்களிடையேயும் காணப்படாத சமத்துவச் செயற்பாட்டு அம்சங்களைக் கொண்டுள்ளது என்பதனை நாம் நன்கு அறியக் கூடியதாகவுள்ளது.

உசாத்துணை நூல்
சமத்துவம்

நபினை / பரமலிங்கம் வாகீஸ்வரி,
ஆரம்பப்பிரிவு,
இரண்டாம் வருடம்.

"என்னுடைய உம்மதவர்களில் சிறந்தவர்கள் அவர்களுடைய அறிஞர்களாவர். அவர்களுடைய அறிஞர்களில் சிறந்தவர்கள் இரக்கம்உடையவர்களாவர். அறிவீராக! நிச்சயமாக, அல்லாஹ் அறிவில்லாத ஒருவருக்கு ஒரு பாவத்தை மன்னிப் பதற்கு முன் ஒரு அறிஞருக்கு நாற்பது பாவங்களை மன்னிக் கின்றான். அறிவீராக! நிச்சயமாக இரக்கமுடைய ஒரு அறிஞர் ஒளிதரக் கூடிய நட்சத்திரம் பிரகாசிப்பது போன்று தமது ஒளி, உதயகிரிக்கும் அஸ்தகிரிக்குமிடையில் பிரகாசிக்கும் வண்ணம் மறுமை நாளன்று அல்லாஹ்வின் "திருச்சமுகம் வருவார்."

நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமும் மனித ஒற்றுமையும்

மதங்களின் முக்கிய நோக்கம் மனித மனங்களை ஒன்று சேர்த்து ஒழுக்கம், பண்பாடு, கலை, கலாசாரம் போன்றவற்றைப் பாதுகாப்பதுடன் தனக்கான ஒரு நிலையான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு வாழ வழிகாட்டுவதேயாகும். இஸ்லாம் மார்க்கம் என்பது தனக்கு ஏற்ற விதத்தில் குறைவான மதியுடைய மனிதன் ஆக்கிக் கொண்டதல்ல காலத்தால், இடத்தால், மொழியால் வேறுபடாத வகையில் முற்காலமும் அறிந்த முழுமதி நிறைந்த வல்லவனால் வகுக்கப்பட்டு வழங்கப்பட்டதே இஸ்லாம் மார்க்கமாகும்.

இஸ்லாத்தில் மக்கள் அனைவரும் சமமானவர்கள். அவர்களுடைய நிறம், மொழி, இனம், நாடு, ஆகியவை வேறுபட்டிருந்தாலும் சரியே. இனம், தகுதி, செல்வம் ஆகிய அடிப்படையில் மனிதர்களுக்கிடையே நிலவும் நியாயமற்ற வேறுபாடுகளை ஒழித்துக்கட்டி, தன் செய்தியை ஒவ்வொருவருக்கும் நேரடியாக அறிவித்து அதற்கேற்ப வாழும்படி ஒவ்வொருவருடைய மனச்சாட்சியையும் இஸ்லாம் தூண்டிவிடுகின்றது.

அந்த வகையில் இஸ்லாமும் மனித ஒற்றுமையைப்பற்றி மிகவும் சிறப்பான முறையில் விபரித்திருப்பதை நாம் குறிப்பிட முடியும். இஸ்லாம் ஏற்படுத்திய மனித ஐக்கியத்தைப் பற்றி பேராசிரியர் "ஹேர்க் ஹென்றி" குறிப்பிடுகையில் "இஸ்லாத்தின் திருத்தூதர் தோற்றுவித்த பன்னாட்டுக் கூட்டமைப்பானது உலக ஐக்கியம், மனித சகோதரத்துவம் என்பவற்றை உலகலாவிய ரீதியில் எனைய நாடுகளுக்கு எடுத்துக் காட்டுகின்றது." கூட்டமைப்பினைச் செயற்படுத்துவதற்கு இஸ்லாம் ஆற்றிய பணிக்குச் சமமாக உலகின் வேறெந்த சமுதாயமும் பணியாற்றியதில்லையென்றே கூற வேண்டும்.

"மனிதர்களே நிச்சயமாக நாம் உங்களை ஒரு ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் சிருஷ்டித்தோம். பின்னர் ஒருவர் மற்றொருவரை அறிந்து கொள்வதற்காக வேண்டி உங்களைக் கிளையாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் எவர் பயபக்தியுடையவராக இருக்கிறாரோ அவர்தான் அல்லாவிடத்தில் நிச்சயமாக கண்ணியவான்."

[49 : 13]

உயர்வு, தாழ்வு என்பன நிறத்தால், இடத்தால், மொழியால் ஏற்படுவதல்ல என்ற யததார்த்தத்தை மேலேயுள்ள இறைமறை உணர்த்தியுள்ளதன் மூலம் விளங்கிக் கொள்ள முடியும். அதாவது இறைவன் மீது எவன் நம்பிக்கையையும் மதிப்பும் வைத்துள்ளானோ அவன் இறைவனால் விரும்பப்படுவான். இதையேதான் இஸ்லாம் மார்க்கமும் கூறுகின்றது. எனவே மனிதர்களில் உயர்வு தாழ்வு இன்றி ஒற்றுமையாக இருங்கள் என்பதையே இவை போதிக்கின்றன.

மேலும் நாம் உலகலாவிய ரீதியில் முஸ்லிம்கள் ஒன்று கூடி நிறைவேற்றும் "ஹஜ்" கடமையை நாம் எடுத்துப் பார்க்கின்ற பொழுது சீனரும், பாரசீகரும், இந்தியரும் இலங்கையரும், ஆபிரிக்கரும், ஐரோப்பியரும், அமெரிக்கரும் உலகலாவிய ரீதியல் ஒன்று கூடுகின்றனர். வருடமொருமுறை கூடும் இச்சர்வதேச மகாநாட்டிற்கு வருவோர் பகட்டான பட்டாடைகள் அணிவதில்லை. மொட்டைத் தலையுடன் வெள்ளைத் துண்டை அணிந்து கொண்டு அரசனும், ஆண்டியும், வெள்ளையனும், கறுப்பனும் நிறமொழி வேறுபாடுகளைக் களைந்து ஒரே குரலில் இதோ நான் வந்துவிட்டேன் என்று வாய்விட்டு மனம் ஒன்றுபட்டு முழங்குகின்றனர். இந்த உணர்வு மனித இனத்தை சகோதர பாசத்தால் இணைத்துவிடுகின்றது. எனவே இக்கருத்தின் மூலம் இஸ்லாம் மார்க்கம் மனித ஒற்றுமையைக் கடைபிடிப்பதில் உன்னிப்பாகவுள்ளது என்பது தெட்டத் தெளிவாக தெரிகின்றது.

சர்வ உலகங்களின் இரட்சகனையும், சர்வ உலகங்களுக்கும் அருட்கொடையாக அனுப்பப்பட்ட இறுதி இறைத்தூதரையும் சகல உலகத்தாருக்கும் வழிகாட்டும் வேத நூலையும் கொண்டதான மார்க்கம் முழுமனித சமுதாயத்திற்குமுரிய சர்வதேச மார்க்கமாகும். எனவே சர்வதேச ரீதியில் மனித இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை உருவாக்கி வளர்ப்பதற்கு இத்தகைய உயர்பண்புகளையும் சிறப்பம்சங்களையும் உள்ளடக்கிய இஸ்லாத்தைக் காட்டிலும் தலை சிறந்த பொருத்தமாக வேறொரு கொள்கை உலகில் இல்லையென்பது திண்ணம்.

து. சபேஷன்,
ஆரம்பப்பிரிவு,
இரண்டாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமும் விஞ்ஞானமும்

பிரபஞ்ச சிருஷ்டிகர்த்தாவான அல்லாஹ் மனிதனை ஏனைய பிரபஞ்சப் பொருட்களிலு ம் மாறு பட்டு, பகுத்தறிவைக் கொடுத்து தன் பிரதிநிதியாகவே படைத்தான். இதன் மூலம் சிறப்புப் பெற்ற மனிதன் இயற்கையின் அம்சங்களை வெற்றிகொள்ளும் ஆற்றலையும் திறமையையும் அடைந்து படைப்புக்களில் உயர்ந்த நிலையில் திகழ்கிறான். எனவே தனது மிகப்பெரிய வழிகாட்டலை மனிதனு க்கு வழங்கி மானிட சமூகத்தின் பொறு ப்புமிக்க பங்களிப்பினை ஆற்ற இஸ்லாம் அறிவுறு த்து கிறது . "ஓ! மக்களே ! நீங்கள் திருக்குர்ஆனை ஓதி வாருங்கள். அதிலு ள்ள அற்புதங்களைத் தேடிக் கண்டுபிடியுங்கள்". என்று அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) கூறு வது போல, அல்லாஹ் அருளிய வேதங்களில் திருக்குர்ஆன் ஓர் அற்புத பொக்கிஷம்.

அல்குர்ஆன் மனித சமுதாயத்து க்கு வழிகாட்டும் வாழ்க்கை நூல் ; எனினு ம் வாழ்க்கை வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளை மனிதன் கண்டுகொள்ள தூண்டல்களை வழங்கி, நாகரிகத்தை, விஞ்ஞானத்தை வளர்க்கிறது .

எந்தவொரு விஞ்ஞானத் தத்து வத்தின் முடிவும் மெஞ்ஞானத்தின் பரப்பினு ள் அடைக்கலம் என்பது முடிந்த முடிவு. அளப்பரிய சாதனைகளை நிகழ்த்திக் காட்டிய விஞ்ஞானிகள் கூட தம்மை உள்ளிருந்து ஏதோ சக்தி இயக்கியதாகவும், தமது அறிவிற்கு அப்பாற்பட்ட சக்தி உள்ளது என்பதையும் ஒத்து க்கொள்கிறார்கள்.

இந்த வகையில் அல்லாஹ் அருளிய அருமறையாம் குர்ஆனில் பொதிந்து ள்ள விஞ்ஞான, அறிவியல் கருத்து க்களும் அதனூடான விஞ்ஞான வளர்ச்சியும் உலக மத்தியஸ்தத்தில் இஸ்லாத்து க்கு கிடைத்த தனிப்பெரும் வரலாற்று ப்பதிவுகள் என்றால் மிகையாகாது . "வானங்களிலு ம் பூமியிலு ம் உள்ளவற்றை நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்கு வசதிப்படுத்தித் தந்திருக்கிறான் என்பதையும், அவன் தன் அருட்கொடைகளை மறைவாகவும், வெளிப்படையாகவும் உங்கள்மீது சொரிந்திருக்கிறான் என்பதையும் நீங்கள் பார்க்கவில்லையா?" **அத் : 31 ; வச : 20 -**

மனிதனது உலகத்தேவைகளை நிறைவேற்று வதற்கு "இயற்கை" என்னு ம் பெயரில் அனைத்து வளங்களையும் படைத்து ள்ளான். அவற்றில் வெளிப்படையாக உள்ளவற்றை பெற்று க் கொள்ளுமாறு ம் மறைவாக உள்ளவற்றை ஆராயுமாறு ம் வழிகாட்டுகிறான். தேவைகள் அதிகரிக்கும் போது மறைந்திருக்கும் வளங்களைத் தேட மனிதன் முயல்வான். அப்பொழுது மனிதனு க்குத் தேவையானவை கிடைக்கும். இதற்கு இடைவிடாத ஆராய்ச்சி தேவை. இது விஞ்ஞான முறை அல்லவா? "மனு , ஜின் கூட்டத்தார்களே! நீங்கள் வானங்கள் பூமியின் எல்லையைக் கடந்து சென்று விட உங்களால் கூடுமாயின் சென்று விடுங்கள். . . ! ஆயினு ம் ஆற்றலு டனன்றி நீங்கள் செல்ல முடியாது . **- அத் : 55 , வச : 33 -**

பூமியின் எல்லையைக் கடப்பது பற்றி 100 வருடத்திற்கு முன் கதைத்திருந்தால் யாரும் நம்பமாட்டார்கள். கற்பனை காட்டமுடியாத அறிவியல். ஆனால் 1400க்கு முன்னரேயே இவ்விடயம் தொடர்பாக திருக்குர்ஆன் கூறு கிறது . ஆயினு ம் ஓர் எச்சரிக்கை, "ஆற்றலு டனன்றி நீங்கள் செல்ல முடியாது " ஆம் ஆர்வம் இருந்தாலு ம் அதற்குரிய அனு பவம் முன்னேற் பாட்டுடனேயே எதிர்விளைவுகள் ஆராய்ந்த பின்பே வானங்களில் பவனிவரவேண்டும் என்று கூறப்படுகிறது . மனித சனத்தொகை அதிகரிப்பினூடே இடப்பற்றாக்குறை, சண்டை சச்சரவு, பூசல்கள் இதைத்தீர்க்க பிற கோள்களில் குடியேறத் திட்டம் இடும் விஞ்ஞானிகளின் கனவினை அன்று குர்ஆன் எவ்வளவு எளிதாகக் கூறிவிட்டது .

"சூரியன் சந்திரனை அணுகமுடியாது , இரவு பகலை முந்தமுடியாது . ஒவ்வொன்று ம் வட்டவரைக்குள் நீந்திச் செல்கிறது ". **- அத் : 36, வச : 40 -**

பூமியும் ஏனைய கோள்களும் ஓர் ஒழுங்கில், நியம முறைப்படி வலம் வருகின்றன. பூமியில் உள்ள ஈர்ப்பு சக்தியே இங்குள்ள பொருட்களை, ஜீவராசிகளைக் கட்டி வைத்திருக்கிறது . பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பூமியின் இயக்கம், கோள்களின் நிலை, அமைப்பு என்பன மிக எளிமையாக விளக்கப்பட்டுள்ளமை இஸ்லாமியத்தினூடான விஞ்ஞான வளர்ச்சிக்கு சான்று பகர்கிறது .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அணு" என்பது நவீன உலகில் நிலையாக இடம் பிடித்த பதமாகும். அணுச்சக்தியைக் கண்டுபிடித்த விஞ்ஞானியான "அயின்ஸ்டீன்" அணுப்பிளவினூடாக வெளிவிடப்படும் பெருமளவு சக்தியை ஆக்கவேலைகளுக்குப் பயன்படுத்தி சக்தித் தேவையைப் பூர்த்தி செய்யலாம் என்று நம்பினார். ஆனால் அணுச்சக்தியை அழிவு வேலைகளுக்கு பயன்படுத்திய போது ; அணுச்சக்தியைக் கண்டுபிடித்திருக்கவே கூடாது என்று புலம்பினாராம். அதாவது அதன் தாக்கம் முழு உலகிற்கும் அச்சுறு த்தலாகவே இருந்து வருகிறது . ஆனால்14 நூற்றாண்டுகளுக்கு முன்னரே அல்லாஹ் இதற்கு விளக்கம் கொடுத்து விட்டான்.

"தீங்கிழைக்கும் சூழ்ச்சிகள் செய்யும் இவர்களைப் பூமி விழுங்கும்படி அல்லாஹ் செய்யமாட்டான் என்றோ அல்லது இவர்கள் அறிந்து கொள்ளாத விதத்தில் இவர்களை வேதனை வந்தடையாதன்றோ இவர்கள் அச்சமற்றிருக்கின்றனரா?" - அத் : 10, வச : 45 -

"ஒரே சப்தத்தைத் தவிர அவர்கள் காத்திருக்கவில்லை. அவர்கள் தர்க்கித்து க் கொண்டி ருக்கும் பொழுதே அது அவர்களைப் பிடித்து க் கொள்ளும் அப்போது தான் அவர்கள் மரணசாசனம் கூறவோ, அல்லது தங்கள் குடும்பத்தாரிடம் செல்லவோ முடியாமலாகிவிடும்- அத் : 36, வச : 49, 50 -

"எனினு ம் அவர்கள் தங்கள் சூழ்ச்சிகளைச் செய்து கொண்டிருந்தனர். அவர்களுடைய சூழ்ச்சிகளோ, மலைகளையும் பெயர்ந்து விடக்கூடியனவாக இருந்தபோதிலு ம் அல்லாஹ்வுக்குட்பட்டே இருந்தன". - அத் : 14, வச - 46 -

இவ்வாறு பல வசனங்கள் அணுகுண்டின் தாக்கம் பற்றியும், சண்டைகள், பூசல்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது . எனின் தீர்க்கதரிசனம் எத்தகையது என்று உணர முடிகிறது .

இவைபோல திருக்குர்ஆனில் ஆங்காங்கே விஞ்ஞானத் தத்து வங்கள் விரவிக்கிடக் கின்றன. திருக்குர்ஆன் காட்டும் ஒளியில் விஞ்ஞானம் வளர்கிறது .

இரசாயனத்தின் ஆங்கிலப் பெயரான Chemistry என்பது Alchemy என்ற அரபுப் பதத்தில் இருந்தே வந்ததாகும். நவீன விஞ்ஞானம் வளர்வதற்கு முன்னரேயே பல்வேறு இரசாயனப் பொருட் களையும் கையாண்டு வந்ததாக இஸ்லாமியக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இரசவாதத்தின் தந்தை எனப் போற்றப்படும் ஜாபிர் இப்னு ஹய்யான்22 புத்தகங்களை எழுதியுள்ளார். ஜ.'.பர் என்பவர் காய்ச்சி வடித்தல், பளிங்காக்கல், பகுதி படப்பளிங்காக்கல், வடிகட்டுதல், உருக்குதல் முதலான செய்முறைகளை விளக்கியுள்ளார். இவரே கந்தகம், நைத்திரிக்கமிலம் என்பவற்றைக் கண்டுபிடித்தார்.

ஐரோப்பியர் பூமி தட்டையானது எனக்கருதிய காலத்தில் முஸ்லீம் புவியியலாளர்கள் பூமியின் சுற்றளவைக் கணிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். மேலு ம், கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிக்க உதவியது . ஒரு முஸ்லீம் மாலு மி என்று குறிப்பு உண்டு. ஆரம்பத்தில் மருத்து வத் து றை கற்கப்பட்டு வந்தபோதிலு ம் அப்பாஸியர் காலத்தில் மெருகிடப்பட்டது . அக்காலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட மருத்து வ நூல்களைப் பயின்ற அறிஞர்கள் ஜாஹிலிய்யாக்கால மருத்து வ முறைகளையும், அல்குர்ஆன் ஸுன்னா கற்று த் தந்திருக்கின்ற மருத்து வ அறிவையும் து ணையாகக் கொண்டு பல புதிய மருத்து வ நூல்கள், புதிய சிகிச்சை முறைகள், வைத்திய உபகரணங்கள் என்பவற்றை அறிமுகப்படுத்தினர்.

இவைபோன்று தாவரவியல், உயிரியல், பௌதீகவியல் போன்ற பல அறிவியல் து றைகளில் முஸ்லீம்கள் ஆராய்ச்சி செய்து ஆக்கபூர்வமான பங்களிப்பினை வழங்கியுள்ளனர். "மத்திய கால இருளில் இருந்து ஐரோப்பாவை விடுவித்ததற்காக அது இஸ்லாமிய விஞ்ஞானத்திற்கு பெருமளவில் கடமைப்பட்டிருக்கிறது" என்று Marquis என்பார் குறிப்பிடுகிறார்.

மனித சிந்தனை அடிப்படையில் இன்னு ம் கோட்பாட்டுரீதியில் உள்ள தத்து வங்கள், காலபரிணாம வளர்ச்சிக்கேற்ப மீளமைக்கவும், புது ப்பிக்க வேண்டிய தேவையும் உள்ளது . அல்குர்ஆனில் பொதிந்து ள்ள தத்து வ உண்மைகள் விஞ்ஞான வெளிச்சத்திற்கு கொணரப்பட வேண்டும். நாளைய பரம்பரை நவீனமாகவும், விஞ்ஞான பூர்வமானதாகவும் இருப்பதற்கு மனித இனத்தின் நித்தியமான – ஜீவாதாரமான வாழ்வு நெறிக்கு அறிவியல் விஞ்ஞானக் கருத்து க்கள் மலரவேண்டும். அதற்குரிய பணிகள் தொடரவேண்டும்.

யோகேஸ்வரி. செ
*– விஞ்ஞானப் பிரிவு –*
இரண்டாம் வருடம்

**உதவிநூல்கள்**
"குர்ஆன் ஒளியில் விஞ்ஞானம்"
"இஸ்லாமிய நாகரிகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணல் நபி (ஸல்)அவர்கள் காட்டிய அரசியற் பாதை

ஏனைய அரசியற் கோட்பாடுகள் போல் அல்லாது இஸ்லாமிய அரசியற் கோட்பாடு வேறுபட்ட அமைப்பைக் கொண்டதாகும். இவ் இஸ்லாமிய அரசியல் திட்டம் மூன்று அம்சங்களைக் கொண்டு காணப்படுகின்றது. அவை தௌஹீத் (ஏகத்துவம்) ரிஸாலத் (இறைத்துவம்) கிலாஃபத் (இறைபிரதி நிதித்துவம்) என்பனவாகும்.

இந்த பிரபஞ்சத்திலுள்ள அனைத்து உயிருள்ள, உயிரற்ற பொருட்களினதும், படைப்பினதும், பிரதிபலிப்பினதும், உரிமையாளனும் இறைவன் தான் என்பது ஏகத்துவமாகும். எனவே ஆட்சி உரிமை அல்லாஹுவுக்கே சொந்தமாகும். இதனையே அல்லாஹ் தனது திருமறையிலே,

"நபியே! வானங்களினதும் பூமியினதும் ஆட்சி நிச்சயமாக அல்லாஹுவுக்கே உரியது என்பதை நீர் அறியவில்லையா? "

(5: 40)

என விபரிக்கின்றான்.

இறைவனின் சட்டத்தை மக்கள் எதன் மூலமாகப் பெறுகின்றார்களோ அதுதான் ரிஸாலத் எனப்படும் இறை தூதாகும் மனித வாழ்க்கை முறை அமைக்க வேண்டிய வழி முறைகள் யாவும் இறைவனுடைய வேதத்தில் வழங்கப்பட்டுள்ளன. இதனை நடைமுறைரீதியாக செயல்படுத்துவதற்கு வேண்டிய விளக்கத்தினை இறை தூதர் செயல்ரீதியாக வாழ்க்கையில் அமைத்துக் காட்டி உள்ளார். இவ் இரண்டினுடைய இயைபாக்கத்தின் அடிப்படையே இஸ்லாமிய ஷரீஅத் ஆகும். இவ்வமைப்பு விதியைக் கொண்டே இஸ்லாமிய அரசும் நிறுவப்படுகின்றது.

இறைவனுடைய பிரதிநிதியாக மனிதன் காணப்படுவது கிலாஃபத் ஆகும். இஸ்லாமிய அரசியல் விதி முறைக்கு அமைவாக அமைக்கப்படும் அரசாங்கத்தில் இறைவனாற் கொடுக்கப்படுள்ள வரம்புகட்கு உட்பட்டு அதற்கேற்ப செயலாற்றுதலே இறைபிரதிநிதித்துவத்தின் பொறுப்பாகும். இதிலிருந்தே இஸ்லாமிய மக்களாட்சி தொடங்குகின்றது. இஸ்லாமியப் பிரதிநிதித்துவப் பொறுப்பையும் கடமையையும் பெற்றுள்ள அனைவரிடமும் உரிமை, கடமை, பொறுப்பு என்பன சம பங்காகவே உள்ளன. இச் சமூகத்திலுள்ள அனைவரின் விருப்பபடியே அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்படும். இம் மக்களுக்கு வழங்கப்படும் அதிகாரத்தில் இருந்து ஒரு பங்கினை இந்த அரசாங்கத்திடம் ஒப்படைக்கின்றார்கள். மக்களுடைய விருப்பத்துக்கு அமையவே அரசாங்கம் செயற்படும். மக்களுடைய விருப்பத்தக்கு அமையவே அரசாங்கம் செயற்படும். மக்களுடைய விருப்பு, வெறுப்புக்கு ஏற்ப அரச பதவி நிலையும் காணப்படும். இவ்வாறு இஸ்லாமிய அரசியல் முறை முழுமையான மக்களாட்சிக்குரிய இலக்கணமாகத் திகழ்கின்றது.

இவ்வாறான முழுமை பெற்ற இஸ்லாமிய அரசியற் பாதையை அண்ணலார் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். பூரணமான இஸ்லாமிய ஆட்சியினுடைய வடிவம் நபி (ஸல்) அவர்களுடைய காலமான ஹிஜ்ரி ஒன்றில் இருந்து குலபாஉர் ராஷிதீன்களின் ஆட்சிக்காலமான ஹிஜ்ரி நாற்பது வரையிலான ஆட்சிக் காலமாகும்.

ஹிஜ்ரத்துக்கு முன்பாக மதீனாவில் இருந்து மக்காவுக்கு வந்த மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது அவர்களோடு நபி (ஸல்) அவர்கள் செய்து கொண்ட பாதுகாப்பு நேச உடன்படிக்கைகளும் மதீனாவில் இஸ்லாமிய ஆட்சியை தாபிப்பதற்கு வழியாக அமைந்தன எனலாம்.

மதீனா நகர் தலைநகராய் அமைய ஆட்சிப் பொறுப்பை ஏற்ற நபியவர்கள் நகர அரசை ஒரு திட்டத்தின்படி வழி நடாத்தி வந்தார். மதீனாவிலேயே குடியிருந்த நபி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் வெளியே செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில் தனது பிரதியாக ஒரு ஸஹாபியை (தோழரை) அமர்த்தி விட்டுச் செல்லும் வழக்கம் உடையவராக இருந்தார்கள் தன்னுடைய ஆட்சியின் கீழ் சில ஷஹாபிகளுக்கு சில பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. உதாரணமாக வெளிவிவகாரத் தொடர்புகளுக்கு முஆவியா (றலி) அவர்களையும் ஒப்பந்தங்களை எழுதுவதற்கு அலி (றலி) அவர்களையும் தேவைக்கேற்ப பயன்படுத்தினார். அபூபக்கர் (றலி) உமர்(றலி) ஆகிய இருவரும் சிரேஷ்ட ஆலோசராக இருந்தனர். அத்தோடு ஆட்சியை சிறப்பானதாக்க வலுவேறாக்கக் கொள்கையும் நடைமுறைக்கு கொண்டு வந்தார்.

அல்லாஹ்வினுடைய வஹி மூலமாக சட்டம் இயற்றும் செயலை மேற்கொண்ட நபியவர்கள் அதனை நடைமுறைப்படுத்தும் போது.

"விஷயத்தில் அவர்களோடு கலந்தாலோசனை செய்வீராக"

(3 : 159)

என்ற இறை கட்டளைக்கமைய கலந்தாலோசனை மூலம் தீர்மானங்களை மேற்கொண்டு செயற்பட்டார்கள். இவ்வாறான ஆட்சி அமைப்பில் மதீனா சாசனம் யாப்பாக ஏற்றுக்கொள்ளக் கூடிய தன்மை பொருத்தியதாக இருக்கின்றது என்பது ஆய்வாளர்களின் கருத்து.

இஸ்லாமிய ஆட்சியில் குடிமக்களின் உரிமைகள் எவ்வாறு பேணி பாதுகாக்கப்பட வேண்டும். என்பதை இறை கட்டளையின் படி நபி (ஸல்) அவர்களின் ஆட்சிக் கால சம்பவங்கள் சிலவற்றை நோக்கும் போது அறிந்து கொள்ளலாம்.

மனித உரிமைக்கும், உடமைக்கும் பாதுகாப்பை பொறுத்தவரையில் குர்ஆன் கூறும் பில்ஹக் எனும் சத்தியத்தின் அடிப்படையில் நீதி மன்றம் மூலமாக மரண தண்டனை நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஆனால் ஒருவரைக் கொலை செய்வதனை இஸ்லாம் தடை செய்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் தமது இறுதி ஹஜ்ஜின் போது ஆற்றிய உரையில் "இறந்தவர்கள் மீண்டும் எழுப்பும் நாளில் நீங்கள் இறைவனைச் சந்திக்கும் நான்வரை உங்களின் உயிர்களும், உடமைகளும் ஒருவருக்கொருவர் பறித்துக் கொள்வதைதடை செய்யப்பட்டுள்ளது" எனக் கூறினார்கள்.

ஒருவரது கௌரவம் மரியாதை தூய்மை என்பவற்றில் மற்றவர் தலையிடுவதை நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள் அல்குர்ஆன் கூட

ஓ! நம்பிக்கையானவர்களே, ஒரு குழுவினர் இன்னொரு குழுவினரை கேலி செய்ய அனுமதித்தீர்கள் ஒருவருக்கொருவர் அவதூறு செய்யாதீர்கள். பட்டம் பெற்றவர்களை பயன் படுத்தி அவமானப்படுத்தாதீர்கள். மேலும் ஒருவரைப் பற்றி மற்றவர் புறங்கூறவே இகழ்ந்து பேசவோ செய்யாதீர்கள்"

(48 : 11 - 12)

என வலியுறுத்துகின்றது. உங்களின் வீடுகள் தவிர மற்ற வீட்டிலும் அந்த வீட்டின் சொந்தக்காரர் அனுமதியின்றி நுழையாதீர்கள். (24 : 27) என குர்ஆன் கூறுகின்றது. ஒருவர் தன்னுடைய தாயோ சகோதரியோ, மகளோ தான் பார்க்க விரும்பாத நிலையில் வீட்டில் நுழையும் சமயம் இருக்கலாம் என்பதனால் திடீரெனவோ, இரகசியமாகவோ. நுழைய வேண்டாம் எனப் பணித்துள்ளார்.

ஒருவரை சந்தேகத்தில் கைது செய்வதையோ தன்னை ஒருவன் நிரபராதி என்று நிரூபிக்க வாய்ப்பையும் அளிக்காமல் சிறையில் அடைத்து தனிமனித சுதந்திரத்தை அவமதிப்பதையோ இஸ்லாமியச் சட்டம் தடுப்பதாக உள்ளது.

ஒரு சமயம் நபி (ஸல்) அவர்கள் பள்ளிவாசலில் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கையில் ஒருவர் எழுந்து

"அல்லாஹ்வின் தூதரே! என்னுடைய அண்டை வீட்டுக்காரர் என்ன காரணத்துக்காக கைது செய்யப்பட்டுள்ளார் என வினவிய போது கைது செய்வதற்கு பொறுப்பான அதிகாரியும் அங்கு இருப்பதால் நீதியான முறையில் இச் சம்பவம் இடம் பெற்றிருந்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரியே அதற்கான விடையினைத் தெரிவிப்பார் என்பதனால் நபி (ஸல்)அவர்கள் சொற்பொழிவை தொடர்ந்தார்கள். அம் மனிதன் தொடர்ந்து மூன்று முறை இவ்வாறு கேட்ட பின்பும் அவ் அதிகாரி எவ்வித பதிலும் அளிக்காததனால் கைது செய்யப்பட்டவர் நிரபராதி என்பதனை உணர்ந்து கொண்ட நபியவர்கள் குறிப்பிட்ட அந்நபரை விடுதலை செய்யும்படி பணித்தார்கள்.

அல்லாஹ் வசை மொழிகளையும் கண்டனம் செய்ய பயன்படுத்தப்படும் கடின வார்த்தைகளையும் விரும்புவதில்லை. ஆனால் ஒரு தனிப்பட்ட மனிதன் அல்லது ஒருகுழு அல்லது ஒரு கட்சி ஆட்சியைக் கைப்பற்றி தனி மனிதர்களையோ, மக்கள் குழுக்களையோ குடிமக்கள் அனைவரையுமே கொடுமைப்படுத்தினால் அதற்கு பகிரங்கமாக எதிர்ப்பு தெரிவிக்க அல்லாஹ் அனுமதித்துள்ளான் இதனையே குர்ஆன்.

"அக்கிரமத்துக்கு உள்ளானவர்களைத் தவிர (மற்றொருவர்) தீய பேச்சுக்களை முழங்கத் தம் நாவைத் திறப்பதை அல்லாஹ் விரும்புவதில்லை." என எடுத்துக் காட்டுகின்றது.

ஒழுக்கமும், சத்தியமும், உயர்வடைவதற்கு மக்களின் சிந்தனைக்கும், கருத்தினை வெளிப்படுத்துவதற்கும் இஸ்லாமிய அரசு தனது குடிமக்களுக்கு முழுச் சுதந்திரத்தை அளிக்கின்றது. இதனையே நபி(ஸல்) அவர்கள் "உங்களில் யாராவது ஒருவர் தீமையைக் காண நேர்ந்தால் அவர் அதை தனது கரத்தால் தடுக்க வேண்டும். முடியாவிட்டால் தனது நாவினாலும் அதுவும் முடியாவிட்டால் தனது மனத்திலாவது தனது கண்டனத்தை தெரிவிக்க வேண்டும்" என இயம்பினார்கள்.

இஸ்லாமிய அரசில் வாழும் அனைவருக்கும் தத்தம் மத உணர்வுகளுக்கும், சமய கோட்பாட்டுக்கும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் பின்வருமாறு மொழிகின்றது. "தீனின் (வாழ்க்கை நெறியை) பின்பற்றும் விஷயத்தில் எந்தவித கட்டாயமுமில்லை. (2 : 259) மத விடயங்கள் சம்பந்தமாக விவாதங்கள், கலந்துரையாடல்கள் நடத்துவதை இஸ்லாம் தடை செய்யவில்லை. ஆனால் இவை ஒழுக்கப் பணிவோடு நடத்தப்பட வேண்டும் என்பதையே இஸ்லாம் விரும்புகின்றது. "வேதம் பெற்றுள்ள மக்களோடு பண்பட்ட அழகிய முறையிலன்றி விவாதம் செய்யாதீர்கள்.

(2 : 6: 46)

என திருக்குர்ஆன் கட்டளையிடுகின்றது. வேதம் பெற்ற மக்களையல்லாது ஏனைய சமய நம்பிக்கைகளைப் பின்பற்றுவோருக்கும் இது பொருந்தும்.

இஸ்லாமிய அரசு ஆதரவற்றர்களுக்கு ஆதரவளிக்க வேண்டுமென இஸ்லாம் வலியுறுத்துகின்றது. நபி (ஸல்) அவர்கள் ஆதரவளிக்க யாருமல்லாதவனுக்கு அரசின் தலைமைப் பொறுப்புள்ளவரே பொறுப்பாளி ஆவார்" என கூறியுள்ளார். ஸகாத் எனப்படும். ஏழை வரியினைப் பற்றி நபி (ஸல்) அவர்கள் குறிப்பிடும் போது அவர்களில் பணக்காரர்களிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டு சமூகத்தில் தேவையுள்ளவர்களுக்கு அது வழங்கப்படும்" என்றார்கள். இவ் ஏழை வரியென்பது வசதி படைத்தோர் தமது சொத்து செல்வங்களிலிருந்து குறிப்பிட்ட வீதம் ஏழைகளுக்கு வழங்கப்படும் வரியாகும்.

ஆட்சியாளர்கள் தலைமை அதிகாரிகள் அலுவலகர்கள், சாதாரண குடிமகன் எவராக இருந்தாலும் சட்டத்தின் முன் சமமானவர்களே. பெருமானார் அவர்கள் பத்ரு போர்க்களத்தில் எதிரிகளுடன் போர்புரிய வேண்டிய கட்டத்தில் முஸ்லிம் இராணுவ அணியினைச் சரி செய்து கொண்டிருக்கையில் வரிசையை விட்டு விலகி நின்ற ஒரு இராணுவ வீரரை அவரது வயிற்றில் குத்திவிட்டார்கள். அந்த இராணுவ வீரர் யாரசூலுல்லாஹ் நீங்கள் உங்கள் கரத்தினால் என்னைத் துன்புறுத்தி விட்டீர்கள் என்று கூறிய போது உடனே நபி (ஸல்) அவர்கள் தம் வயிற்றின் மீதுள்ள துணியை நீக்கிவிட்டு "நான் அதற்காக மிகவும் வருந்துகிறேன்" நான் செய்தது போல் நீங்களும் செய்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுங்கள் எனக் கூற அவ் இராணுவ வீரர் பெருமானார் (ஸல்) அவர்களின் வயிற்றில் முத்தமிட்டு இதைத்தான் நான் எதிர்பார்த்தது என்றார்கள்.

இவ்வாறான பலவேறு விடயங்களிலும் குடிமக்களுக்கான உரிமைகளை அளிப்பதற்கான வழிவகைகளைத் தெளிவாக்கிய அண்ணல் நபி (ஸல்) அவர்கள் போர் சூழ்நிலைகளிலும் நடந்து கொள்ள வேண்டிய முறைகளையும் தெளிவாக்கி உள்ளார்கள்.

எதிரி நாட்டிலுள்ள போரில் பங்குபற்றியவர்களுக்கும் பங்கு பெறாதவர் களுக்குமிடையேயான தெளிவினை இஸ்லாம் முதலிலேயே வரையறுத்துக் கூறுகின்றது. இதனை நபி (ஸல்) அவர்கள் கூறும் போது வயது முதிர்ந்தவர்கள் குழந்தைகள், பெண்கள் ஆகிய யாவரையும் கொலை செய்யாதீர்கள். மடங்களிலுள்ள துறவிகளைக் கொல்லாதீர்கள் என்றார்கள்.

ஓர் போரின் போது ஒரு பெண்ணின் பிணம் வீழ்ந்து கிடந்தது. இதனைக் கண்ட பெருமானார் அவர்கள் இப் பெண் போர் செய்யவில்லையே அப்படியிருந்தும் அப்பெண் ஏன் கொலை செய்யப்பட்டாள் என வினவினார்கள். இதனைக் கொண்டு போரின் போதோ அதற்கு பின்போ போரில் கலந்து கொள்ளாத மக்கள் பாதிப்படையக் கூடாது என்பதில் (ஸல்) அவர்கள் மிகவும் கவனமாக இருந்தார்கள் என்பது தெளிவு.

போரில் பங்குபற்றுவோர் சம்பந்தமாக கைக்கொள்ள வேண்டிய நடவடிக்கை பற்றி அண்ணலவர்கள் குறிப்பிடும் போது நெருப்பினால் சித்திரவதை செய்தல் போர் செய்யத் தகுதியற்று காயமுற்று இருக்கின்றனவர்களைத் தாக்குதல் போர்க்கைதிகள் கொல்லப்படல் என்பன தடுக்கப்பட்டுள்ளது எனக் கூறினார்கள்.

எதிரி நாட்டின் எல்லைகளுக்குள் முஸ்லிம்கள் சென்றுவிட்டால் எந்தவித நாசவேலையோ அன்றி அழிவு வேலையோ செய்வதனையும் அங்கு வாழும் மக்களுக்கும் பொருட்களை அவர்களின் அனுமதியின்றி பயன்படுத்துவதற்கும் முஸ்லிம்களுக்கு உரிமை இல்லை.

இறந்த சடலங்களை சிதைப்பதையும் நபி(ஸல்) அவர்களது தடுத்தது மாத்திரமன்றி எதிரிகளின் சடலங்களை எதிரிகளிடம் ஒப்படைக்கவும் செய்தார்கள். அவற்றை போரின் போது வீரமிக்க எதிரிப் போர் வீரரொருவர் கொல்லப்பட்டு முஸ்லிம்களால் மதீனாவின் பாதுகாப்புக்காக வெட்டப்பட்ட அகழியில் வீழ்ந்து விடுகின்றான். எதிரிகள் பத்தாயிரம் தினார்கள் கொடுத்து பெருமானார் (ஸல்) அவர்களிடம் அவ்வீரனுடைய சடலத்தை ஒப்படைக்கும் படி கேட்க நபியவர்கள் "இறந்து போன உங்கள் தோழரின் சடலத்தை நீங்கள் எடுத்துச் செல்லாம் நாங்கள் இறந்தவர்களை விற்பதில்லை எனக் கூறி சடலத்தை எடுத்துச் செல்ல அனுமதித்தார்கள்.

ஒப்பந்த மீறலையும் போர் செய்தலையும் கவனிக்குமிடத்து எதிரிகள் ஒப்பந்தத்தை மீறினால் போர் செய்ய முடியும். இதனையே அல்லாஹ் "ஒரு கூட்டத்தாரிடம் ஒப்பந்த மீறலைக் கண்டால் அவர்கள் முகத்தின் மீது வெளிப்படையாக அந்த ஒப்பந்தத்தை எறிந்து விடுங்கள்" எனக் குர்ஆனில் தெளிவாக்கியுள்ளான்.

நபி (ஸல்) அவர்கள் ஹுதைப்பியா உடன்படிக்கையின் போது எதிரிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் அதன் பின் ஒப்பந்தத்தை எதிரிகள் மீறியதால் நபியவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளும் அவற்றோடு ஏனைய அரசியல் நடவடிக்கை யாவும் எமக்கு பல படிப்பினைகளை மாத்திரமல்லாது இன்றைய பிரச்சினைகட்கும் தீர்வு காண்பதற்கு ஓர் உன்னதமான வழியாகவும் திகழ்ந்து கொண்டிருக்கின்றது.

ஜனாப்.ஏ. எம். ஸுபைர்,
உடற்கல்விப் பிரிவு,
இரண்டாம் வருடம்.

உசாத்துணை
" மொடியூல் - தேசிய கல்வி நிறுவகம்
" இஸ்லாம் தந்த மனித உரிமைகள்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாத உள்ளங்கள் (சிறுகதை)

ஊரெங்கும் மகிழ்ச்சிப் பூக்களின் சிதறல்கள், வீடெங்கும் சந்தோஷப் பன்னீர்த்துளிகள், பார்க்கும் முகங்களில் எல்லாம் பரவசம், காற்றுக் கூட குதூகலித்து கை தட்டியது மரம், செடி, கொடிகளும் மகிழ்ச்சியால் துள்ளியது. முஸ்லிம் மக்களின் முகங்களில் எல்லாம் ஆனந்தக் கலவைப் பூச்சுக்கள் எல்லா இடங்களிலும் மீலாத் விழாவினைக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆமாம் இன்று மீலாத் தினம் : அண்ணலாம் பெருமகன் நபிகள் இந்த நானிலத்தில் உதித்த நாள் மனித குலத்தின் மீட்சிக்கு முளையூன்றப்பட்ட நாள்வ; மக்கள் எல்லாம் மனக்கவலை மறந்தார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரையில் இந்நாள் பொன் எழுத்துக்களால் பதிக்கப்பட வேண்டிய நாள். ஆமாம் மீலாத் தினம் ஒன்று என்னுள் ஏற்படுத்திய பிரதிபலிப்பு இன்றும் மனதுள் சுடராய் ........

எனக்கு உயிர்பிச்சை கிடைக்கப் பெற்ற அந்த நன்நாள் இன்றும் என் மனதில் நிரந்தரமாய், அடிமனதில் ஆழமாகப் பதிந்து விட்டது.

அப்போது எனக்கு ஆசிரியத் தொழிலினை இன் முகத்துடன் ஏற்றுக் கொண்ட புதிது. வவுனியாவிலுள்ள ஒரு நகரப்பாடசாலை எனக்கு கிடைத்தது. புதிய சூழல். கன்னி முயற்சி எங்கும் பரபரப்பு ....... என்னுள் இனம் புரியாத அச்சம் ....... இவ்வேளையில் தான் ரஸ்னா எனக்கு நண்பியானாள். அவளும் என்னைப் போல் வவுனியாவுக்கு புதிது. நானும் அவளும் வாடகைக்கு ஒரே அறையில் தங்கி பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தோம். எங்களுக்குள் எந்த வேறுபாடும் இருக்கவில்லை. நான் தமிழச்சி அவள் முஸ்லிம் பெண் என்பதைத் தவிர. ஒன்றாகச் சமைத்து, ஒன்றாக உண்டு ஒன்றாகப் புறப்படுவோம். எந்தவொரு சிறு பிரச்சினை ஏற்பட்டாலும் அது எங்களின் நட்பைப் பாதிக்கவில்லை. தமிழ், முஸ்லிம், என்ற பேதம் எங்களுக்குள் எழுந்தே இல்லை. நாட்டின் பிற பகுதிகளில் நடந்த பிற மோதல்கள் கூட எங்களுக்குள் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. அவளது தொழுகை நேரங்களில் நான் மௌனமாகத் தியானிப்பதும், எனது பூஜை நேரங்களில் அவள் எனக்கு உதவுவதும் சர்வ சாதாரணமானவை. எங்களின் அன்பும் நட்பும் களங்கமில்லாதவை.

"கயல் நீ நாளைக்கு சதுர்த்தி விரதமல்லோ? இண்டைக்கு மரக்கறி வாங்க வேணும்"

"ஓம் ரஸ்னா நான் மறந்தே போனேன்"

"இண்டைக்கு வாப்பாகிட்ட இருந்து லெட்டர் வந்தது"

"என்னவாம் விஷேஷம்?"

"எல்லாம் பழைய பல்லவி தான் நைன்றி செவன் ஜனவரியில மச்சானுக்கும் எனக்கும் கல்யாணமாம்"

"நல்ல விஷயம். ஓம் என்று எழுதிப்போடு"

"ஏய் பைத்தியமா உனக்கு? என்னப் பற்றி தெரிஞ்சும் இப்படிச் சொல்லுகிறாய்"

"ரஸ்னா இங்க பார். உன்ர சேவை, உன்ர இலட்சியம் எல்லாம் உன்ர சமூகத்தைப் பொறுத்தவரைக்கும் அவசியமானதுதான் ராசாத்தி, மரி பண்ணிட்டா ரீச் பண்ண ஏலாதா? புருஷண்ட ஒத்துழைப்பு இருந்தா செய்யலாம் தானே? அதனால நீ சந்தோஷமான வாழ்க்கைக்கு சம்மதிக்கிறது தான் நல்லது என்று நான் நினைக்கிறன்"

"கயல் பணம் இருக்கலாம். இதனால் ஆன்ம திருப்தி வருமா? என்ர திருப்திக்காக ஒரு கடமையாக நான் சேவை செய்யக் கூடாதா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செய். தாராளமா. நீ உன்ர வீட்டில் மூத்த பெண். அண்ணாவும் தங்கச்சியும் இருக்கிறாங்க. உன்ர வாப்பா உம்மாட ஆசையை நிறைவேத்துறதும் உன்ர கடமை .எந்தக் கடமை முக்கியம்? நீயே தீர்மானிச்சுக் கொள்"

"கிழிஞ்சுது போ உன் கூட கதைச்சு வெல்ல ஏலாது. சரி ஓம் என்றே எழுதிப் போடுறேன்.

"தாங்யூடா"

சந்தோஷமாய் ஒருவரையொருவர் கட்டிக் கொண்டு விழிகளில் நீர் கசிந்த நாள் மறக்க முடியாதது. இப்படியான எத்தனையோ நாட்களின் நிகழ்வுகள்; தூங்காமல் பாதி ராத்திரி வரை கதைத்துக் களைத்த இரவுகள்; ஒருவரை ஒருவர் கிண்டல் பண்ணி கதைத்த ரசித்த நேரங்கள்; இனிமையான இந்த நாட்களின் தொடர்ச்சியில் தான்..... அந்த நிகழ்வு நாள்......

நானும் ரஸ்னாவும் மளிகைச் சாமான்களுடன் சுவாரசியமாக கதைத்துக் கொண்டு வீதியைக் கடக்க முற்பட்ட வேளை தான் அந்த விபரீதம் நடந்தது. ஒரு லொறி என் மீது மோதியது மாத்திரமே எனக்குத் தெரியும். சுய நினைவுக்கு வந்த போது முதலில் என் கண்ணில் பட்டது ரஸ்னா தான். அழுது சிவந்த அவளது கண்களையும் எனது உடம்பெல்லாம் போடப்பட்டிருந்த கட்டுக்களையும் கொண்டு என்ன நடந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டேன். எனக்கு நினைவு திரும்பியதை அறிந்து டொக்டர் வந்தார். சோதித்துப் பார்த்தார்.

"எப்படி இருக்கு டொக்டர்?"

"இப்ப எல்லாம் நோமல் மிஸ் ரஸ்னா. சந்தோஷம் தானே?"

"ஓம் டொக்டர். எப்ப வீட்டுக்கு கூட்டிப் போகலாம்?"

"என்ன அவசரம்? அது தான் இரத்தத்தால கூட கலந்தாச்சே! ஆறுதலா நல்ல சுகம் வந்த பிறகு கூட்டிப் போகலாம்"

நான் திடுக்கிட்டுப் போனேன். 'இரத்தத்தாலே கலந்தாச்சு என்றால்?.......

"டொக்டர் நீங்க என்ன சொல்றீங்க?"

"அது வந்து....... கயல்விழி நீங்க ......"

"வேண்டாம் டொக்டர்" ரஸ்னா தடுத்தாள்.

"இல்லை ரஸ்னா எப்பவோ அறியத்தானே போறா. இப்பவே அறியட்டும். கயல்விழி இந்த அக்ஸிடெண்ட்ல நீங்க அளவுக்கதிகமா இரத்தத்த இழந்துட்டீங்க. உடனே இரத்தம் ஏத்த வேண்டிய நிலமை. உங்கட குருப் ரத்தம் எங்களிட்ட இல்ல. ரஸ்னா தன்ர ரத்தத்த ரெஸ்ற் பண்ணச் சொன்னா. ஆச்சரியம் என்னெண்டால் நீங்கரெண்டு பேரும் ஒரே குருப் விளைவு உங்கட உடம்பில ஓடிக் கொண்டிருக்கிறது ரஸ்னாவோட இரத்தம்"

டொக்டர் சொல்லச் சொல்ல என் இதயம் கண்ணீரை வடித்தது.

"உங்கட நட்புக்கு என்னோட வாழ்த்துக்கள்"

"நன்றி டொக்டர்"

"ரஸ்னா...... ரஸ்னா........" எனக்கு வார்த்தைகள் வரவில்லை. என் கண்ணீரே நன்றிகளின் காணிக்கையானது.

"அழாதே கயல். எல்லா நன்றியும் அந்த வல்லவன் இறைவனுக்குத் தான்"

"ரஸ்னா எனக்கு உயிர் கொடுத்த உன்ன காலம் பூரா என்ர இதயத்துக்குள்ள வச்சுப் பூஜிப்பேனம்மா"

கண்ணீரை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"என்ன கயல் பெரிய பெரிய வார்த்தை எல்லாம்" என் கண்ணைத் துடைத்து இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட செய்யாட்டி நம்ம நட்புக்கே அர்த்தமிருக்காது. இனிமே நீ அழக் கூடாது"

என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டவள் என் மனதில் இமயமாய் உயர்ந்தாள்.

"ரஸ்னா இண்டைக்கு என்ன திகதி?"

சொன்னாள்.

"ஐயோ இண்டைக்கு மீலாத் விழா வல்லோ? ஸ்கூல் புரோகிரோமுக்கு என்னால, நீ போக முடியல்லெ வருத்தப்படுகிறேன். "என்னடி இது, இந்த மீலாத் விழாவின்ட உண்மையான நாற்பரியமாகத் தானே நானும உதவி செய்றன்."

நான் கொஸ்பிற்றலில் இருந்த நாட்களில் ரஸ்னா பட்ட துயரங்கள் கொஞ்சமல்ல. என்னைத் தூங்க விட்டு இரவு பகலாக அவள் விழித்திருந்து சேலைன் வயர் அசையாமல் பிடித்துக் கொண்டு நின்றது; என்னைத் தாங்கி உணவூட்டியது; ஆடைகள் தோய்த்து, குளிப்பாட்டி, என்னை ஒரு குழந்தை போல் கவனித்தது; அவள் ஒரு தாதியாய்... தாயாய்... சேவகியாய்..... தோழியாய்......அவள் என்னுடன் உழன்ற அந்த நாட்களின் ஒரு நிமிடத்தில்தான் அவளின் வாப்பாவிடமிருந்து கடிதம் வந்தது ரஸ்னாவின் அண்ணாவை காருடன் அனுப்புவதாகவும் உடனே புறப்பட்டு வரும்படியும் எழுதப்பட்டிருந்தது.

"என்னால முடியாது கயல். உன்ன இந்த நிலமையில விட்டுப்போக மனசு வரல்லம்மா"

"ரஸ்னா உன்ர கயல் சொன்னா கேப்பாய் தானே! இப்ப உன்ர அண்ணாவே நேரில வாறார். மறுக்காதே! இப்ப எனக்கு நல்ல சுகம். என்னைப் பற்றி யோசிக்காம வெளிக்கிடு. நீ போகாட்டி உங்கட வீட்டில கோவிப்பாங்க அங்க என்னமோ தெரியாது"

என்னை விட்டுப் பிரிய மனமின்றி கலங்கி, ஆயிரம் அறிவுரை சொல்லி அவள் அண்ணாவுடன் புறப்பட்டுப் போனாள். ரஸ்னா இல்லாமல் எனக்கு எல்லாமே வெறுமையாகிப் போயிற்று. அவளை எதிர்பார்த்துக் காத்திருந்தேன். இரண்டு வாரங்களாகியும் ரஸ்னா வரவேயில்லை. ஒரு கடிதம் கூடப் போடவில்லை. ஏன்? ஏமாற்றத்தை என்னால்ங தாங்க முடியவில்லை. ரஸ்னாவுக்கு என்ன நடந்து விட்டது? அவளுக்காக காத்துக் கொண்டு அவளையே நினைத்ளதுக் கொண்டிருந்த போது தான் அந்த செய்தி விஷமாய் வந்தது. ரஸ்னாவின் ஊரில் பிரச்சினை எல்லோரும் ஊரை விட்டு வெளியேறிவிட்டார்கள்.'

"ரஸ்னா நீ எங்கே இருக்கிறாய்? எப்படி இருக்கிறாய்? திசை மாறிவிட்ட நாம் மீண்டும் சந்திக்க வாயப்பே இல்லையா? இறைவா என் ரஸ்னாவைச் சந்திக்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்க மாட்டாயா?

"ரஸ்னா நீ எங்கிருந்தாலும் உன் மனம் போல நலமாக வாழ வேண்டும். இது தான் உன் நண்பியின் இதய பிரார்த்தனைகள்" "நாங்கள் பிரிந்து விட்டோம். ஆனால் உள்ளங்கள் இறுக்கமாகப் பிணைந்து விட்டன. ஒன்று மட்டும் உறுதியான உண்மை இன்று இந்த மீலாத் நாளில் ரஸ்னாவும் என்னை நினைத்துக் கொண்டிருப்பாள்"

(யாவும் கற்பனை)

**மட்டுநகர்.வி.கயல்விழி,**
ஆரம்பப்பிரிவு,
இரண்டாம் வருடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபியின் பாதையில் சில வரிகள் ;

மறைகள் போற்ற வந்த
அல்லாவின் தூதராம்
நபி நாயகம் (ஸல்) க்கு
பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்
சொல்லி
துவங்குகின்றேன் !

அவனியில் தோன்றிய
மாந்தர்களுள்
ஆமினா மடியில் கருவுற்ற
இறை தூதர் நபியின்
சீர்படுத்திய சிந்தனைகள்
தரணியில் நிலைத்திட
அவரின் பாதை சீரானதே......!

அப்துல்லா அறியாத
குழந்தையாக நின்ற போது
முகம்மது .....!
உலகுக்கு சிந்தனை
வழங்கும் போது
நபி நாயகம் (ஸல்) .....!

ஐந்து வேளை
தொழுவது கடமை !
கருமம் செய்து
உண்பது கடமை !
களையை இடையில்
களைவது கடமை !
கண்ணியமாக
வாழ்வது கடமை !
கட்டாயம் ஜனாஸா
செல்வது பெருமை !

நன்மை வளர்க்கும்
வழிகள் பலனை
செப்பிய நபியின்
படிகளை வளர்ப்பது
மாந்தரின் பெருமை !

நாற்பதில்
இறை மறை ஏற்று
மக்காவில்
பணி செய்து
ஹிஜ்ரத்தாம்
பயணம்
மதீனா சென்று
உருவாக்கிய
சமுதாய அமைப்பின்
தலைவர் !

அந்த
அண்ணல் நபி
இறை தூதர்க்கு
என் காணிக்கை .....!

செல்வன் ரி. தயாபரன்
விஞ்ஞானப் பிரிவு
2ம் வருடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணலே வாழ்த்துகின்றேன்.

அண்ணல் நபியின்
பிறப்புரைக்கும்
இனிதான "மீலாத்தே" .....!
ஆண்டிலொரு முறை
பவனி வருகின்ற
அழகுறும் நாளே .....!
இந்நாளில் என்ஆக்கம்
இயைந்து நான் அலங்கரிக்க
இவ்வுலகில் நானும் என்ன
தவம் செய்தேனோ? !

கருணை ஒளிவீசக்
காசினியில் துயர்மாய
நாடு நலமாக - எங்கும்
நன்மைகளே உருவாக
பூமிதனில் அமைதி மீண்டும்
சிறந்தோங்க
அச்சமின்றி நாம் வாழ
சாதி பேதமது தனைமறந்து
சந்தோஷம் தலைதூக்க
எதிர் நோக்கும்
"மீலாத்தில்"
இறைவனையாம்
வேண்டிடுவோம் !

கன்னியரைத் துன்புறுத்தும்
துயர்க் களையை நீக்கி
குலக் கொடியர் துயரறுத்து
கன்னியரின் சிறப்பிற்கு
சீர்திருத்தம் தனையமைத்து

கண்ணான வாழ்வினையே
காசினிக்கு அளித்த
எங்கள் கருணை
நபியவர்க்கு
காணிக்கைகள் பற்பலவே........!
ஆறாக் துயரதனை
ஆண்டாண்டாய் அனுபவித்து
கணவனாயுள் முடிகையிலே
கன்னி உடன் கட்டையேறும்
மூடர்கள் கொடுமையினை
முற்றாக மறுதலித்து
மாணிக்க வாழ்வதனை
மண்ணுலகில் பெண்களுக்கு
மாற்றியமைத்திட்ட
"மா நபியின்
பிறந்த நாளில்"
மனங் கலந்த நன்றிகளே ....!

ஆடவர்க்குச் சமமாக
அன்னையர்க்கும்
திருமறையின்
வழி ஏற்று
மாதர் துயரறுத்து
மறுவாழ்வை ஏற்றிட்ட
மாதவனின் பிறப்புரைக்கும்
மகிழ்ச்சியான மீலாத்தே
மங்கை துயர் நீக்கி
நல் வாழ்வைப் பரிசளித்த
அண்ணலே இந்நாளில்
உங்களை நான்
வாழ்த்துகின்றேன் !

செல்வி . சுகந்தினி வடிவேல்,
ஆரம்பப் பிரிவு,
1ம் வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ආලෝකය. . . . .

අන්දකාරේ ගිලුන
ලොව මුදා මෙත් සිතින්
ලොව එළිය කළෙ ඔබයි.
අල්ලාගේ වචනයෙන්. . . .

"මක්කමේ" ජනිත වී
අනාථව අසරණව,
ගෙවූ ඒ ළමා විය
රුදුරු මුත් සිත දැඩිය . . .

උතුම් ගති ප්‍රකට විය
කුඩා අවදියෙ පටන්
පහළ වුණි ජීවිතෙන්
"පෙරළියක" පෙර නිමිති . . .

දෙවි උතුම් අල්ලාගෙ
වචන පිළි ගෙන මෙතින්
වයස සතළිස් වියේ
"පිහාදය" ඇරඹුවා
රිසින් මුදනා ලොවම . . .

කැට කැබලි ගල් මුගුරු
රුදු වචන එල්ල විය,
මිනිස් රකුසන් වෙතින්
සොලවමින් ගත රුධිර . . .

මෙත් සිතින් සැම දරා
අදිටනින් "සාමයේ"

කළේ ඔබ දේශනා
සෙත පිණිස ලෝසතට . . .

සත්‍යයේ දොරටු හැම
විවර වී විකසිතව,
සත්‍ය වූ ඔබෙ දෙසුම්
මිනිස් හද වැළඳ ගති . . .

මියෙන නෙක් ජීවිතේ
කතාවෙන් ක්‍රියාවෙන්
ප්‍රකට විය කී කරුණු . . .

සැම ආගම් සමග
ජාති කුල නොසලකා
එක්ව දිවි ගෙන යන්න
කියා දුන්නේ ඔබයි. . . .

මිනිස් බව අගයමින්
භේද දුරලා සැම
මිනිස් යහපත සැදූ
ඔබයි ලොව පහළ වූ
අවසාන "නබි තුමා" . . .

උතුම් වූ නබි තුමන්
දෙසූ ඒ දහම් කඳ
අනුව අපි සැවොම ඉමු,
"එකට ඔත් අය ලෙසින්"
සාමදානෙන් තුටින්

එම්. ඒ. පී. එම්. මංචනායක,
පළමු වසර (සිංහල අංශය),
අධ්‍යාපන විද්‍යාපීඨය,
වවුනියාව.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாஹ் ! நான் கேட்கின்றேன்.....!

எல்லாம் வல்ல
எங்கள் அல்லாஹ்....!
நபி பிறந்த
மாதமதில்
நீண்டதொரு
தேவையினை
உன்னிடம் கேட்கின்றேன்;
மடலாக நான் வரைந்து
என் உள்ளத்தில் .....!
இன்றைய தேவைகள்
இங்கே அணிவகுக்கப் போகின்றன!
நீ தான்
நிறைவேற்ற வேண்டும்,
இவையாவும்
எனது தேவைகள் மட்டுமன்றி
எம்மவரின் தேவைகளும் கூட;
எம் நாட்டினில் அமைதி வர வேண்டும்;
ஆயுத முனையினில்
சிக்குண்டு
சிறகடிக்க முடியாதிருக்கும்
வெண்புறா சிறையுடைத்து
வெளியே வரவேண்டும்;
ஆயுதங்களல்ல - இங்கு
ஆட்களே பேச வேண்டும்;
அடிபிடிகளல்ல - இங்கு
அன்பே தழைக்க வேண்டும்;
எம்மக்கள் நிலை மாற வேண்டும்;
எல்லோரும் சகோதரராய் வாழ வேண்டும்;

எம்நாட்டினில் !
சமத்துவம் வரவேண்டும்;
சாதிப்பாகுபாடுகளும்
வேலிப் பிரிவினையும்
வேரோடொழிய வேண்டும்;
இன, மத பேதங்கள்
இல்லாதொழிய வேண்டும்;
அல்லலுறும்
அகதி வாழ்க்கை
அடியோடொழிய வேண்டும்;
அல்லாஹ்வே .....!
உனது
நியாயத் தீர்ப்புநாளில்
நீசப்பாவி நான்
அண்ணலுடன்
அருகிலிருக்க வேண்டும்;
சைத்தானின் வலையில் - நான்
வீழ்ந்து விடாமல்
விலக்கி என்னைக் காக்க வேண்டும்;
நபிகளின் வழியில்
நானும் செல்ல
நல்வரங்கள் அருள வேண்டும்;
எல்லாம் வல்ல
எங்கள் அல்லாஹ்வே .....!
என்னெண்ணத் தேவைகள் இவை தான் !
பதிலிற்காய்
பார்த்திருக்கும் இவன்
பாவ இருளில்
பரிதவிக்கும் மனிதன்!

- போல் -
உடற்கல்வி பிரிவு
2ம் வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இதயம் கனிந்த
மீலாத் வாழ்த்துக்கள்.

★
★★★★
★

*New* Best Selection

**204. BAZAAR STREET**

**VAVUNIYA**

உத்தம நபியின்
உதய விழா
உன்னதமாய் அமைய
எமது வாழ்த்துக்கள்

**Shihan Palace**

No. 03. BUS STAND COMPLEX

**VAVUNIYA**

" உங்களுக்கும் பொய் சாட்சி கூறுவதற்கும் நான் எச்சரிக்கை செய்கின்றேன்."

நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தம நபியின்

உதய தினத்தை

உளமாற வாழ்த்துகிறோம்.

# SWISS TEX

**No. 165 Bazaar Street**

VAVUNIYA.



எமது மீலாத்

நல்வாழ்த்துக்கள்.

# *Lovely Tex*

**138 BAZAAR STREET**

**VAVUNIYA.**


" தம் அயலார் பசித்திருக்க தம் வயிற்றை நிரப்புவோர் உண்மை விசுவாசியல்லர். "

நபி (ஸல்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழிக்கு நபி பெருமானார் .....!

நிலவது தூங்கினால்
துக்கமென்று - நிலமது
விழித்திட உதித்திட்டார்
நபி பெருமானார், !

கர்ப்பத்தில் தந்தையை
இழந்தும் பின் - ஆறாவதில்
தாயைய் ம் வாலிபத்தில்
நயக்கப்பட்டார் !

வானம் இருண்டது
பூமி கறுத்தது - மனிதன்
அழிந்திட்ட வேளையில்
உதித்திட்டார் !

இருபத்தைந்தில் இனிய மணமும்
நாற்பது வயதில் - நானிலம்
போற்றும் நல்லவரும் !
நல்மறை ஏற்றவரும்!

இஸ்லாத்தின் வாழ்வுக்காய்
துன்பத்தை இன்பமென்று - அவர்
வைத்த பாத சுவடுகளில்
நாமெல்லாம் நகருவோம் .....!

**சி.சசிகரன்**
ஆரம்பப் பிரிவு,
2ம் வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளல் நபியே.....!

## ஏற்றிப்பாடுகின்றேன்.

நீதியது காத்திடவே
தரணியிலே வந்து தித்தார் !
வளமாக வாழ்ந்திடவே
வழி பலவும் சொன்னார் !

அதர்ம இருள் போக்கிடவே
கதிரவனாய் நின்றார் !
நல்லவரைக் காத்திடவே
இன்னல் பல கொண்டார் !

ஏழைகளும் வாழ்ந்திடவே
ஊனு றக்கம் து றந்தார் !
தரணியது வாழ்ந்திடவே
மார்க்க வழி போதித்தார் !

திசையது மாறியோரையும்
திருத்தியே தந்திட்டார் !
தினம் தினம் மகிழ்ந்திடவே
நல்லறிவுரை சொன்னார் !

மனம் பலம் பெற்றிடவே
மருந்தொன்று தந்திட்டார் !
மனிதருள் மாணிக்கமாகிடவே
தன்னையே அர்பணித்திட்டார் !

அல்லாஹ்வுடைய பாதையினை
தெளிவு படுத்திட்டார் !
உண்மையது உணர்ந்திடவே
நல்வழி காட்டிட்டார் !

சமூகம் நிமிர்நிதிடவே
மத்து வம் பேணினார் !
வேற்று மையது நீங்கிடவே
ஒற்று மை வழி காட்டினார் !

வறு மையது நீங்கிடவே
போர்முரசு கொட்டினார் !
தீமையது ஒழிந்திடவே
களமும் கண்டார் !

இல்லறத்து நல்லறத்தினையும்
எடுத்து ச் சொன்னார் !
பண்புடன் வாழ்ந்திடவே
தானே இலக்கணமாகினார் !

அண்ணலாரின் பெருமைதனை
மீலாத்தில் காணுகின்றேன் !
வள்ளலாரே ! உங்களின்
அளவிலா கருணையாலே !

மட் / திருவூர் க . பிரபாகரன்,
ஆரம்ப பிரிவு,
முதலாம் வருடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் அன்பு கனிந்த
மீலாத் நல் வாழ்த்துக்கள்.

★
★
★

# Multi Centre

No: 37 BAZAAR STREET

VAVUNIYA



உத்தம நபியின் உதய விழா
உன்னதமாய் அமைய எமது வாழ்த்துக்கள்.

# Shums Palace

372 BAZAAR STREET

VAVUNIYA


*" நீர் மதுவை அருந்தாதீர்! ஏனெனில் எல்லாப் பாவச் செயல்களுக்கும் அது தலையானது "*

நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது உள்ளம் நிறைந்த
மீலாத் வாழ்த்துக்கள்

✲

✲

✲

# New Central Hardwares

**No. 158 BAZAAR STREET**
**VAVUNIYA**

மீலாத் விழா சிறப்பாக அமைய
வாழ்த்துக்கள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# Haji. S.K.KAPPALAR & SONS

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

No. 188. BAZAAR STREET

VAVUNIYA.

" ஒரு தந்தை, தம் தனயனுக்கு நல்லொழுக்கப் பயிற்சி அளிப்பதை விட மிகச்சிறந்ததொரு பெறுமானத்தை அவர் அளிப்பதற்கில்லை"
நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vote Of Thanks

- We have to express our grabitute to our President Mr.S. Alagaratnam for having participated, Contributed Message of greeting to the Magazine, and gave all necessary assistance tothe function to be celebrated on grand scale
- We express our whole hearted greetings to the deputy Minister of Science, technology and human development of M.P. AL.HAJ : S.S Abubakker for Vanni district to gave the Message of Greetings to our magazine.
- Inspite of all inciureances, for printing this magazine our lecturer co-ordinator Mr.K.Bernard has taken the instiative to get this work done satisfactory. We are very much thankful him also.
- We also wish to the patron of our college Mojlisul Islam Janab S. Shahabdeen for giving us all necessary guidence and encouragements when ever its required.
- We also wish to thankful To our college register and our lecturers for making this festival success.
- Also wish tp thank to the non members of the Majlizul Islam by contributing their shares, supplying with constructive contribution.
- We also wish to thankful to our trainee student Mr. B.Suntharalngan for having drawn coverillustration. and we also wish to thank our 1st year Student Mr.J. Jeevanandasiri for preparing a monogram for the magazine.
- We thank to Janab N.P.Abdul Rahuman, Janab J.A.Rauff Moulavi Sulaiman lebbe for doing the translation work and other needs.
- We will be failing in our duty, If Mr.A.Hareem who is responsible for currying out the necessary out side outside activities, we are thankful to him also
- We thank to the academic and non Academic staff for contributing their shares for the publication of the magazine and other activities
- We wish to thank to the printer sarasu Printers
- Who have releasd this magazine in a very short time.

Majlisul islam,
College of Education,
Vavuniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இதயம் கனிந்த மீலாத்

நல் வாழ்த்து க்கள்

*
*
*

# NEW MUSINAS

## 104, BAZAAR STREET

VAVUNIYA

---

மீலாத் விழா சிறப்பாய் அமைய

எமது வாழ்த்துக்கள்.

# P. S. M. ASHRAFF & CO

29, 30 MUHANDIRAM ROAD

**VAVUNIYA**

Telephone: 024 - 2383

---

“கல்விக்கு ஆபத்து மறதியாகும்.தகுதியற்றவரிடம அதனைக் கொண்டு உரையாடுவது அதை ஈனப்படுத்துவதாகும்.”

நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இதயம் கனிந்த
மீலாத் வாழ்த்துக்கள்.

# Rifas Bake House

Poonthottam Junction

**vavuniya.**

எமது இதயம் கனிந்த
மீலாத் வாழ்த்துக்கள்

# R.D.S

PATTANICHIPULIYANKULAM

**VAVUNIYA.**

" உண்மை விசுவாசமுள்ள ஒருவரை மனநோக வைப்பவன் அல்லது அரை வஞ்சிப்பவன் சாபத்துக்குள்ளாகின்றான்."

நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீலாத் விழா சிறப்பாய் அமைய
வாழ்த்துக்கள்

AL.HAJ. S.K.KADER.

# MASTHAN TRADERS

No-03 HOROWAPOTHANA ROAD

VAVUNIYA.


Sarasu , Colombo T.P 590462

" உங்களுக்கும் பொறாமைக்கும் நான் எச்சரிக்கை செய்கிறேன். ஏனெனில் நெருப்பு விறகைத் தின்று விடுவது போல நிச்சயமாக, பொறாமை நன்மைகளைத் தின்றுவிடும்."
நபி (ஸல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org